மன்மத ௵ மாசி மீ 1—3—56 அணா ஒன்று.

# ஜகன் மோகினி

# வை. மு. ஸ்ரீ. நினைவு மலர்

33-வது மலர். இதழ் 3.

15



பிறந்தது: 2—9—1917

மறைந்தது: 5—2—1956

15/2.56
OFFICE OF THE REGISTRAR
JL
N56.33.3.
183200

ஆசிரியை: வை.மு.கோதைநாயகி அம்மாள்



# ஜகன்மோகினி

ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு. —திருவள்ளுவர்
ஜகன்மோகினியென்னுஞ் சஞ்சிகையைக் காக்க
ஜகன்மோகினி! மனத்தைச் சார்ந்து.
—வீரராகவ கவி



மார்ச் 1956. மலர் 33, இதழ் 3. மன்மத ௵ மாசி

பொருளடக்கம்

அம்ருதஸரஸும் அப்புறமும் (i)
V. K. பார்த்தஸாரதி [ஐயங்கார்
மரணதண்டனை அவசியமா (viii)
S. ராஜகோபாலன் M.A.B.L.
அன்புள்ளதம்பியைப்பிரிந்த அண்ணாவின் அழுகை
ஸ்ரீ. உ. வே. ப்ர. அண்ணங் [காராசாரியர் —1
உத்தமரின் மறைவு
காரப்பங்காடு ஸ்ரீ. உ. வே வெங்கடாசாரியர் —5
கீர்த்தி மூர்த்தி
திருக்கண்ணபுரம் பண்டித ரத்னம்S.ஸ்ரீநிவாஸய்யங்கார்5
ரத்னத்தை இழந்தோம்
ஸ்ரீ. T. S. ராஜகோபாலன் [B. A. L. T.—6
என்றும் மறையாத உத்தம ஒளி
ஸ்ரீமதி காயனபடுகீர்த்தனபடு C. ஸரஸ்வதிபாய் 7
வை.மு.ஸ்ரீநிவாஸன் பக்தன், கலைஞன்
ஸ்ரீ K S. ராமஸ்வாமி ஸாஸ் [திரியார்—9
அருவத்துடன் கலந்த உருவம்
சகோதரி R. S. சுபலக்ஷ்மி [அம்மாள்—24
ஒரு சிறந்த தொண்டன்
ஸ்ரீமதி குகப்ரியை 25
ஸநாதந தர்ம வழிகாட்டி
ஸ்ரீமான் ம. ர. ஸம்பத் [குமாரன்—27
வை. மு. ஸ்ரீ எங்கே?
V. K. பார்த்தஸாரதி [ஐயங்கார்—29
கோதைநாயகியின் அபிமன்யு
வசுமதி ராமஸ்வாமி 30
உதயசூரியன் வை. மு. ஸ்ரீ-யின் மறைவு
திருவாலி அ. இராமாநுஜா [சாரியார்—33
வை. மு. ஸ்ரீ-யின் அகால மறைவு
M. O. அழகிய சிங்கராசாரி [யார்—35
அந்தோ விண்ணுற்றார்
குரிச்சி வேதாந்தாசாரி—36
நான்வளர்த்த ஞானப்பயிர்
ரா. ஸ்ரீ. தேசிகன் 37
டீ. டீ.
வை.மு. ஸ்ரீயின் முதல் சிறு [கதை—38
குலவிளக்கு
அ.மு. ஸ்ரீநிவாஸாசாரியர் 41
The Flower Fades But The Fragrance Remains
V.S.Chinnasawami Iyengar 42
A Faithful Collaborator
R.Vaidyanatha Iyer B.A.M.L.42
என்னருமைத் தந்தை
வை.மு.விஜயலக்ஷ்மி 43
அநுதாபச் செய்திகள் 44

ஸ்ரீமான் வி. கே. பார்த்தஸாரதி அய்யங்கார், B. A., B. L.

# அம்ருதஸரஸூம்—அப்புறமும்

மாநிலம் வாழ்ந்திட மிளிரும் கதிரவன், மகரம் நீத்துக் கும்பமேறுங்கால், 1956 பிப்ரவரி 11, 12 தேதிகளில், அம்ருதஸரஸில், காங்கிரஸ் மகாசபையின் சஷ்டியப்த பூர்த்தி மகோத்ஸவம் நடந்து, முடிந்து அடங்கிற்று. சமுத்ர மதன காலத்தில், க்ஷீராப்தியில் ஆலகாலமே முதலில் வந்ததுபோல, அம்ருதஸரஸில், 1919-ல் ஜாலியன்வாலாபாத் படுகொலை வந்தது. இந்தப் படுகொலையாம் ஆலகாலத்தை, காந்திஜியாம் மகேசுவரன், கருத்தில்கொண்ட பின்னரே, இந்திய சுதந்திராம்ருதம் வெளிவரலாயிற்று. எனவே, இந்துதேச சரித்திரத்தில், இந்த அம்ருதஸரஸுக்கு, அழியா இடம் திடமே!

1955-ல், ஆவடிப் பாதையில், 'சோஷலிஸ்ட் பாட்டர்ன்' என்ற சமூக யாத்திரை புறப்பட்ட காங்கிரஸ் மாட்டு வண்டி, 1956-ல் அம்ருதஸரஸில் மூழ்கி, 'ஸோஷலிஸ்ட் ஸ்ட்ரக்சர்'—என்ற காங்கிரஸ் கப்பலாகக் கிளம்பிக் கரை சேர்ந்துள்ளது. இன்றைய, நமது சமூக, அரசியல், பொருளாதார வாழ்வுகளெல்லாமும், கடலிடைப்பட்ட கலய நிலையில் தான் உள. ராஜ்ய புனரமைப்பு மசோதா, இந்திய மாகாணங்களில் எழுப்பிய கொந்தளிப்புகளே, அம்ருதஸரஸில் அலைகளாகத் திரண்டு மோதி, கூடினோர் யாவரையும், சாந்தியும் சமர்த்தியுந் தேடவேண்டிய தொல்லையில் இழுத்துத் தள்ளின. ஒரு லக்ஷ அகாலிய சீக்கியரது பாஷா தீ முகாமுக்கும், நாற்பதினாயிரம் பலம் கொண்ட மகா பஞ்சாபி ஹிந்துக்களது மதத் தீ முகாமுக்குமிடையே நிர்மாணிக்கப்பட்ட காங்கிரஸ் பஞ்சுப் பொதி முகாம், சிறிதும் பழுதுபடாது வெளிவந்தது, நமது காங்கிரஸ் தலைவர்களது சமரஸ, சமத்வ சாகஸ சாமர்த்தியத்தை வெளிப்படுத்துகிறது!

### அம்ருதஸரஸில் அமிர்த வர்ஷம்

பாஷைத் தீயும், மதத் தீயும் நம் நாட்டைப் பொசுக்கி அழித்திடாது அணைத்திடவும், அத் தீக்களால் உண்டாக்கப்பட்ட பெரும்புண்கள் ஆறிடவும், நமது நேருஜியவர்கள் அம்ருதஸரஸினின்று, தமது சொல்மாரியாம் அம்ருத வர்ஷத்தை—,

**'ஆழிபோல் மின்னி, வலம்புரிபோல் நின்றதிர்ந்து,**
**தாழாதே சார்ங்க முதைத்த சரமழைபோல்'**—,

உலகோர் வாழ, வாரி வீசி, வழங்கிவிட்டார்.

J—A

### மூன்று பெருங் காரியங்கள்

தலைவர் தேபார் பேச்சுரையில் :—'நமது இந்தியா, ஓர் ஏழையர் நாடே ; இந்த ஏழையர் கண்ணீரைத் துடைத்திடவே காங்கிரஸ்கட்சி, சுதந்திர இந்தியாவில் ஆட்சி பதவி ஏற்றுள்ளது. ஆனல்!....அந்தோ!....நமது சுதந்திர அஸ்திவாரத்தை, மாகாணப் பிளவுபத்தர்களும், பாஷாவெறித்தீயர்களும், அதிர்த்துக் கலகலத்திடப் பெயர்த்து வருகிறார்களே! இப்பித்தந் தெளியச் செய்து, அத் தீயை அடக்கி, நம் நாட்டாரிடைப் பஞ்சத்தனம் போக்கி, ஜீவனோபாய வசதிகள் பெருக்கி, பொருளாதார சமத்வம் சித்தித்திட வழி தேடுவது என்ற மூன்று திடத்த பெரிங் காரியங்களைச் சாதித்திடும் வழிதுறைகளைத் தீர்மானிப்பதுதான் அறுபத்தியோராவது காங்கிரஸ் சபையின் ஆழ்ந்த கவலை' என்று உருகிப் பேசிச் சிறுகச் சிறுகக் கண்ணீர் உதிர்த்தார்; அமிர்தஸரஸ் வற்றிடாது அலைமோதிட.

### பாஷாவெறித் தீ அணையவேண்டும்

அம்ருதஸரஸில், காங்கிரஸார் கடைந்தெடுத்த தேவாம்ருதம், கூடியோர் அனைவரும் ஏகமனதாக நிறைவேற்றிய ஒரே தீர்மானந்தான்! 'ராஜ்யப் புனரமைப்புக் கமிஷன் செய்துள்ள சிபார்சுகள் யாவும், பொதுவில் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டியவைகளே. ஆனல், ஒரே பாஷை மாகாணப்பித்து, நம் நாட்டில் ஒழிக்கப்பட வேண்டும். முடியுமானவரை, இருபாஷை, பல பாஷை மாகாணங்களை, பொதுமக்கள் ஆதரவு கொண்டு அமைந்திடுவதுதான், சமதர்ம சமூக அமைப்பு ஸ்தாபன சன்மார்க்கமாகும். பாஷா வெறித் தீ அடங்கி அணைந்துபோகும்வரை, ஆகவே மாகாணப் புனரமைப்பு சிந்தனையே நம்மிடையே நிலவக்கூடாது. அதுவரை, சமதர்ம சமூக அமைப்புச் சிந்தனைகளிலேயே நாம் ஆழ்ந்திடல் அவசியம். இதற்காக, இரண்டாமைந்தாண்டு திட்டத்தில் கவனம் செலுத்துவோமாக'.

### முஸ்லிம் ஞானியின் சேவை

இத்தீர்மானம் பிரேரேபித்தவர், மௌலானா அப்துல் கலாம் அஸாத் அவர்கள். பதினாறும் நூற்றாண்டு முடிவில், சீக்கியரது புண்ய யாத்ரா தலமாக நிர்மாணிக்கப்பட்ட 'ஹரிமந்திர்' என்ற ஸ்வர்ணலயத்தின் அஸ்திவாரக்கல், அம்ருதஸரஸில், ஒரு பெரும் முஸ்லிம் ஞானியர் ஒருவரால் தான் நாட்டப்பட்டதாம்! ஆகவே, அதே அம்ருதஸரஸில், இந்திய சாந்தி சமூக அமைப்பு அஸ்திவாரக் கல்லை, இந்த முஸ்லிம் பிரமுகர், இன்று நாட்டியது, மிகப் பொருத்தமே.

**அசாத்தின் அசாதாரண காரணம்**

‘அரசியல் பிரச்னைகளை பாஷா வெறிப் பாசங்கள் கொண்டு, கட்டி இறுக்கிக் கசக்கிப் பிழிந்திடுவது பெரும் மதியீனமே. தேசிய ஒளி உணர்ச்சியை, பாஷை, மதம் என்ற குறுகிய மட்பாண்டங்களிலடைத்து மூடி, பாழடையச் செய்வது மகா பாதகம். இதனுல், உணர்ச்சி வேர் அதிர்ச்சியுற்று, அழுகிப் போய்விடாதா? ஒரு பாஷையைப் போற்றி வளர்ப்பதென்பது, இதர பாஷைகளை வெறுத்து அகற்றிடுவதால் ஆகாது. இதர பாஷைகளையெல்லாம் போற்றி வளர்த்தால்தான், நமது பாஷை, தானுகத் திடம் பெற்று ஓங்கி வளரக்கூடும்.’ இதுதான், தீர்மானத்திற்கு ஆதரவு கோரி, அஸாத் கூறிய அசாதாரண காரணமாகும்.

**பந்த்தின் வேண்டுகோள்**

அஸாத் பிரேரேபணையை ஆமோதித்துப் பக்க பலமாகப் பந்த் செய்த எச்சரிக்கை என்னவென்ருல்: ‘கண்களை மூடிக் காதுகளைப் பொத்திக் கொண்டு, நாம், குருட்டுத்தனமாய் இருட்டில் குதிக்கலாகாது. பாஷாவாரிப் புனரமைப்புப் பிரசாரம், சுதந்திர இந்தியாவில், ஒற்றுமை ஒளி ஓங்கிட உதவாததுடன், வேற்றுமைத் தளர்ச்சி இருள் வெகுவாய் மூள்வதற்கே உதவுமென்பது, சமீபத்தில், பம்பாய், பஞ்சாப், அஸ்ஸாம் முதலாகிய மாகாணச் சம்பவங்களிலிருந்து வெட்ட வெளிச்சமாகவில்லையா? நமது விரோதக் கக்ஷியினரது பிரசாரக் கருவியேயல்லவா இந்த பாஷாவாரிப் புனரமைப்புப் பிரசாரம்? பாரஸீக மொகலாய ஆட்சியில், ஹிந்து துளசீதாஸ், தனது ராமாயணத்தை, ஹிந்தி பாஷையிலெழுதிப் பிரபலம் பெறவில்லையா? ஆகவே, மறந்து விடுங்கள் பாஷா வெறியை. கொள்ளுங்கள் இந்திய ஐக்கிய ஒற்றுமையை!—கவனியுங்கள் இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தை.’

**சக்கரைப் பந்தலில் நேருவின் தேன்மாரி**

தேபார் மேற்பார்வையில், அஸாத்தும், பந்த்தும் கட்டிய இந்தச் சர்க்கரைப் பந்தலில், நேரு பொழிந்த தேன் மாரியைப் பாருங்கள். ‘இன்னமும் பத்து வருஷ காலம், பாஷைப் பிரச்னைகளை, எடுக்காது மூட்டை கட்டி மூலையில் வைத்தே ஆகவேண்டும். ஹிமாசல முதல் கன்யாகுமாரிவரையிலும், காஷ்மீர் முதல் வங்காள அஸ்ஸாம் வரையிலும், இந்தியப் பொதுக் கலாச்சாரப் பண்பாடு ஒற்றுமை ஒன்றே ஓங்கிட, நாம் இனிக் கவனம் கொண்டு கண்யமாய் உழைத்தல் வேண்டும்’.

ஆகவே, அறுபத்தியோராவது காங்கிரஸ், 'ராஜ்ய புனரமைப்பு' பிரச்னையையே அடிப்படையாகக் கொண்டு, இந்தியரது ராஜீய, தேசீய, பொருளாதாரச் சமூகப் பிரச்னைகள் யாவற்றையும் ஒருங்கு திரட்டிய ஐக்ய இந்திய நோக்கமேயான 'ராஜ்யப் புனரமைப்பு ஒதுக்கி வைத்தல்' தீர்மானத்தை, எவ்வித எதிர்வாக்குமில்லா ஏகமனத்தின தாய் இனிது நிறைவேற்றி முடித்தது!

### சம்ஸ்கிருதமே பிதுரார்ஜித மூலதனம்

பாஷா வெறித் தீ சுடுவதால் உண்டாக்கக் கூடிய புண்ணுக்குப் பயந்த தேசீயத் தலைவர்கள், நாவினால் சுட்டு உண்டாக்கக் கூடிய வடுக்களுக்குப் பயப்படாது பேசிய காலத்தில், அவர்களையுமறியாதது போன்ற சில சத்ய வாக்குகள் வெளிவந்ததுதான், அம்ருதஸரஸினின்றும் வெளி வீசி வந்த உண்மை அம்ருதத் திவலைகள்! 'பாரத வர்ஷத்தில், ஸம்ஸ்கிருதமே இந்தியரது, புராதன, என்று மழியா இன்றும் உயர்ந்திருக்கும் உத்தம பிதிரார்ஜித மூல தனம்! எல்லா அறிவுக்கும், ஞானத்திற்கும், கலைப்பண்பு களுக்கும் அடிப்படை ஆராய்ச்சி ஊற்று! இதர பாஷை களவ்வளவும் இந்த சம்ஸ்கிருத ஆதித்தாயின், இரட்டைச் சகோதரிகளே. இந்த சம்ஸ்கிருதத்தை இனி வளர்த்து வருவதாலேயே நமது இந்தியாவில், சுதேச பாஷை பக்தி யும், பிரதேச பாஷைச் சிரத்தையும், தேசீய பாஷானுஷ் டான மதிப்பும், தானாக ஓங்கி, சமதர்ம சமூக ஸ்தாபன மாக, ஐக்ய இந்திய ஒற்றுமை ஏற்படும்'!

### ஐக்கிய இந்திய நோக்கமே நமது குறிக்கோள்

இந்த உள்ளுணர்ச்சி வெளிப் பொங்கிய வேகத்தில், ஆதிச் சுதந்திரத்தேட்ட வேகத்தில், சுதேச பாஷாவெறி வெளிவந்த காரணமும் விவரிக்கப்பட்டது. ஆங்கில ஆட்சி ஓங்குகின்ற அக்காலத்தில், ஆங்கிலம் படித்த சிறு பான்மை இந்தியரையும், எவ்வித படிப்பு வாசனையுமே இல்லாத பெருவாரிப் பொதுமக்களையும் ஒன்று கூட்டித் தேசீய சுதந்திரப் போராட்டத்தில், பெருஞ்சேனை வீரர் களாகத் திரட்டவேண்டிய அவசியமேற்பட, அவரவரது சுய பாஷாபிமானத்தையும், பிரதேச பாஷாபிமானத்தை யும் ஊட்டிப் பெருக்கி, ஆங்கில பாஷாபிமானம் அகற்றி டும் பெரும் பிரசாரம் அவசியமாயிருந்தது. ஆனால், சுதந் திரம் பெற்று, நம்மை நாமே ஆண்டிடும் இன்று, இந் தியரைப் பிரித்து வைத்திடும் பாஷா வேற்றுமைப் பிர சாரம் வேண்டியதேயில்லை. இனி, இது, தற்கொலைப் பிரசாரமேயாகும். பல்வேறு பாஷையாளரையும் ஒன்று சேர்க்கும் பொதுக் கலைப் பண்பாடு பெருக்கும் ஐக்ய

இந்திய நோக்கமே இனி நமது குறிக்கோளாயிருத்தல் அவசியம். ஆகவே, பாஷாவாரி மாகாணப் புனரமைப்பு சிந்தனே, இனிக் கைவிடப்பட வேண்டியதே'.

இவ்வளவு தெளிவான உபதேச மொழிகளைத் நேபார் தலைமையில், அஸாத், பந்த், நேருவாகிய மும்மூர்த்திகள் மூலமாய்க் கேட்டு வெளியேறிய காங்கிரஸ் தொண்டர்களுக்குண்டான ஞானேதய விளைவுகளும், இதனல்; அம்ருதஸரஸூக்கப்புறமுண்டாக இருக்கும் ராஜீய விளைவுகளுந்தான் இனிக் கவனித்தற்பாலது.

**மத்திய சர்க்கார் உபதேசம்**

பழையன கழித்தலும், புதியன தேடுதலுமே நமது நன்மைக்கானதெனப் பேசிப்பேசிப் போவதால், இன்று காணப்படும் கண்ணராவிக் காட்சிகள் எதுவும் எள்ளளவும் குறையும் வகை வராது. இனிய பேச்சுக்களால் மட்டும் இந்திய ஒற்றுமை ஏற்பட்டுவிடாது. பாஷாவெறிப் போராட்டம், சாந்தி நிலவும் சமதர்ம சமூக அமைப்புப் போராட்டத்தில் போய் நிற்கிறது அம்ருதஸரஸுக்கு அப்புறம்! 'நேஷனலிஸேஷன்' கூச்சல் அதிகார வர்க்கத்தினரிடை ஓங்கி வளர்கிறது! 'இதென்ன அநியாயம்! ஸர்வம் ராஜாங்கமயமா! இது கூட்டுறவுப் பேச்சா!' என்ற எதிர்க் கூச்சல் தொழிலாளி முதலாளிகளிடமிருந்து எழும்புகிறது! 'ப்ரைவேட்ஸெக்டார்' 'பப்ளிக்ஸெக்டார்', பிளவு வேறு! சுகம் வேண்டுமானல் புதிய வரிகள் தரவேண்டுமென்கிறுர்கள் ராஜாங்கத்தார்! பற்றுக்குறை பட்ஜெட் போட்டு, அரைகுறை முயற்சிகளில் தலையிட்டு, புதிய வரிகளும் சுமத்தி, 'நாளை வாழ்க்கைப் படுகிறேன், கழுத்தே சுகமா யிரு', என்ற சுகபோக உபதேசம் எங்களுக்கு வேண்டாமே என்று அலறி எதிர்க்கிறுர்கள், பல்வேறு, பொதுமக்கள் தொண்டரென்ற கட்சிப் பிரதிநிதித் தலைவர்கள். பொறுமைக்கும் சகிப்புத்தன்மைக்கும் கால அளவு கிடையாதா என்று கேட்டால், அதற்கு மருந்து, புத்தர் போதனையும், பாஞ்சசீலக் கொள்கைகளும்தான் என்கிறுர்கள் மத்திய அரசாங்க மந்திரிகள்.

**சரித்திர அனுபவ உணர்ச்சி**

இந்தியா முழுதும் புத்தர் விழாவும், புத்தர் சதாசாரப் புனருத்தாரணப் பிரயத்தனங்களும் வெகு மும்முரமாக மத்ய சர்க்கார் ஆதரவில் ஏற்பாடாகி வருகிறது. ஆதி காலத்தில், வேதமதம், திராவிடர்களாலும், சுயநலக் காரியவாதிகளாயிருந்த வேதமதஸ்தர்களாலுமே க்ஷீண தசையடைந்தது. அப்பொழுதுதான் புத்தமதம் தலைதூக்கியது.

தெய்வ சிந்தனை விடுத்துச் சதாசாரமே லக்ஷியமாகக் கொண்ட இப்புத்தர் மதம் வெகுநாள் நிலைத்து நிலவாது, தெய்வீக சிந்தனையே அடிப்படையாகக் கொண்ட வேத மதத்திற்கே திரும்பவும் இடந்தர வேண்டியதாயிற்று! அதே நிலையில்தான், இன்று, வேதமதம் க்ஷீணித்திட, ஆரிய திராவிட சர்ச்சை காரணமாய் நிற்கவும், புத்தப் பிரேமை தலை தூக்கவும் காலம் வந்தது போலும்! இப் புத்தர் விழா விமரிசை, கூடிய சீக்கிரத்திலேயே மத்திய சர்க்காரும் மாகாண சர்க்கார்களும் வேண்டாமென்றாலுங் கூட, ஆதிவேதமதப் புனருத்தாரண அடிகோலியாகவே அமைந்திடும் என்பதே சரித்திர அனுபவ உணர்ச்சிச் சூசகம்.

**தக்ஷிணப் பிரதேசம்**

சாந்தியும் சமர்த்தியுந் தீர்மானித்த அம்ருதஸரஸ் தீர்மானத்திற்குப் பின்னர் சென்னை வேலை நிறுத்தங் கண்டோம். கல்கத்தாவில் ஹர்த்தாலும், சட்டசபையில் மேடைமீதேறி சபாநாயகரை அடிக்கவுங் காக்கவுங் கூடிய சபையார் ஒழுக்கத்தையுங் கண்டோம்! திருவிதாங்கூரிலும், கர்னாடகங்களிலும் பொறாமை பேசிப் போரெழுப்பும் பிரசாரங்கள் நடப்பதையுங் காண்கிறோம். பார்லிமெண்டு சபைகளில் ஆசார்ய கிருபாளானி, மாகாணப் புனரமைப்பு ஒதுக்கத்தை ஆமோதித்து, அந்த வெறியை உண்டாக்கி வளர்த்த காங்கிரஸைக் கண்டித்ததையும் கேட்டோம். சென்னை சட்டசபையில், வருகிற வாரம் ராஜ்யப் புனரமைப்பு மசோதா விவாதம் நடக்கப் போவதையும் எதிர்பார்க்கிறோம். நிதிமந்திரி ஸ்ரீ சுப்ரமணியம், சென்னை, கேரள சேர்க்கையான தக்ஷிண பிரதேச ஸ்தாபனமே நமது பொருளாதார நலனென்ற தனது சொந்த அபிப்பிராயத்தைப் பிரகடனம் செய்வதையும் பார்க்கிறோம். ரா. பு. அ. மசோதா தயாரிப்பு, 15-3-56க்கு ஒத்திப் போடப்பட்டதையும் படிக்கிறோம். காமராஜர் மனம்தான், இன்னும் மர்மமாயுள்ளதை அறிகிறோம்!

பாஞ்சசீலங் கொண்டு பலத்த வெளிநாடுகளிலும் பெரும் பெயரும் கியாதியும் நாம் பெற்றுள்ளோமெனப் பெருமையடித்துக்கொள்வதால், நமதுகைளில் காலணாகாசு மிஞ்சியோ,வயிற்றில் கவளம்சோறு விழுந்தோ, நமக்கு எவ்வித சுகமாவது ஏற்படப்போகிறதா? தன் தாய்தந்தையருக்கடங்கித் தனது குடும்ப சுக சௌக்யம் நாடி உழைத்திடாது சண்டைபோட்டு வீட்டை விட்டு வெளியேறும் பிள்ளைகள், ஊருக்கு ஹிதோபதேசப் பிரசங்கத் தொண்டுகளைச்செய்யப் போகிறேனென்று பெருமை பேசிப்போவ

தால் அவருக்கோ, அவர்கள் குடும்பத்திற்கோ சாந்தியோ சுகமோ கிட்டக்கூடுமோ ?

**நமது அகம் நமது ஸ்தான்**

இந்தியாவில் தமிழகம் ஏற்பட்டாலென்ன ? **கர்நாடகம்** ஏற்பட்டாலென்ன ! **திராவிடஸ்தான்** ஏற்பட்டாலென்ன ? **ஹிந்திஸ்தான்** ஏற்பட்டாலென்ன ? நாம் வேண்டுவது **நமது அகம் ! நமது ஸ்தான் !** ஸுப்ரீம் கோர்ட் மாஜிப் பிரதம நீதிபதி சமீபத்தில் ஹிந்து பத்திரிகையில் எழுதி வந்த அரசியல் நிலை ஆராய்ச்சியில், ஆங்கிலேயர் நம்மைப் பிரித்துவைத்துத் தமது பலத்தையே திடப்படுத்திய முறைகளையே நாம் விடாது கடைப்பிடித்து வருகிறோமேயென்று வெகு தெளிவாய் வருந்துகிறார் ! அதிகாரமற்ற ஜனாதிபதி கொண்ட பார்லிமெண்டும் அலங்காரப் பொம்மைகளான கவர்னர்கள் கொண்ட பலத்த மாகாண மந்திரிசபைகளும் நாட்டுக்கு நலமா கொடுக்கும் ? விபரீதக் கலகமேயன்றோ விடாது தந்திடும் ! என்கிறார் இவ்வனுபவ அறிஞர் !

**வண்ணக்கஞ்சாத்தனார் தீர்ப்பு**

> “ஆரியமுஞ் செந்தமிழு மாராய்ந் திதனினிது
> சீரியதென் றொன்றைச் செப்பரிதால்—ஆரியம்
> வேதமுடைத்துத் தமிழ்திரு வள்ளுவனா
> ரோது குறட்பா உடைத்து”

பல்லாண்டுகள் முன்னரே, தமிழரேயான வண்ணக்கஞ் சாத்தனார் சொல்லிப் போயுள்ளார் இந்தத் தீர்ப்பு ! அக் குறளே ஓதிப் பேசிவரும் ம. பொ. சி. போன்றோரும், ஈ. வே. ரா. போன்ற ராமாயணச் சீர்திருத்தப் பெரியார்களும், மற்றும் இதர மாகாணப்பிரமுகர்களும், இன்னமும் ஆரியச் செந்தமிழ்ப் போராட்டமும் இதர பாஷா துவேஷமும் வளர்த்தல் ஏனோ ? இதுவும் தமிழர் விதியே போலும் ! இந்தியர் மதி, அம்ருதஸரஸுக்கப்புறமாவது தெளிந்து மிளிர்ந்து இப்பொல்லா விதியை வென்றிட, வரஇருக்கும் இரண்டாம் ஐந்தாண்டு திட்டகாலத்திலாவது நீலகண்டனும் நீலமேகனும் அருள்புரிவாராக !

---

**ஜகன்மோகினி:** 33-ம் ஆண்டு, 1956

தனிப்பிரதி அணா 4.

வருடச் சந்தா ரு. 3

ஸ்ரீமான் S. ராஜகோபாலன் M. A., B.L.,

# மரண தண்டனை அவசியமா?

சென்ற பிப்ரவரி மாதம் 18ந்தேதி பிரிட்டனின் பார்லிமெண்டு மரண தண்டனையை அகற்றும் சட்டத்தை நிறைவேற்றி விட்டது. 293 அங்கத்தினர்கள் ஆதரவளித்தனர், 262 பிரதிநிதிகள் எதிர்த்தனர். இது ஒரு பெரிய சிர்த்திருத்தச் சட்டம். நாகரீகத்தின், பகுத்தறிவின், முன்னேற்றத்தின் ஒரு திட்டமான அறிகுறி என்று தான் நாம் கூறவேண்டும்.

கொலை செய்த குற்றத்திற்கு அவன் உயிரைக் கவர்வது என்பது பழமையான சமுதாயக்கொள்கை. கொலை செய்பவன் சமுதாயத்தின் ஆதரவுக்கு ஏற்றவன் அல்ல என்பது அந்தக் கொள்கையின் அடிப்படை. பழிக்குப் பழி என்பது அதன் முக்கிய நோக்கம். சமீப காலத்தில் சட்டநிபுணர்களும் வைத்திய மேதாவிகளும் செய்து வந்த தீவிர ஆராய்ச்சியின் பயனாக மரண தண்டனையின் அடிப்படைகள் அலசிப்பார்க்கப்பட்டன. மரண தண்டனை நாகரீக சமுதாயத்திற்கு ஏற்றதல்ல என்று சர்க்கார் கருதுகின்றனர். உணர்ச்சிச் சிதறலால் ஏற்பட்ட தற்காலிக பயித்தியக்காரர்கள் தான் கொலைக் குற்றம் செய்கிறார்கள் என்பது அவர்களின் கருத்து. அதற்கு மரண தண்டனை சரியான சிக்ஷை அல்ல என்பது முடிவு.

இந்தச் சட்டத்தைப் பலர் வரவேற்கிறார்கள்; சிலர் ஏற்கவில்லை. நம் நாட்டில் இதைப் பலர் பலமாக எதிர்ப்பார்கள். கொலைக் குற்றத்திற்கு மரண தண்டனை தான் மிகவும் நியாயம் என்ற சம்பிரதாய மனப்பான்மை இருக்கிறது. இது மாறினாலே ஒழிய இந்தச் சிர் திருத்தச் சட்டத்தின் உண்மைத்தத்துவம் தெளிவாக விளங்காது.

பிரிட்டனில் சமீப கலத்தில் கொலைக் குற்றங்கள் சாட்டப்பட்டு மரண தண்டனை கொடுத்தபின் அந்தக் குற்றவாளிகள் அந்தக் கொலைகளைச் செய்யவில்லை என்று மறுக்கமுடியாத ருஜுக்களும், மற்ற குற்றவாளிகளின் உண்மை வாக்குமூலங்களாலும் தெளிவானதால் அரசாங்கத்தார் இந்தப் பிரச்சனையை தீவிரமாகக் கருதவேண்டி ஏற்பட்டது. இந்தியாவில் சாட்சிகள் தாராளமாகப் பொய் சொல்ல முன்வருகிறார்கள் என்பது சட்ட அனுபவம் உள்ளவர்கள் தெரிந்த உண்மை. கட்சிகளாலும், ஊர் சண்டைகளாலும், பரஸ்பர விரோதத்தாலும், இதர சில்லரைக் காரணங்களாலும் விரோதங்கள் ஏற்பட்டு அதன் பொருட்டு சாக்ஷிகள் கொலைக்குற்றங்களிலும் தோன்றுதலை மறுக்க முடியாது. நேரிடைச் சாக்ஷிகள் இருந்தாலே ஒழிய, அனுமான பூர்வமான சாக்ஷியங்களைக் கொண்டு மரண தண்டனை கொடுக்கும் தீர்ப்பு என்றைக்கும் சந்தேகிக்கவேண்டியதாகத் தான் இருக்க முடியும். நம் நாட்டிலும் மரண தண்டனை தேவைதானா, அதை அகற்ற முடியுமா, அதை எந்த சந்தர்ப்பங்களில்தான் கொடுக்கலாம் என்பதைப் பரிசிலனை செய்ய ஒரு கமிட்டியை அரசாங்கம் நியமித்தால் மிகவும் பொருந்தும்.

ஸ்ரீ உ. வே. ப்ர. அண்ணங்கராசார்ய ஸ்வாமி

# அன்புள்ள தம்பியைப் பிரிந்த அண்ணாவின் அழுகை

என்னுடைய பிறவியில் தங்கை தமக்கைகள் ஏற்பட்டதுண்டே யொழியத் தம்பியோ தமையனோ ஏற்பட்டிருக்கவில்லை. ஆயினும் வைத்தமாநிதி ஸ்ரீநிவாஸனை எம்பெருமான் எனக்குத் தம்பியாகச் சங்கற்பித்திருந்தனன். இதனைப் பலர் அறிவர், சிலர் அறியார்கள். அனைவருமறியத் தெரிவிக்க வேண்டிய காலம் வாய்த்தது. ஸ்ரீநிவாஸனைப் பிரிந்து புலம்புகின்றவர்கள் பலர்; மகன் போய்விட்டானே யென்று தாய் தந்தையர் சோகிப்பர். தந்தை மறைந்தாரே யென்று மக்கள் சோகிப்பர். கணவர் காலஞ் சென்றாரே யென்று காதலி கதறுவள். ஆருயிர் நண்பன் அகன்றானே யென்று ஆப்தமித்திரர்கள் அலமருவர்கள். அன்புள்ள தம்பி அகன்றானேயென்று அழுகைக்கு ஒருவருமில்லை; அதற்காகவே இந்த அண்ணா தோன்றினன் போலும்! உள்ளே நிரம்பிய சோக வெள்ளம் வாய்விட்டழுதாலன்றித் தீராது; கையாலிறைத்தும் தீர்க்கப் பார்க்கிறேன்! ஒரு சமயம் இளையோனை இழந்து விட்டதாக நினைத்துக் கொண்ட இராகவன் புலம்புகையிற் பேசுகின்றான்— "தேசே தேசே களத்ராணி தேசே தேசே ச பாந்தவா:, தம் து தேசம் ந பச்யாமி யத்ரப்ராதா ஸஹோதர:" என்று. உலகில் ஒருவனுக்கு நாடு தோறும் மனைவியர் கிடைப்பர்; உறவினரும் தேசந்தோறு மகப்படுவர்கள்; கூடப் பிறந்தவனான தம்பி அகப்படும் நாடு எங்கும் கிடைக்காது —என்பது இதன் பொருள். [ஸ்ரீராமா: யுத், 102-12] ஸ்ரீராமனுக்கு லக்ஷ்மணன் வேற்று வயிற்றுத் தம்பியே யொழிய ஒரே வயிற்றுத் தம்பியல்லன்; ஒரு வயிற்றிற் பிறந்த தம்பியையே ஸஹோதரனென்று சொல்லத் தகும். உண்மையில் ஸஹோதரனல்லாத லக்ஷ்மணனை ஸஹோதரனாக எங்ஙனம் கூறுகின்றார் பெருமாள்? என்று சங்கையைக் கிளப்பி உரையாசிரியர்கள் பலவாறு உரைத்திருக்கக் காண்கிறோம். உடன்பிறந்த தம்பியைக் காட்டிலும் அன்பிற் சிறந்திருந்தது பற்றியே லக்ஷ்மணனை ஸஹோதரனாகச் சொல்லிற்று. இங்ஙனமே ஸ்ரீநிவாஸனும் நானும் பரஸ்பரம் ஸஹோதரபாவனையில் குறையற்றிருந்தோம். இதனைப் பொறாத தெய்வம் அந்தோ! பிரித்திட்டது!

ஜ—1 1—3—56

இவாகுவேஷன் சமயத்தில் காருக்குப் போதுமான பெட்ரோல் கிடைக்காமல் சில வேளைகளில் ரைல்வண்டிப் பயணமும் செய்துகொள்ள நேர்ந்ததெனக்கு. அப்போது ஸ்ரீநிவாஸன் திருவல்லிக்கேணியில் வாஸத்தை விட்டுச் சிங்கப்பெருமாள் கோயிலில் குடும்பத்துடன் வாழ்ந்து வந்தான். அவனை இன்னானென்றும் நானறியேன். என்னைமட்டும் அவன் அறிந்திருக்கிறான். ஒரு ஞாயிற்றுக்கிழமை மாலை சென்னையிலிருந்து திரும்புகையில் நான் இரண்டாம் வகுப்பு வண்டியில் உட்கார்ந்து என் வழக்கப்படி ஏதோ எழுதிக்கொண்டு போகிறேன். ஸ்ரீநிவாஸன் சிறிது தூரத்திலிருந்தவன் என்னையுற்று நோக்கி அருகே வந்து எதிரே யுட்கார்ந்தான். அப்போதும் அவனை நான் கணிசியாமல் என் காரியத்திலேயே கருத்தாயிருந்தேன். ஸ்ரீநிவாஸன் புன்முறுவல் செய்துகொண்டே 'அண்ணாவுக்குத் தம்பி லக்ஷியமில்லை போலும்' என்கிறான். 'தொட்டுத் தொட்டுப் பிடிக்கு முறவு' என்கிற கணக்கில் திருப்பதியில் எனக்குச் சில தம்பிமார்களுண்டு; அவர்களில் இவன் ஒருவன் போலும் என்று நினைத்து அதற்குத் தக்கவாறு கேள்விகேட்கத் தொடங்கினேன். பதினைந்து வருஷங்களாய்விட்டபடியால் பிறகு நடந்த ஸம்பாஷணைகள் நன்றாக நினைவில்லை. நாலே நிமிஷத்தில் அன்புவளர்ந்திட்டது. உடனே சிங்கப்பெருமாள் கோயில் ஸ்டேஷன் அணுகிற்று. 'தம்பிக்கு அண்ணா நியமனம் தந்தருளவேணும்' என்று எழுந்தான். 'போய் வா' என்று சொல்ல எனக்கு வாயெழும்பவில்லை. நானும் கூடவே இறங்கிவிட வேணுமென்று நினைத்ததும் அது ஸாத்யமாக வில்லை. அவனைக் காஞ்சிக்கு அழைத்துக்கொண்டு வரவும் ஸாத்யமாகவில்லை. இன்னது செய்வதென்று தோன்றாமல் திகைத்திருக்குமளவில் வண்டி கிளம்பிவிட்டது. இருவர் கண்ணிலும் பெருகுகின்ற நீரைப் பார்ப்பவர்கள் வியப்படைகிறார்கள். மிகச் சில நிமிஷங்களிலேயே ப்ரேமம் அங்குரித்து சாகோபசாகையாக வளர்ந்திட்டது.

வைத்தமாநிதிக் குடும்பம் மேதையில் மிக்க பெரும்புகழ் பெற்றது. செவிப்புலனும்கட்புலனுமே இதற்குச் சான்று. ஸ்ரீநிவாஸனுடைய பிதாமஹரான (கீர்த்தி மூர்த்தி) அப்பங்கார் ஸ்வாமியை நன்கறிவேன். ஒரு வருடம் காஞ்சீபுரத்தில் வைகாசித்திருநாளுக்கு எழுந்தருளியிருந்து இளமைச் செருக்குடைய வடியேனையும் ஒரு நொடிப்பொழுதில் ஈடுபடுத்திக் கொண்ட பெரியாரவர். அவருடைய மூத்த திருக்குமாரராய் உலகம் நிறைந்த புகழாளரான சடகோபராமாநுஜாசாரியர் ஸ்வாமிக்கு உயிரை அறவிலை செய்தவனடியேனென்பது ப்ரஸித்தம். இளைய திருக்குமாரரும்

எனதருமைத் தம்பிக்குத் தந்தையுமான ஸ்ரீபார்த்தஸாரதி ஐயங்காருடைய பண்புகளில் நெஞ்சைப் பறிகொடுத்தது நெடுநாளாகவே. இந்த வைத்தமாநிதிக் குடும்பத்திற்கு அணிவிளக்காயும் திசைவிளக்காயும் திகழ்கின்ற ஸ்ரீமத் கோபல க்ருஷ்ணமாசார்ய ஸ்வாமியின் திருக்குணங்களி லீடுபாடும் நாடுநகரமும் நன்கறிய நின்றது. "என்ன நோன்பு நோற்றாள் கொலோ இவனைப் பெற்ற வயிறு டையாள்" என்ற பெரியாழ்வார் பாசுரத்திற்கு முக்கிய மான இலக்காக நம் கண்காணநின்ற திருக்கோதையாரை [ஸ்ரீநிவாஸனது திருத்தாயாரை] எனது தாயாராகவே கொண்டு மகிழும் பாக்கியமும் பெற்றனன், அந்நாள் தொடங்கியே.

அன்பு தோன்றிய அந்த க்ஷணம் முதலாக அது வளர்ந்துவந்த பரிசுகளை என்னவென் றெழுதுவேன். என் தம்பி சிங்கப்பெருமாள் கோயிலில் வாழ்ந்தவரையில் நான் சென்னைக்குச் செல்லும் போதுகளில் பெரும்பாலும் அவ்வழியாய்ச் செல்வதும் அங்கே இளைப்பாறிப் போவது மாயிருந்தேன். திருவல்லிக்கேணி வாஸத்தை முன்போல ஏற்றுக்கொண்டபிறகு சந்தித்த சமயங்களுக்குத் தொகை வகையுண்டோ? அவனும் அடிக்கடி காஞ்சிக்கு வந்து உண்மைத் தம்பியென்றே உலகமறியக் கலந்து பழகு வான். அதையெல்லாம் விவரித்தெழுதக் கைகூசுகின் றது; தளர்கின்றது. "அறிவிழந்தெனை நாளையம்" என்று ஆழ்வாரருளியபடி 5—2—56 தேதி முதலாகவே அறி விழந்து கிடக்கின்ற யான் இஃதெழுத முன்வந்ததே ஸாஹஸம்.

வை. மு. ஸ்ரீ. என்னும் குறிப்புள்ள கடிதங்களை ஆயி ரக்கணக்காகப் பெற்றவன் யான். P. B. A. என்னுங் குறிப்புள்ள கடிதங்களையும் அதிலிரட்டியாகப் பெற்றவன் தம்பி வை. மு. ஸ்ரீ. அன்னனது முகம் மறைந்தாலும் முகத் திற்கு அணியான முறுவல் மறைந்தில தென்றே கூறு வேன். எந்தப் பேச்சுப் பேசினாலும் முறுவலின்றிப் பேசான. "நின்முக வொளி திகழ முறுவல் செய்து நின் றிலையே" என்கிற திருவாய்மொழிப் பாசுரத்தை நினைக குந்தோறும் தம்பியின் முகமே நினைவுக்கு வருமெனக்கு. இளமைதொடங்கியே என்ன ஞானம்! என்ன பக்தி!! என்ன விச்வாஸம்!!! யாரிடத்தும் குறைகூறான் குற்றங் காணான். உலகுக்கெல்லாம் உறவினனாக ஒருவனிருக்க முடியாததென்பதைப் பொய்யுரையாக்க விளங்கினவன் தம்பி வை. மு. ஸ்ரீ. ஒருவனே.

உலக வாழ்க்கைக் கட்டுரைகளை எழுதுவதோடு நில்லாமல் 'ஸம்பிரதாய நூல்களில் ஆழ்ந்த ஞானம் பெற்றவர்களில் தலைவன்' என்று உள்ளபடி உலகம் போற்றுமாறு ஸம்பிரதாயக் கட்டுரைகள் பலவற்றையும்எழுதிப் பிரசுரம் செய்துவந்த தம்பியின் மனோரத வெள்ளங்களை ஊமனூர் கண்ட கனவிலும் பழுதாயொழியச் செய்த பகவானது திருவுள்ளந்தான் என்னே!

"வையம் மன்னி வீற்றிருந்து விண்ணுமாள்வர் மண்ணூடே" என்கிற ஆழ்வாரது மங்களாசாஸனத்திற்கு இலக்காகி நெடுங்காலம் வாழ்ந்து நிலவுலகமுழுதும் போற்ற ஞானச்சுடர் விளக்கை யேற்றிக்கொண்டே திகழவேண்டிய என்னருமைத் தம்பியின்பால் மண்ணுளார் போலவே விண்ணுளாரும் விண்ணுளார் பெருமானும் காதல் வைத்தால் அந்தோ! என்னகும். அவர்களது காதலே பயன்பெற்றொழிந்தது!

"கூடிக் கூடியுற்றார்களிருந்து குற்றம் நிற்க நற்றங்கள் பறைந்து" என்று பெரியாழ்வார் பணித்த முறையிலே, குற்றமே வடிவானர்க்கும் உயிர்மாய்ந்தவாறே குற்றங்களை மறந்து நற்றமே பறைவதென்று ஒன்றுண்டு. நம் தம்பி பக்கலிலே அந்த முறைக்கு அணுவளவும் அவகாசமில்லை. மானிடர்க்குரிய குற்றங்களில் ஒன்றிரண்டேனுமிருக்குமோ வென்று எவ்வளவு ஆலோசித்துப் பார்க்கினும் என் மதிக்கு ஒன்றுமெட்டவில்லை. உலகவியல்வுக்கு அவன் மாறாயிருந்ததொன்றே குற்றமாகக் காணத்தகும்! இக்குற்றங் காரணமாகவே அவனை இறைவன் விரைவில் திருவடி சேர்த்துக் கொண்டனன் என்பதே எனது துணிபு.

உலகில் பொறுக்கொணாத துக்கங்களையுமுண்டாக்குவதும், அதை நாளடைவில் மறையவும் மறக்கவும் செய்துவம் எம்பெருமானுடைய சாதுரியங்களில் ஒன்றாகக் காண்பதுண்டு; அதுவுமிங்குப் பயன் பெறாதென்றழுது கொண்டே நிற்கின்றேன்.

---

# ஸ்ரீகோதா ஹ்ருதயம்

**வை. மு. ஸ்ரீ. யின் கடைசி நூல்**

**அணா 12.**

ஸ்ரீமான் காரப்பங்காடு வெங்கடாசாரியார்

## உத்தமரின் மறைவு

ஸ்ரீமான் வைத்தமாநிதி முடும்பை ஸ்ரீநிவாஸன் எம். ஏ., பி. எல்., (5-2-56 ஞாயிற்றுக்கிழமை) ஆசார்யன் திருவடி அடைந்த விஷயத்தைக் கேட்க நேர்ந்தபோது திடுக்கிட்டேன். இவருக்கு வயது 39. இவர், திருவல்லிக்கேணி என்னும் திவ்யதேசத்திற்கே ஒரு திலகமாயும், உபய வேதாந்த ப்ரவர்த்தகராயும், ஸுப்ரஸித்தராயும் எழுந்தருளியிருந்த வை. மு. அப்பங்கார் ஸ்வாமி திருப்பேரனாராவர். எம். ஏ., பி. எல்., பரீக்ஷையில் தேறி வக்கீல் தொழிலை நடத்தி வந்த இவர், தம் வம்சப் பெருமைக்குச் சேர நம் ஸம்ப்ரதாய க்ரந்தங்களில் சிறந்த அறிவையும் பெற்றிருந்தார். இவர், எளிய இனிய தமிழ் நடையில் அரிய கட்டுரைகளையும் நாவல்களையும் 'பக்தன்' 'ஜகனமோகினி' என்னும் பத்ரிகைகள் மூலமாக வெளியிட்டு வந்த விஷயம் உலகமறிந்ததே. ஆஸ்திக்யம் குறைந்து நாஸ்திக்யம் மேலிட்ட இக்காலத்தில் ஸத்விஷயத்தை எளிய இனிய நடையில் எழுதி உலகத்திற்கு உபகரிக்கும் உத்தமர் ஒருவரை இவ்வுலகம் இழக்கும்படி நேர்ந்தது எனில், இது மிகையாகாது. ஒரு ஸமயம் திருவல்லிக்கேணி ஸ்ரீ பார்த்தஸாரதி ஸ்வாமி ஸபையின் ஆதரவில் கீதோபந்யாஸம் செய்ய நேர்ந்தது. அது முதல் இவருடன் அடியேனுக்கு நெருங்கிய பழக்கம் ஏற்பட்டது. ஆறு ஏழு வருஷங்களாக அந்தரங்கமான பழக்கம் உண்டு. அந்த உபந்யாஸ ஸமயத்தில் நடந்த விஷயங்களை இவர் தொகுத்தெழுதி, அடியேனிடம் காட்டியிருக்கிறார். அந்த ஸமயத்தில் இவர் புத்தி சாதுர்யத்தை ப்ரத்யக்ஷமாய் அநுபவித்தவன். இவருடைய மறைவு ஸ்ரீவைஷ்ணவ ஸமூஹத்திற்கும் இவர் தாய், தந்தை, தாரம், மக்கள் முதலான தேச பந்துக்களுக்கும் பெருந்துயராயிற்றென்று மிக வருந்துகிறேன்.

---

திருக்கண்ணபுரம் பண்டிதரத்னம்
எஸ். ஸ்ரீநிவாஸய்யங்கார்

## கீர்த்தி மூர்த்தி

பல அறிஞர்களை உலகுக்கு அளித்துள்ள வைத்தமாநிதி முடும்பைக்குலததில் பிறந்தவர், இவர். ஆங்கிலம் பயின்று எம். ஏ., பி. எல. பட்டம்பெற்று, வக்கீல் தொழில் செய்பவராயினும், இவரது குலப்பண்பாட்டால் சமய நூல்களிலும் மிகுந்த ருசி இவருக்குத் தன்னிடையே உண்டாகியது. பலபெரியோர்களின் உபந்யாஸங்களைக் கேட்டு ஸாரக்ராஹியாய் ஸ்ரீவைஷ்ணவ

ஸ்ரீமான் டி. எஸ், ராஜகோபாலன், பி.ஏ., எல்.டி.,

# ரத்னத்தை இழந்தோம்!

வை. மு. ஸ்ரீ. அவர்களது அகால மறைவு உலகுக்கே பெரியதொரு நஷ்டத்தை விளைவித்துள்ளது. 'வைத்தமாநிதி" என்ற பெருமை தாங்கிய இவரது குடும்பத்தினர் பரம்பரை பரம்பரையாக அறிவும் ஒழுக்கமும் பெற்று, சான்றோர்களால் பாராட்டப் பெற்று வந்துள்ளனர். இவர் இந்து உயர் நிலைப் பள்ளியில் படித்து வந்தது முதல் இவரை நான் நன்கு அறிவேன். இவர் பள்ளிக்கூடத்தில் எங்களது நன்மதிப்பிற்கும் பாராட்டிற்கு முரிய சில பிள்ளைகளுள் ஒருவராய் விளங்கினார். பின்பு சமீபத்தில்தான் இவருடன் பழகிக் களிக்க எனக்கு வாய்ப்பு கிடைத்தது. புன்னகை தவழும் முகமும் அறிவுக் கதிர் சூழ்ந்த நெற்றியும் எனது கண்ணின் முன் இன்றும் தோன்றுகின்றன. இவர் பக்தனுக்கும், ஜகன்மோகினிக்கும் எழுதித் தந்த கட்டுரைகளின் நயமும் சுவையும், இவர் தென்மொழியிலும் வடமொழியிலும் பெற்றிருந்த ஆற்றலையும், விஷயங்கள் எவ்வளவு கடினமாயினும் அவற்றைக் கட்டுரை செய் வன்மையையும் காட்டி வந்தன. வைணவ சமய நூல்களிலுள்ள அருமை பெருமைகளைப் பாமரரும் நன்கு உணர்ந்து கொள்ளுமாறு புனைந்து வந்தார். "இவரைப் பெற்ற வயிறுடையார் என்ன நோன்பு நோற்றார்கொலோ!" என்று மகிழ்ந்த உலகம், இன்று துயாக் கடலில் ஆழ்ந்துள்ளது, இத்தகைய ஓர் ரத்னத்தை இழந்து.

---

ஸம்ப்ரதாயத்தில் தெளிந்த ஞானத்தை உடையரானார். இவர் தமிழில் கட்டுரைகளும் சிறுகதைகளும் எழுதும் ஆற்றல் பெற்றிருந்தவராகையால் ஸ்ரீ வைஷ்ணவஸம்ப்ரதாயத்தின் பெருமையையும் ரஹஸ்யார்த்தங்களையும் தெளிவாகவும் அழகாகவும் சுருக்கமாகவும் எழுத முற்பட்டார். சென்ற இரண்டு மூன்று வருஷங்களாக இவர் "பக்தன்" மாத ஸஞ்சிகைகளில் வெளியிட்டு வந்த வ்யாஸங்களே இதற்குத் தக்க சான்றாகும். தன்னலமற்றவர், உழைப்பாளி, மேதாவியுமாவார். இத்தகைய எழுத்தாளர்கள் பலர் தற்பொழுது உலகுக்கு மிகவும் தேவை. இத்தருணம் உலகம் இவரை விரும்புவதுபோல ஈசனும் இவரை விரும்பினன் போலும். இவரது பூதஉடல் நசித்தாலும் கீர்த்தி மூர்த்தியாய் இவர் விளங்குவர் என்பதில் ஐயமில்லை. ஆயினும் இளம்வயதுள்ள இவர் நற்குணம், நற்செய்கை, சமயத்தொண்டு இவைகளையே கடைப்பிடிப்பது, பலரால் போற்றப்பெறும் தமது தாய் தந்தையரையும் சிறுகுழந்தைகளுடன் கூடிய இளம் மனைவியையும் துயரக்கடலில் ஆழ்த்தி இவ்வுலகைவிட்டு மறைந்தது நம்மையும் துயருறச்செய்கின்றது. உலக வாழ்வு இத்தகையதே என்றுதான் நாம் நம்மைத் தேற்றிக் கொள்ளவேண்டும். அக்குடும்பத்திற்கு இதன்மூலம் எனது அநுதாபத்தை செலுத்துகிறேன்.

ஸ்ரீமதி காயனபடு கீர்த்தனபடு வி. ஸரஸ்வதிபாய்

# என்றும் மறையாத உத்தம ஒளி

ஸ்ரீநிவாஸனை அவனுடைய ஏழாவது வயது முதற் கொண்டே நான் நன்ருய் அறிவேன். அந்த வயதிலேயே அவன் சங்கீதத்திலும், பகவானுடைய சரித்திரங்களைக் கேட்பதிலும் மிகவும் ஆவலுள்ளவன். அவன் அடிக்கடி பக்த சிகாமணியாகிய ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி—அவன் தாயார்—அவர்களுடன் என்னுடைய கதையை வந்து கேட்பான். அதைக் கேட்டு வீட்டில் அதிலுள்ள சில பாட்டுகளைத் தன்னோடு இருக்கும் சிநேகிதர்களுக்கும், மாதா பிதாக்கும் பாடிக் காண்பிப்பான். அந்த வயதிலிருந்து அவனது 21-வது வயது வரையிலும் ஒரு வருஷமாவது தடங்கலில்லாமல் M.A., B.L., வகுப்பை பாஸ் செய்தான். சமஸ்க்ருதம், தமிழ் முதலானவைகளில் உயர்ந்த பாஷா ஞானம்.

இந்த சந்தர்ப்பத்தில் சில வருஷங்களுக்கு முன்பு நடந்த ஒரு நிகழ்ச்சி நினைவுக்கு வருகிறது. அதாவது அகில இந்திய ரேடியோ சென்னை நிலையத்தில் நவராத்திரி என்பதைப்பற்றி ஸ்ரீமதி கோதைநாயகி இசைச் சித்திர நாடகமாக ஒரு நிகழ்ச்சியை நடத்தினர். அந்த நிகழ்ச்சியில், செல்வவந்தர்கள் வீட்டில் நவராத்திரியில் ஒரு தினத்தைக் குறிப்பிட்டு எல்லோரையும் மஞ்சள் குங்குமத்திற்கு அழைப்பதுபோலும், அன்று கதை, கச்சேரி, நடனம் முதலியவைகளை நடந்தது போலும் ஒருவரைத் தயாரித்து இருந்தது கேட்டு நானே ஆச்சரியப்பட்டேன். இன்னொரு வீட்டில் ஒரு பாகவதரின் சங்கீத கச்சேரி நடப்பதும்போலும் அந்த நாடகத்தில் காட்டி இருந்தாள். இன்று நம்மையெல்லாம் கதறவிட்டு மறைந்து விட்ட என் கண்மணி ஸ்ரீநிவாஸன் அந்த வித்வானுக நடித்து உண்மையில் சங்கீத வித்தான் எந்த கம்பீரத்துடன் பாட ஆரம்பிப்பாரோ அதே மாதிரி "நாட்டைக்குறஞ்சி" ராகத்தைப் பாடினபொழுது நான் பிரமித்துப்போய்விட்டேன்........ ஏற்கெனவே இந்த நிழ்ச்சியைப் பற்றி எனக்குத் தெரியுமாதலால், "அடாடா! பாடுவது வை. மு. ஸ்ரீநிவாஸனு! செம்மங்குடி ஸ்ரீநிவாஸனு!" என்று குடும்பத்தோடு ஆச்சரியப்பட்டோம். இது முகஸ்துதிக்காகச் சொல்லும் வார்த்தையல்ல. எங்கள் இதயபூர்வமாக அநுபவித்த உணர்ச்சியை இன்று கண்ணும் கண்ணீருடன் எழுதுகிறேன். இவ்வளவு பாண்டித்யத்துடன் பாடக்கூடிய அவனுடைய சங்கீதம் வெளி உலகத்திற்குத் தெரிந்திருக்காது. அவ்வளவு அடக்கமான குணவான். இதேபோல் திரிச்சிராப்பள்ளி ரேடியோவில் பாரதியார் தினத்தன்று ஸ்ரீநிவாஸனும், அவனுடைய தாயாரும்

சேர்ந்து பாரதியாரின் அமுத ப்ரவாகம் போன்ற பாடல்களில் ஒன்றாகிய "முன்னர் இலங்கை" என்ற பாட்டை 'அடாணா' ராகத்தில் கேள்வியும் பதிலும் போன்றுபாடிய ஒரு அத்புதம் இப்பொழுதும் என் காதில் ஒலித்துக்கொண்டே இருக்கிறது. சங்கீதத்தில் மட்டும்தான் இவ்வளவு திறமை என்று நினைத்து விடவேண்டாம். ஸ்ரீநிவாஸனின் புகைப்படம் பிடிக்கும் திறமையை ஜகன்மோகினி மலர்களில் பலவிதத்திலும் கண்டு உலகம் பிரமித்திருக்கிறது. அதில் ப்ரத்யேகமாக எங்கள் மகாத்மாஜி ஸேவா சங்கத்தின நாடக கோஷ்டியை அத்புதமாகப் படம் பிடித்து 'ஜகன் மோகினி மலரில் பிரசுரித்திருப்பது குறிப்பிடத் தக்கது. தன் தாயார் ஆரம்பித்துள்ள 'மகாத்மாஜி ஸேவா சங்கத்தினிடம் அவனுக்கு இருக்கும் ஆர்வம் சொல்லில் அடங்காது. சங்கத்திற்காக ஒரு வீடு வாங்கும் சந்தர்ப்பத்தில் அவன் உழைப்பைக் கண்டு த்ருஷ்டி வாராமல் இருக்கவேண்டுமே என்று நான் நினைத்ததுண்டு. கடைசியாக, போகிப் பண்டிகை யன்று சங்கத்தில் நடந்த ஸ்ரீ ஆண்டாள் கல்யாணத்தன்று ஸ்ரீநிவாஸன் தன் அருமைக் குழந்தை ஸ்ரீதேவியை மடியில் வைத்துக்கொண்டு உட்கார்ந்திருந்த காட்சி என்னால் என்றுமே மறக்கமுடியாத கடைசிக் காட்சியாகி விட்டது!

பகவானிடத்திலும், பெற்றோர்களிடத்திலும், மற்ற பெரியோர்களிடத்திலும் மிகவும் அபூர்வமான பக்தியுள்ளவன். மிகவும் அடக்கமுள்ளவன். பேசுவதில் சாந்தத்தைத் தவிர வேறு கிடையாது. இம்மாதிரி அபூர்வ வ்யக்தியானது. "ஜாதஸ்யஹி த்ருவோம்ருத்யு: த்ருவம் ஜன்மம்ருதஸ்யச" என்னும் வாக்யப்படி, மனுஷ்ய லோகத்தில் ஏற்பட்டதாயிருந்த போதிலும், "நர:பதிதகாயோபி யசஸ்காயேந ஜீவதி" என்னும் நியாயப்படிக்கு அவன் தன்னுடைய சொந்த புத்தியால் சில உத்தமமான புஸ்தகங்களை வெளியிட்டிருப்பதும் ஜகன் மோகினி என்னும் ப்ரபலமான பத்திரிகையில் தன்னுடைய தாயாரோடு அநுகூலமாய்ச் சேர்ந்து ஒத்துழைத்தும் மகாத்மாஜி ஸேவா சங்கத்தைத் தானே முன்னிருந்து ஒவ்வொரு காரியத்தையும் செய்துகொண்டு இன்னும் அந்த சங்கத்தின் பிரகாசத்திற்குக் காரணமாயிருந்துகொண்டு வந்த அப்பேர்ப்பட்ட ஸ்ரீநிவாஸனது யசஸ்சரீரமானது என்றைக்கும் மறையாத ஓர் உத்தம ஒளி. இப்பேர்ப்பட்ட சகல குணங்களோடு கூடின சத்புத்திரனைப் பெற்ற அந்த தம்பதிகள் என்றும் மறையாத தன்னுடைய புத்திரன், ஒளி என்கிற ஜியாதிரூபமாய் இருக்கிறதாகவே நினைத்துக்கொள்ளவேண்டும் நானும் என்னைச் சேர்ந்தவர்களும், என் சங்கமும் அப்படியே நினைத்துக்கொண்டிருக்கிறோம்.

ஸ்ரீமான் கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரியார்

# V. M. SRINIVASAN

## Devotee & Artist

## வை. மு. ஸ்ரீநிவாஸன் பக்தன், கலைஞன்

### முன்னுரை

வை. மு. ஸ்ரீநிவாசன் எனக்கு ப்ரிய நண்பன். அவனை என் மகனை நேசித்து வந்ததுபோல் நேசித்து வந்தேன். அவனும் என்னிடத்தில் அளவற்ற அன்புடனும் பணிவுடனும் கூடியிருந்தான். அவன் ஒரு ஒப்பற்றகலைஞன்; பக்தன். ஒரு சமயம் அவன் என்னிடம் வந்திருந்த சமயத்தில், இப்பொழுதுஜகன்மோகினியில் பிரசுரமாகிவரும் "காளிதாசர் கனவு" என்ற கற்பனையான தொடர் கதையை எழுதிக் கொண்டிருந்தேன். பரமசிவன் பார்வதியிடத்தில் "உன் மகனை உன் மடியில் வைத்துக் கொள்" (**ஸ்வபுத்ர முத்ஸங்கதலே நிதேஹி**) என்று கூறவும், பார்வதி "அந்த மகனைத் தழுவிக்கொள்ள ஆசையுடன் மகிழ்ந்தாள்" — (**தம்க்ர ஹீ து முத்கண்டி தயானஸா பூத்**)— என்ற சம்பவத்தை மகாகவி வர்ணித்து "குழந்தை பிறந்தால் எந்த ஸ்திரீதான் இன்பத்தின் உச்சநிலையை அடையாமல் இருக்கமுடியும்" ("**புத்ரோத்ஸவே மாத்யதிகா ஹர்ஷாத்**") என்ற உயர்ந்த எண்ணத்தைக் கூறுமிடத்தை வாசித்துக் காட்டினேன். ஸ்ரீநிவாசன் உத்தம ரஸிகன். அந்த வர்ணனையை அளவு கடந்த ஆனந்தத்துடன் ரஸித்தான். இவ்வளவு நுட்பமான பரந்த ஆழ்ந்த மனமுடையவனுக்கு பூர்ணயுளைக் கடவுள் கொடுக்கவில்லையே என்று யாவர்க்கும் அளவு கடந்த துயரம். அவனுடைய கலையும் பக்தியும் மிகவும் பாராட்டத்தக்கவை. காளிதாசர் "ரகு வம்ச"த்தில் கூறுவதுபோல் "அவன் தன்னுடைய பெற்றோரிடமிருந்து வேற்றுமையற்ற ஒளி; தீபத்தினிடத்தில் ஏற்றிய தீபம்போல் இருந்தான்" ("**நகாரணத் ஸ்வாத் பிபிதே குமார: ப்ரவர்திதோ தீப இவப்ரதீபாத்**"). அப்படி வம்ச பரம்பரையாக வந்த கலை ஒளியை நான் கூற விரும்புகிறேன். அவனுடைய நூல்களின் பெயர்களான "இருளில் ஒளி", "உதய சூரியன்" என்றே அவனைக் குறிப்பிடலாம். இதுதான் இந்தக் கட்டுரையின் இதயம்.

ஆங்கிலத்தில் யாவருமறிந்த ஒரு முதுரையை இங்கே குறிப்பது பொருத்தமாகும். அது "தேவர்களுடைய

அன்பைப் பெற்றவர்கள் இளமையில் இறந்துவிடுகிறார்கள்" ("Whom the Gods love die young") என்ற பழமொழி. இதன் பொருள், தெய்வீக அருளைப் பெற்றவர்கள் நீண்ட ஆயுளுடன் இருக்கமாட்டார்கள் என்று அல்ல; அப்படிக் கலைச் செல்வமும் அருட் செல்வமும் நீண்ட ஆயுட் செல்வமும் ஒருங்கே அமைந்தவர்களும் இருந்திருக்கிறார்கள். அந்த முதுரையின் உட்பொருள் என்னவென்றால் இளமையும் கலையும் அருளும் பெற்றவனைத் தேவர்கள் தங்களுடைய தோழனாக விரும்புகிறார்கள் என்பதுதான். இதன் உட்கருத்து இளமையும் கலையும் அருளும் பெற்றவனைத் தேவனாகக் கருதவேண்டும் என்பதுதான். தேவர்களுக்கு மாறாத இளமை, மாறாத கலை, மாறாத அருள் உண்டு. வேறு ஒரு உட்கருத்தும் உண்டு: இளமையும், கலையும், அருளும் நிறைந்தவனைக் கடவுள் விரும்பினால் அவன் மகிழ்ச்சியுடன் பூத உடலைக் களைந்து, தெய்வீக உடல் பெற்று, தெய்வீக உலகத்தில் களித்து, மனித உலகத்திற்கும் இன்பத்தையளிப்பான். அவனுக்கு ஆன்ம ஸ்வரூபம் உள்ளங்கை நெல்லிக்கனி போல் நன்கு விளங்கும். இந்த உண்மையை பாகவதத்தின் ஆறாவது ஸ்கந்தத்தில் 14, 15, 16 அத்தியாயங்களில் சித்திர கேது உபாக்யானத்தில் தெளிவாக அறியமுடியும்.

கலை சோதியாகவும், யோக சோதியாகவும், அருள் சோதியாவும் விளங்கும் சுத்தானந்த பாரதியார் ஸ்ரீ அரவிந்த ஆசிரமத்தில் தவமிருந்த காலத்தில் ஸ்ரீநிவாசனுடைய முதல் நூலுக்கு எழுதிய முகவுரையில் பின்வருமாறு அழகாகவும் பொருத்தமாகவும் கூறுகின்றார். "தமிழருக்கு அறுபத்தைந்து முதல்தரமான நாவல்களை அளித்த கதை ராணி வை. மு. கோதைநாயகியம்மையாரின் புதல்வர் நமது ஆசிரியர். இவரது கதைச் சுவையிலும் அன்னையின் கற்பனையழகும் உணர்ச்சிக் கனலும் ததும்புகின்றன.

உதய சூரியன் வை. மு. ஸ்ரீயின் முதல் நாவலாயிருந்தும் முதல்தரமாக அமைந்திருக்கிறது. முதல் வரியைப் படித்தால் வாசகர் கடைசி வரி வந்ததும் 'இன்னும் கதை நீளாதா' என்னும்படி காட்சிப் படலங்கள் விறுவிறுப்பாகச் செல்லுகின்றன. எளியநடை, உள்ளத்திலிருந்து வந்த சொற்கள், நவரஸ பாவனைகள், விரசமில்லாத காதல் ரஸம், கம்பீரமான வீரச்சுவை, உலகியல்பின் மேடு பள்ளங்களைச் சித்திரித்துக் காட்டும் அனுபவத் திறமை ஆகிய கதையிலக்கணங்களெல்லாம் உதய சூரியனுக்குக் கிரணங்களாக அமைந்திருக்கின்றன.

உதய பாஸ்கரன் கதை வை. மு. ஸ்ரீயின் மனத்தில் உதித்த சொந்தக் கதைதான். சரித்திரக் கதை போல் கற்பனை செய்திருக்கிறார்.

ஆசிரியர் தமது வக்கீல் தொழிலைக்கூட நிராகரித்து, ஹைகோர்ட்டிலிருந்து கடற்காற்று வாங்கும் இன்பத்தையும் ஒதுக்கித் தள்ளி, ஜகன்மோகினி சேவையில் தன்மயராயிருக்கிறார். சிறந்த படிப்பும், காலத்திற்கேற்ற அறிவும் கொண்ட இவர், எழுத்துலகிற்குச் செய்துள்ள தியாகத்தைத் தமிழர் அறிந்து அவர் உள்ளத்தில் மலரும் இலக்கியங்களை ஆதரிக்கவேண்டும்.''

இந்த உத்தமருடைய பேரறிவையும் கலை ஒளியையும் நான் நன்கு அறிந்து அனுபவித்து அவருடைய பெருமைகளை விளக்கும் நூலை நான் இயற்றியிருப்பதால், வை. மு. ஸ்ரீயின் குணங்களை நான் கூறுவதற்குமுன் அவருடைய மதிப்புரைக்கு முதல் ஸ்தானம் கொடுத்தேன். சங்கராசார்யார் பிரஹ்ம சூத்திர பாஷ்யத்தில் (I, 1, 2) ஒரு நூலில் விளங்கும் ஞானத்தைவிட நூலாசிரியருடைய ஞானம் பரந்திருக்கும் என்று கூறியிருப்பது உயர்ந்த உண்மை. வை. மு. ஸ்ரீயின் குணங்கள் அவருடைய நவீனங்களிலும் பக்தி நிறைந்த கட்டுரைகளிலும் விளங்கினாலும் அவருடன் நன்கு பழகினவர்களுக்கு அவருடைய நூல்களைப் படிப்பவர்களைக் காட்டிலும் அவருடைய குணாதிசயங்களை நன்கு உணரமுடியும். அறிவும் அமைதியும் அன்பும் அருளும் நிறைந்தவர். அவருடைய மனதில் சினம் எழுந்து நான் பார்த்ததே இல்லை. அவருடைய நாவில் இருந்து கடுஞ்சொற்கள் வந்து நான் கண்டதே இல்லை. தன்னால் இயன்றவரையில் பிறருக்கு ஆறுதல் கூறி நன்மை செய்துகொண்டே இருப்பார். நம்முடைய தாய் நாட்டின் சோதியாக விளங்கும் மகாகவிகள் மகாத்மாக்களிடத்தில் பக்தி நிரம்பிய உள்ளம் படைத்தவர். அவர்களுடைய நூல்களை ஊடுருவிப் பார்த்து ஆராய்ச்சி செய்து ரஸித்து ஆர்வத்துடன் வெளியிடும் ஆற்றல் வாய்ந்தவர்.

## நவீனங்கள்

**உதயசூரியன்** வை.மு.ஸ்ரீநிவாஸன், M.A.B.L.
முதல் நவீனம் - ரூ. 1-4-0

வை. மு. ஸ்ரீயின் முதல் நவீனம் உதய சூரியன் என்று என்னால் முன்பே கூறப்பட்டது. இது 1944-ம் ஆண்டு நவம்பர் மாதத்தில் வெளி வந்தது. இது சரித்திரக் கதையல்ல. கற்பனைக் கதை. அது ஐந்து சமஸ்தானங்

களைப் பற்றியது. அவை மங்களபுரி, சிம்மபுரி, ஆனந்தபுரி, அந்தரபுரி, அமரபுரி, மங்களபுரி. அரசனும் அரசியும் கருணாகரன்-காத்யாயனி. அவர்களுக்கு இரண்டு அரச குமாரிகள் (ரத்னமாலா, ஹேமலதா). இரண்டு அரச குமாரர்க்ள் (பாஸ்கரன், ஸாகரன்). ஸ்ரீவத்ஸர் ராஜகுரு, குணசேகரன் மந்திரி, வீரநாதன் ஸேனாதிபதி, மைத்ரேயி அரசன் தங்கை. சிம்மபுரி அரசன் பலவந்த சேனன் சூழ்ச்சியால் கருணாகரன் இறக்கவும் ராணியும் உயிர் துறந்து விடுகிறாள். பாஸ்கரன் அரசனான பிறகு சிம்மபுரி அரசன்மீது படையெடுத்து வஞ்சம் தீர்த்துக் கொள்ளுகிறான். ஆனால், சிம்மபுரி இளவரசி பத்மமுகியிடம் அவனுக்குக் காதல் ஏற்படுகின்றது. ஷேக்ஸ்பியருடைய ரோமியோ-ஜூலியெட் என்ற நாடகம் போல் கதை விரிகின்றது. ஆனால், அதைப்போல் காதலர்கள் மரணத்தில் முடியாமல் மணத்தில் முடிகின்றது! தமிழ்நடை அழகாக இருக்கின்றது. கதையும் நாடகமாக நடிப்பதற்கும் பொருத்தமாகவே எழுதப்பட்டிருக்கின்றது. ஆனாலும், இந்த ஜனநாயகக் காலத்தில்—குடியரசுக் காலத்தில்—அரசர்கள் மறைந்து அரசியல் முறைகள் மாறியிருப்பது தவிர சாதாரண சமூக சம்பவங்களை விறுவிறுப்பாகவும் உணர்ச்சி ததும்பவும் எழுதுவதே நவீன முறையாய் விட்டது. இந்த நவீனத்தில் ஒரு அற்புதம் காணப்படுகின்றது. முன் கூறப்பட்ட ஐந்து நாடுகளும் ஒரு சமஷ்டிநாடாக்கப்பட்டு **பாஸ்கர நாடு** என்று கூறப்படுகின்றது. இப்படி இந்த நவீனத்தின் முடிவான அமைப்பு இன்றைய தினம் முழங்குகின்ற பல நாடுகளின் ஒன்றுபட்ட இணைப்பும் அமைப்புமாக இருப்பது போற்றக் கூடிய ஆச்சர்யமாகும்.

## மதமா, மனமா?

**வை.மு.ஸ்ரீநிவாஸன், M.A.B.L**
**இரண்டாவது நவீனம்-ரூ. 1-4-0**

உதய சூரியன் போக்கு உயர்தர மக்கள் வாழ்க்கை முறையென்று கூறினேன். ஆனால், 1946-ம் ஆண்டு ஜூன் மாதம் வெளிவந்த இந்த இரண்டாவது நவீனம் காந்தி யுகத்தில் தற்கால வாழ்க்கை தற்கால சம்பவங்களைச் சித்தரிக்கின்றது. வீரபத்திரன் என்ற ஹரிஜன் தன் மனைவி காளியம்மையுடனும் தன் மகள் மாரியம்மையுடனும் தன் கிராமம் நாராயணகிரியிலிருந்து பட்டினம் சேருகிறான். அது நரசிங்கப்பட்டினம். அரசர் தாழ்த்தப்பட்டவர்களுக்கு சலுகை காட்டி எல்லோருடனும் சமஉரிமை அளிக்கிறார். ஆசிரியர் நவீன இந்தியாவை கதை உலகம்

போல் இப்படிச் சித்திரித்துக் காட்டுகிறார். "பக்தி செய்வதற்கு குலம் கணக்கில்லை. ஹிந்துக்கள் எல்லோரும் ஓர் குலம். ஆலயந் தொழுதல் எல்லோருக்கும் பிறப்புரிமையன்றோ?" இப்படி புதுமை முறையில் விறுவிறுப்பாக இந்த நவீனம் ஓடுகின்றது. ஆனால் குப்பை வண்டி ஓட்டிப் பிழைத்த வீரபத்திரன் மாட்டு வண்டியின்மேல் ஒரு லாரி மோதி, அவன் கீழே விழுந்து அடிபட்டதால் வலது காலை ரண வைத்தியர்கள் வெட்டவேண்டி ஏற்பட்டது. அவன் குடும்பம் அதனால் கிராமத்திற்கே திரும்பிற்று. அதே காலத்தில் கிணற்றில் குளித்துக்கொண்டிருந்த கோபிநாத சாஸ்திரி மாரியம்மை தன்னருகில் சென்றதால் சினந்து ஒரு பெரிய மண்ணாங்கட்டியை வீசுகிறார். அது அவள் நெற்றியில் தாக்கி காயப்படுத்துகின்றது. இச்சமயத்தில் வீரபத்திரன் கால் ரணம் அதிகப்பட்டு இறக்கிறான். அவன் சொற்படி காளியம்மையும் மாரியம்மையும் நரசிங்க பட்டணம் சென்று கண்ணியதாஸ் என்ற கண்ட்ராக்டரிடத்தில் சிற்றாள் வேலை செய்து பிழைக்கிறார்கள். அவன் மேரிக் குப்பத்தில் மூன்று பங்களாக்கள் கட்டுகிறான். பக்கத்திலுள்ள காளிகிரி கிராமத்தில் குடியிருக்கிறார்கள். பிறகு அந்த மூன்று பங்களாக்களில் ஒரு பங்களாவில் குடிவந்த கல்லகன் துரைக் குடும்பத்தில் வீட்டு வேலையில் அமர்கிறார்கள். சடையன் அங்கே பட்லராக இருக்கிறான். மாரி பள்ளிக்கூடத்தில் சேர்ந்து நன்கு படிக்கிறாள். மேரிக் குப்பத்தில் கிறிஸ்தவ மதப் பிரசாரமும், ஹிந்துமத பிரசாரமும் நடைபெறுகின்றன. ஒரு நாள் திடீரென்று மாரி மறைந்து போகிறாள். ரோஜாப்பட்டி மிஷன் ஆஸ்பத்திரிக்குச் சென்று நர்ஸ் வேலை கற்றுக் கொள்ளுகிறாள்.

இது இப்படி இருக்க, கோபிநாத சாஸ்திரியின் பிள்ளை ஜகந்நாதன் எம்.பி.பி.பிஸ். பரீக்ஷையில் தேறி புது நாகரீக உடையுடனும் தோற்றத்துடனும் வந்து சேருகிறான். பிறகு ஆங்கில நாட்டுக்குச் சென்று வைத்தியத்தில் உயர்தரப் படிப்பைப் படித்துத் தேர்ச்சி யடைகிறான். ஆனால், கிறிஸ்தவ மதத்தைத் தழுவி ஜானதன் என்ற பெயருடன் விளங்கி ஜேன்கீல் என்ற பெண்ணைக் காதலிக்கிறான். இந்தச் சம்பவத்தை கோபிநாத சாஸ்திரி சீமையில் பாரிஸ்டர் பரீக்ஷைக்குப் படிக்கும் விச்வநாதன் கடிதத்திலிருந்து அறிந்து மனமுடைந்து துயரத்திலாழ்ந்து விடுகிறார். அவருடைய மனைவி துயரத்தால் இறந்து போகிறாள். நிர்மலானந்த ஸ்வாமிகளுடைய அருட் சொற்பொழிவைக் கேட்டுத் தன் சொத்தை எல்லாம் தர்மத்திற்கு அவர் அர்ப்பணம் செய்கிறார். தர்ம சாஸனத்தில்

மாரிக்கு 10,000 ரூபாய்கள் தருகின்றார். நிலங்களை ஹரி ஜனங்களுக்கு அளிக்கின்றார். இதைப் பத்திரிகை மூல மாக ஜானதன் அறிகின்றான். ஜேன்நீல் என்ற பெண் அவனை மணந்து கொள்ளவில்லை. அவன் மனம் தந்தை யையும் தாய் நாட்டையும் நாடுகின்றது. இந்தியாவுக்குத் திரும்பி வந்து டாக்டர் குமார் என்ற பெயருடன் ஒரு ஆஸ் பத்திரியில் டாக்டராக அமர்கின்றான். அங்கேயே மாரி நர்ஸாக வருகின்றாள். கோபிநாத சாஸ்திரி கொடுத்த 10,000 ரூபாய்களை மறுத்து அந்தப் பணத்தைக் கொண்டு தன் தந்தை பெயரில் வார்டு ஏற்படுத்த வேண்டிக் கொள் கிறாள். அவரும் அப்படியே செய்கிறார்.

குமாரும் மாரியும் காதலர்கள் ஆகிறார்கள். ஆனால், அவன் கோபிநாத சாஸ்திரியின் மகன் என்று அறிந்த பின் கலப்பு மணம் வேண்டாம் என்று தீர்மானித்து உலக சேவையில் ஈடுபட்டு வீரபத்திரன் வார்டில் நர்ஸாக அமர் கிறாள். ஒரு சமயம் கோபிநாத சாஸ்திரி காரில் சென்று கொண்டிருந்தபொழுது புயலால் வீழ்த்தப்பட்ட ஒரு பெரிய மரத்தின் கிளை கார்மீது விழுந்து கார் உடைந்து சாஸ்திரிக்கு நடு மண்டையில் பலத்த காயம் ஏற்படுகிறது. குமார் இதைக் கேட்டு ஓடி வந்து புலம்புகிறான். அவனு டைய வைத்தியத்தாலும் மாரி கண்காணிப்பாலும் சாஸ் திரி பிழைக்கிறார். குமார் ஹிந்து மதத்தில் சேர்த்துக் கொள்ளப்படுகிறான். அவனும் அவளும் அவருடைய குழந் தைகளாகவே அண்ணன் தங்கையாக வாழ்கிறார்கள்.

இப்படி தற்கால சமூகக் கதையாக விறுவிறுப்புடன் வேகமாக உணர்ச்சி ததும்பும் முறையில் கதை ஓடுகின் றது. இந்தப் போக்கில் ஆசிரியரின் தாய் வை. மு. கோதைநாயகியின் கதைகளின் விசேஷமான அழகுகளைக் காண்கிறோம். நூறு கதைகளுக்கு மேற்பட்ட அவளுடைய கதை உலகத்தின் பெருமைகளைப் பற்றி நான் சில ஆண்டு களுக்கு முன் அவளுடைய கலை வெள்ளி விழா நினைவு மல ரில் கூறியிருக்கிறேன். அந்த வெள்ளி விழாவுக்கு நான் தலைவனாக இருந்ததை நான் பெரும் பாக்கியமாகக் கருது கிறேன்.

கதையில் இருப்பதுபோல் இதயத் துடிப்பை உண் டாக்கும்சம்பவங்கள் உலகவாழ்க்கையில் இருக்குமாஎன்று சிலர் கேட்கலாம். கலை நியதியைத் தாண்டிக் கூட நிற் கலாம் என்று அலங்கார சாஸ்திரக் கொள்கை. சாதா ரணக் காதற்கதை யாவரும் எழுதக் கூடும். காதலையும் சமூக சேவையையும் கடவுள் பக்தியையும் இணைப்பது வை. மு. குடும்பத்தின் உயர்ந்த வழி. நான் அந்த வழியைப் போற்றுகிறேன்.

# அவஸரமூர்த்தியின் அபூர்வ டயரி

வை.மு.ஸ்ரீநிவாஸன், M.A.B.L

மூன்றாவது சித்திரம் - ரூ. 1-8-0

இது ஆசிரியரின் மூன்றாவது நவீனம். இது 1948-ம் ஆண்டு ஜூன் மாதம் பிரசுரிக்கப்பட்டது. "இந்நூல் கதைக் கொத்து அல்ல, கட்டுரைத் தொகுதியுமல்ல; அனுபவம், கற்பனை இரண்டும் கலந்த உணர்ச்சி வெள்ளம்" என்று ஆசிரியர் கூறுகின்றார். இது ஒரு கதம்பம். அதில் பல ரகங்களான கதைகளும், கட்டுரைகளும் கலந்து கிடக்கின்றன. கற்பனை டயரி என்ற கலைத் தந்திரம் அவைகளை இணைத்திருக்கின்றது.

"நவீன பிரஹ்மதேவன்" என்ற கலை அமைப்புக் கட்டுரையில் கலைஞர்களுடைய திருக்கூத்தையே கூத்தாட்டி வைக்கின்றார். சித்திர நிபுணர்கள் பலவித வர்ண மைகளும், ப்ரஷ்ஷுகளும், பென்ஸில்களும், ரப்பர்களையும் ஆயுதமாகக் கொண்டும் பழைய உலகங்களை மாற்றிப் புதிய உலகமாக்குகிறார்களல்லவா?

"நவீனங்களின் முன்னோர்" என்ற ரஸமான கட்டுரையில் வை. மு. ஸ்ரீ நவீனத்திற்கு தாயகம் ஆங்கில நாடல்ல பாரத நாடுதான் என்று விளக்குகிறார். இந்த உண்மையை பலர் மறந்து விடுகிறார்கள். விக்கிரமாதித்தன் கதை என்ற வேதாள பஞ்சவிம்சதி, முப்பத்திரண்டு பதுமைகள் கதை, பஞ்ச தந்திரக் கதை, ஹிதோபதேசக் கதை, பிருகத் கதை, கதாஸரித்ஸாகரம், காதம்பரி, தசகுமாரசரிதம், வாஸவதத்தை, புத்த ஜாதகக் கதைகள் முதலிய கதைகள் உலக நவீனங்களுள் வெகு பழமையான புராதனங்கள்.

"கடவுள் இருக்கிறார்" என்ற சிறு கதையில் கொலைக் கேஸில் ஜூரியின் தவறான தீர்ப்பை கடவுள் நியதி மாற்றி விட்டது என்று ஆசிரியர் விளக்குகிறார்.

"பிரமித்து விட்டோம்" என்பது ஒரு நகைச் சுவைத் துணுக்குக் கதை. 150 தோசைகள் போதும் என்று நினைத்தவர் காலணா அளவுள்ள தோசைகளைக் கண்டு 1000 தோசைகள் கேட்காமல் போய் விட்டோமே என்று ப்ரமித்து விட்டார்!

"கீர்த்தனமணி"யில் தியாகராஜருடைய கீர்த்தனைகளின் தலைப்புகளைக் கொண்டு மனைவியின் சமையலை ரஸிக்காத கணவனும் அவளும் வாக்குவாதம் செய்வதைசித்திரிக்கிறார்.

"ஒரு வாரம்" என்ற கட்டுரையில் ஆசிரியரின் கற்பனை தாவித் தாவி அங்குமிங்கும் குதித்தோடுகின்றது. அதில் மிகுந்த ரசமான சில அம்சங்களைக் கூறுகின்றேன்: சுத்த சங்கீதம் இளநீரை ஒத்தது; சினிமா சங்கீதம் கள்ளை ஒத்தது; சுத்த சங்கீதம் ரோல்ஸ்ராய்ஸ் என்றும், ஸினிமா சங்கீதத்தை ஜீப் கார் என்றும், கூறுகின்றார். முற் கூறப்பட்ட சங்கீதம் சுத்தம், கலை, என்றும் பின்கூறப் பட்ட சங்கீதம் சத்தம், கொலை என்றும் ஒப்பிடுகின்றார்.

ராஜாஜியின் 70-வது பிறந்த தினத்தை உலகம் கொண்டாடுவதில் அவருடைய பகைவர்களும் "சமுத்திர அலைகளில் சேரும் கால்வாய்களைப் போல்"—கலந்து கொண்டார்கள் என்று நகைச்சுவைததும்பக் கூறுகிறார். மீண்டும் "ராஜாஜி நீடூழி வாழ்ந்து தமிழ்நாட்டின் தேர்ந் தெடுக்கப்பட்ட கவர்னராகவும், பிறகு அகில இந்திய யூனி யன் ப்ரெஸிடெண்டாகவும் நாட்டுக்குப் பணி புரிவாராக" என்று வாயார வாழ்த்துகிறார். ஹரிஜனங்கள் பிர வேசித்ததால் ஆலயச் சிறப்பு குறையாதென்று கூறி, தில்லை கோவிந்தராஜப் பெருமாளையும் நடராஜப் பெரு மானையும் "இரு ராஜர்கள்" என்ற கட்டுரையில் வர்ணிக் கின்றார்.

"ஸர்வம் ஸங்கீத மயம்" என்ற கட்டுரையில் ஆசிரியர் திருவையாற்றில் நடக்கும் தியாகராஜ உத்சவத்தை ரஸ மாக வர்ணிக்கிறார்.

"இந்திரனின் புதல்வன்" என்ற கட்டுரை விக்கிர மாதித்தன் தந்தையான கந்தர்வசேனனுக்கு பகலில் கழுதையாக இருக்கும்படி சாபம் ஏற்பட்ட கதை.

"ஸ்ரீ கிருஷ்ணமிர்த"த்தில் ஆசிரியர் பகவத் கீதையின் பெருமையை நன்கு விளக்குகின்றார். "கண் கொள்ளாக் காட்சி"யில் குமரி முனையில் விளங்கும் குமரியை வர்ணிக் கிறார்.

"அன்பின் ஆற்றலில்"யஜமானனுக்குத் துரோகம் செய்த வேலைக்காரனுடைய மனத்துடிப்பை விக்டர் ஹியூகோ "LesMiserables" என்ற நவீனத்தில் சித்திரிப்பதுபோல் உருக்கமாக உருவாக்குகிறார்.

"வாழ்வின் மேடு பள்ளங்களில்" உலகத்திலுள்ள விசித் திரமான வேற்றுமைகளைச் சித்திரிக்கிறார். உதாரண மாக மனைவி வீணா நாதத்தில் லயிக்கும்போது கணவன் தூக்கத்தில் லயிக்கிறான். "அவள் துளசி மாடத்திற்கு கற்பூரம் ஏற்றி ஆராதிக்கிறாள்; அவன் ஸிகரெட்டை ஏற்றி நாகரீகத் தெய்வத்திற்கு ஹோமம் வளர்க்கிறான்"

“எதிர் பாராத அனுபவத்”தில் ஒரு உல்லாச யாத்திரையையும் அதில் ஏற்படும் சம்பவங்களையும் வர்ணிக்கிறார்.

“பொன் விழா”விலும், “ஆறுதலும் கிளர்ச்சியும்” என்ற கட்டுரையிலும் கவி யோகி சுத்தானந்த பாரதியாரின் கலைப் பெருமைகளை வெகு அழகாகப் பொங்கும் மகிழ்ச்சியுடன் ஆசிரியர் கூறுகின்றார்.

“திருப்பதி யாத்திரை”யில் பலர் திருப்பதி தரிசனத்திற்குப் போனபொழுது ஏற்பட்ட ரஸமான சம்பவங்களையும் சம்பாஷணைகளையும் சித்திரிக்கிறார்.

# ராணி சீலாவதி

வை. மு. ஸ்ரீநிவாஸன், M.A.B.L.
நான்காவது நவீனம் - ரூ-1/-

இது வை. மு. ஸ்ரீயின் நான்காவது நவீனம். இது “உதய சூர்யனை”ப்போல் பெருமக்களைப் பற்றியும் உயர்ந்த சம்பவங்களைப் பற்றியும் ஏற்பட்டு ஆங்கிலத்தில் “ரோமான்ஸ்” (romance) என்று கூறப்படும் புராதன நாவல் நடையில் அமைந்துள்ளது. வைரபுரி ராணி சீலாவதி மேன்மையான தூய்மையான மனமுள்ளவள். ஆனால் அரசன் தாசரதி காமுகன், ஆத்திரக்காரன்; ராமானந்தர் ராஜகுரு, சேகரன் மந்திரி, ஸத்திய கீர்த்தி சேனாதிபதி. மிதுனபுரி அரசன் ஜயச்சந்திரன் மகள் நிர்மலாவின் ஸ்வயம்வரத்திற்குமுன் அவள் காதலித்த புவனபுரி மன்னன் வீரநாதன் அவளைத் தூக்கிச்சென்று மணஞ்செய்து கொள்கிறான். ஜயசந்திரன் தாசரிதியின் உதவியைக் கோரி அவனுக்கு வீரநாதன் தங்கை ஸ்வர்ணலதையை அடிமையாக்குவதாக உரைக்கிறான். ஸ்வர்ணலதையிடம் ஆசைக்கொண்டு தாசரிதி வீரநாதன்மீது படையெடுக்கிறான். ஆனால் ஸ்வர்ணலதையும் போரில் எதிர்த்து உயிர் துறக்கிறாள். நிர்மலாவும் இறக்கிறாள். வைரபுரிமக்கள் அரசனை வெறுக்கிறாள். அரசன்ராணியைக் கொஞ்ச காலம் நாட்டைஅரசாட்சி செய்து மக்கள் மனதைச் செம்மைப் படுத்தச்சொல்லி நாட்டைவிட்டு நீங்குகிறான். ராணி கல்வி நிலையங்கள், தர்மசாலைகள், மருத்துவ நிலையங்கள் முதலியவற்றை அமைத்து மக்களுடைய மதிப்பைப் அடைகிறாள். ஸத்தியகீர்த்தித் தீங்கு நினைக்கிறான். ஆனால் அற வாழ்க்கையிலீடுபட்ட அவன் மகன் உத்தமனால் அந்த சதி

ஆலோசனை உடைகிறது. ஸத்தியகீர்த்தி ராணியால் கைது செய்யப்பட்டு உதவி சேனாதிபதி அமரநாதன் சேனாதிபதி யாக ராணியால் நியமிக்கப்படுகிறான்.

அரசன் திரும்பி வந்து ஸத்தியகீர்த்தியுடன் பேசும் பொழுது துரோகி ஸத்தியகீர்த்தி சீலாவதி மந்திரிமீது கள்ளநட்பு இருப்பதாகக் கூறி அரசன் மனதைக் கலைத்து விடுகிறான். அரசன் அவனை மீண்டும் சேனாதிபதியாக்கி ராஜகுருவையும் ராணியையும் மந்திரியையும் சிறையில் வைக்கிறான். ஆனால் உத்தமன் முயற்சியால் நாட்டில் புரட்சி ஏற்படுகிறது. வீரநாதன் இச்சமயம் பார்த்து வைர புரிமீது படை எடுக்கிறான். ஆனால் புரட்சிக்காரர்களும் படைகளும் ஒன்றுசேர்ந்து வீரநாதன் படையைத் தாக்கு கிறார்கள். சத்தியகீர்த்தி தற்கொலை செய்து கொள்ளு கிறான். ஒரு யுவன் அவர்களுடன் கூட இருந்து பெரும் போர் செய்கிறான். அவனுடைய அம்பால் வீரநாதன் இறக்கிறான். அவனும் வீரநாதன் அதே சமயத்தில் எய்த அம்பால் இறக்கிறான். அந்த யுவன் ஆண் வேஷத்தில் வந்த சீலாவதி. நாடெல்லாம் துயரத்தில் வருந்துகிறது. அரசனும் மிகவும் வருந்துகிறான். முடிவில் அவன் உத்த மனை புதல்வனாக ஏற்றுக்கொண்டு சீலாவதிக்கு ஞாபகச் சின்னமாக சிலையை அமைத்து அரியணையில் அமர்த்தி அவள் பெயரால் அரசாட்சி செய்கிறான். இப்படிக் கதை விறுவிறுப்பாகச் சென்று அமைதியில் முடிவடைகின்றது.

## பெண்மணிக்கனல்

சரித்திரஜோதி

வை. மு. ஸ்ரீநிவாஸன், M.A.B.L

ஐந்தாவது சித்திரம் ரூ 1/-

இது சரித்திர ஜோதியான நவீனம். மைசூர், ஹைதர், திப்பு ஆக்ரமிப்பிலிருந்து விடுவிக்கப்பட்டு, ஹிந்து அரசர் களுடைய ஆட்சிக்கு எப்படித் திரும்பி வந்தது என்ற அற் புத சரித்திரத்தை ஆசிரியர் அழகாக உருவாக்குகிறார். சரித்திர நுட்பங்களை எப்படி அறிந்து விவரமாக வெளி யிட்டார் என்று ஆச்சர்யப்படும்படி நூல் அமைந்திருக் கிறது. தேவஜா அம்மணி அரசியாக இருந்தபொழுது சாம்ராஜ்யம் உருக்குலைந்து போயிற்று. ஆனால் மகா ராணி லக்ஷ்மியின் மனம் தளரவில்லை. அவள் ஒரு வீராங்கனை. திப்புசுல்தான் வீழ்ச்சிக்கு அடிகோலி பிரிட்டிஷ் அரசாட்சியின் உதவி பெற்றபின் நல்லகாலம் பிறந்தது. லக்ஷ்மிராணியின் திட்டம் வெற்றி பெற்றது. அரசாட்சி இந்து மன்னருக்கு வந்தது.

# தியாக பலி

இதுவும் சரித்திரஜோதியான நவீனம். இது செஞ்சி ஸமஸ்தானத்தைப் பற்றியது. ஆனால் "செஞ்சி சிதைந்தது, அதன் பின்னரே சென்னை உயர்ந்தது" என்ற ஆசிரியருடைய எண்ணம் சிந்திக்க வேண்டிய விஷயம். சென்னை உயர்ந்ததற்கு பற்பல காரணங்கள் உண்டு. நானும் செஞ்சி சென்று கண்டு களித்து, சரித்திர ஆராய்ச்சித் துறையில் உழைத்தேன். விஜயநகர் சமஸ்தானம் மாதிரி செஞ்சி சமஸ்தானம் ஏன் தோன்றி மறைந்தது? கடவுளுக்குத்தான் தெரியும்! முஸ்லிம் ஆங்கில சாம்ராஜ்யங்கள் ஏன் தோன்றி மறைந்தன? கடவுளுக்குத்தான் தெரியும்! ஒற்றுமையிலும் ஆண்மையிலும் வலிவு இழந்த ஹிந்துக்களுக்கு கீதையின் பாடத்தை மறுபடியும் கற்பிக்கவா? செஞ்சி ராஜ்யம் வடவேங்கடம் முதல் ஸ்ரீரங்கம்வரை பரவியிருந்தது. என்ன அற்புத ஜோதி! செஞ்சியை ஆண்ட தேசிங்கு (தேஜஸ்ஸிங்) மகா வீரன். அவன் புலியைக் கொன்றதையும், சிங்கத்தை வென்றதையும், பாராசாரிக் குதிரையை அடக்கியதையும் ஆசிரியர் பெருமிதத்துடன் கூறுகிறார். தௌலத்கானுடைய அதர்மப் போர் வெறியாலும், துரோகத்தாலும் அரசனுடைய நீலவேணிக் குதிரையும் மாண்டது. அரசனுடைய நண்பன் மகமத்கானும் மாண்டான். பாராசாரிக் குதிரையும் நவாப் கையால் மாண்டது. தேசிங்கும் தன்னைத்தான் மாய்த்துக் கொண்டான். அவனுடைய ராணியும் கணவனின் சடலத்துடன் தீக்குளித்து சுவர்க்கத்தை அடைந்தாள். ஆசிரியர் துடிப்புடன் கூறுகிறார். "செஞ்ச" என்றால் தெய்வீகக் கோட்டை என்று அர்த்தம்; செஞ்சி என்றால் தியாக பலிபீடம் என்றும் அர்த்தம்." மீண்டும் உணர்ச்சியுடன் கூறுகிறார்:

"தனது நாயகனுடன் உயிர் விட்டு ஸதியான ராணிபாயின் கற்பை மெச்சி, அவ்வுத்தமியின் பெயர் நிலைத்து நிற்க அவள் பெயரால் ஒரு நகரத்தை செஞ்சிக் கோட்டைக்கருகே நாற்பது மைல் தூரத்தில் நிர்மாணித்து நவாப் அதற்கு ராணிப்பேட்டை என்று பெயரிட்டான். அதிசய தம்பதிகளின் அன்பின் எல்லைக்கு அது ஒரு ஞாபகச் சின்னமாகக் கொள்ளலாம். செஞ்சியின் சிதைந்த கோட்டைகள்தான் அங்கு நிகழ்ந்த தியாக பலியின் நிரந்தர ஞாபகச் சின்னமாய் நிற்கின்றன. அங்குள்ள ஒவ்வொரு கல்லையும் தட்டினால் அது கீழ்க்கண்ட வார்த்தை

களையே பேசும் என்று சொல்ல மிகையாகாது! "இணையிலா ஒற்றுமை; இணைபிரியா நட்பு; உண்மை தேசாபிமானம்; வீராவேசம்; தூய்மையின் சிகரம்; அன்பின் எல்லை; அதிசய தம்பதிகள்; விதியின் விளையாட்டு.

பத்தே மாதம் அரசாண்டு 22-வது வயதில் வீர சுவர்க்கம் அடைந்த தேஜஸ்ஸிங்கின் அழியாப் புகழுக்கு வேறு ஞாபகச் சின்னமும் வேண்டுமோ? மலை போன்ற புகழுக்கு அங்குச் சுற்றியுள்ள மலைகளே சாட்சி. சிங்கிபுரம் மலைக் கோயிலில் அரங்கர் சந்நிதி முன் நின்றால், அந்தப் பள்ளி கொண்ட பெருமானும், இந்த பக்தனின் வீர சரிதத்தை ஞாபகமூட்டுவார். இந்த சிறு சரித்திரக் கதை ஜோதி, தமிழருடைய வீரத்தையும், காதல் தூய்மையையும், தெய்வ பக்தியையும், தேச பக்தியையும், ஏனைய சீரிய குணங்களையும் அறிவிப்பதுடன் ஆசிரியருடைய அத்தகைய அரிய பெரிய குணங்களையும் விளக்குகின்றது. அவருடைய தமிழ்மொழி நடையில் பல சிறப்புகள் பரம்பரையாக வந்தவைகள். ஆனால் முக்கியமாக ஏற்பட்ட உடல் பொருளாவிகளைத் தாய்நாட்டுக்கே அர்ப்பணம் செய்யும் இதயத் துடிப்பும் கடவுளிடத்தில் அளவு கடந்த அன்பும் தாயின் அன்பளிப்பே என்று என் உறுதியான எண்ணம்.

## பக்தி நூல்கள்

# இருளில் ஒளி

வை.மு.ஸ்ரீநிவாஸன், M.A.B.L.
ஆறாவது சுடர் ரூ. 1.4.0

### முதல் பாகம்

இந்த நூல் ஆசிரியரின் உள்ளத்தில் ஏற்பட்ட உள்ளொளியையும், பக்தியின் உச்ச நிலையையும் காட்டுகின்றது. ஆங்கிலத்தில் இந்த நிலையை **mysticism** என்று கூறுகின்றார்கள். அது மதங்களைக் கடந்த உள்ளுணர்ச்சியான நிலை. சைவம் வைஷ்ணவம் முதலிய பேதங்களைத் தாண்டி ஆன்மா பரமாத்மா என்ற சமய பாகுபாடுகளையும் கடந்து அறிவு, அன்பு, அருள், ஆனந்தம் என்ற இன்ப வெள்ளம் உள்ளே உயர்நோக்கி எழும் வற்றாத ஊற்றாக **(jet fountain)** ஏற்படும் அற்புத நிலையைக் காண்கிறோம். ஆசிரியர் இந்நூலை ஈரேழு மணிமாலையென்று கூறுகிறார்.

முதல் மணி இருளில் ஒளி. இந்தக் கட்டுரை செங்கல்பட்டு ஜில்லா கலெக்டர் லான்ஸ் ப்ரைஸ் துரையவர்கள்

மதுராந்தகம் ஏரிக்கலிங்கல் உடையாமல் காத்த ராமலக்ஷ்மணர்களைக் கண்கூடாகக் கண்ட கதையை சித்திரிக்கின்றது. இரண்டாவது மணி மகாலக்ஷ்மியின் பெருமையை விளக்குகின்றது. மூன்றாவது மணி பர்த்ருஹரி என்ற அரசனுடைய வாழ்க்கையில் ஏற்பட்ட வைராக்கியத்தை விளக்குகின்றது. நான்காவது மணி பகவத் கீதையின் ஸாரத்தை அளிக்கின்றது. ஐந்தாவது மணி உள்ளத்தில் மிளிரும் பக்திச் சுடரை அறிவிக்கின்றது. ஆறாவது மணி பாகவத புராணம் ஏற்பட்ட சிறப்பைக் கூறுகின்றது. ஏழாவது மணி • ஆழ்வார்களுடைய பாசுரங்களின் ஒளியுடன் விளங்குகின்றது.

### இருளில் ஒளி : இரண்டாம் பாகம்

இரண்டாவது ஏழு மணிமாலையில் முதல் மணி ராம மந்திரத்தின் பெருமையை விளக்குகின்றது. இரண்டாவது மணி கலிஸந்தாரண மந்திரத்தின் உயர்வை உபதேசிக்கின்றது. மூன்றாவது மணி ராமநாம மகிமையைக் கூறுகின்றது. நான்காவது மணி கண்ணன் பக்தியை அறிவிக்கின்றது. 5, 6, 7 மணிகளும் பக்தி விஷயங்களையும் உத்தவர் கோகுலத்தில் கண்ட பக்திப் பெருக்கையும் நன்கு காட்டுகின்றன.

## 2. ஜயந்தி சிந்தனைகள்

இந்நூலும் பக்தி ரஸத்தில் ஊறின நூல். ஹைகோர்ட் நீதிபதி ஸ்ரீமான் W. S. கிருஷ்ணஸ்வாமி நாயுடு இதற்கு ஒரு அழகிய பொருத்தமான முன்னுரையை இயற்றி இருக்கிறார். அதில் அவர் பின்வருமாறு கூறுகிறார்.

> "Well conceived, couched in simple and chaste Tamil, supported by the great sayings of the saints and made attractive by instructive illustrations, this book will be found valuable to every devotee enabling him to have a knowledge of the greatness of the Vaishnavite cult, its philosophy and message. Coming as he does from highly religious and pious family himself and being a true devotee, the author has, by bringing out this publication, added to the already good services he has been rendering to the cause of Hindu religion."

இந்நூலில் நான்கு ஒப்பிலா நாட்களை நாம் காண்கிறோம். முதல் பகுதியில் ஸ்ரீஜயந்தி சிந்தனைகள் விளங்குகின்றன. அதில் ஆழ்வார்கள் பாசுரங்கள், முகுந்த மாலை, கீத கோவிந்தம், கிருஷ்ண கர்ணாம்ருதம், கோபிகா

கீதம், ஸஹஸ்ரநாமம், கீதா சாஸ்திரம் முதலிய அரிய பெரிய நூல்களின் உண்மை உபதேசங்களை நாம் அறிகிறோம். இரண்டாவது பகுதியில் ராமநவமி சிந்தனைகள். அதில் ரா்மாயண த்ரிவேணி, ராம நாடகக் கீர்த்தனைகள், தியாகராஜ கீர்த்தனைகளைக் காண்கிறோம் மூன்றாவது பகுதியில் ஸ்ரீநிவாஸ ஜயந்தி சிந்தனைகள். நான்காவது பகுதியில் ஸ்ரீதேவி ஜயந்தி சிந்தனைகள். இந்தச் சிறு நூலை வை. மு. ஸ்ரீயின் முடிவுரைச் சொற்களுடன் முடிப்பதே மிகப் பொருத்தமான முறையாகும்.

"அறிவிலிகளான நாம் அறிவிற் சிறந்த ஆரியர்கள் அருளிய ஸ்ரீ ஸூக்திகளைக் கொண்டு ஸ்துதி செய்தால் எம்பெருமானுடைய திருவுள்ளம் விரைவில் கனியும்."

### கோதா ஹ்ருதயம்

இந்த அருமையான நூல் அச்சடிக்கப்பட்டு வெளிவரும் நிலையில் இருக்கின்றது. அதில் சூடிக் கொடுத்த சுடர்க் கொடியின் பாமணத்தை நாம் நன்குக் காண்கிறோம். என்றால் முற்கூறப்பட்ட ஆசிரியருடைய பக்திப் பெருக்கையும், பரவசத்தையும் இந்நூலில் பூர்ணமாக ரஸிக்கமுடியும். ஆண்டாள் எப்படி கண்ணன் பக்தியில் ஈடுபட்டு ஆடிப்பாடி அகங்கரைந்து தன் உடல் பொருள் ஆவியெலாம் கண்ணனுக்கே அர்ப்பணித்தாளோ அப்படியே ஆசிரியரும் ஆண்டாளிடத்திலும் கண்ணனிடத்திலும் தன்னைப் பூர்ணமாக அர்ப்பணித்திருக்கிறார். நான் நீதிபதியாக ஸ்ரீ வில்லிபுத்தூரில் 1907-ம் ஆண்டில் முதல் முதலாக அமர்ந்து பக்தியின் உண்மையுருவத்தை அங்கே பல ஆண்டுகளில் கண்டு களித்ததால் ஆசிரியர் கூறியிருக்கும் ஒவ்வொரு சித்திரமும் என் மனதைக் கவர்கின்றது. இந்நூலில் வெகு அழகான ஓவியங்கள் நிறைந்திருக்கின்றன. ஆண்டாள் திருவவதாரம் செய்த திருவாடிப்பூரச் சிறப்பும் மார்கழி மாதம் நடக்கும் எண்ணெக்காப்புத் திருவிழாவின் அழகும் பெருமையும் கண்கொள்ளாக் காட்சிகளாகும்.

முதலில் நாச்சியார் திருமொழியின் 143 பாசுரங்களிலுள்ள பக்தியை நன்கு விளக்கிக் காட்டியிருக்கிறார்.

"ஸர்வ கந்தனென்று ப்ரஸித்தி பெற்ற பகவான் ஆண்டாளுடைய கூந்தலினால் நறுமணம் கமழ்விக்கப்பட்ட மாலைகளாலே விலக்ஷணமானதொரு பரிமளத்தை அடைகின்றான். பகவானுடைய அருள்மழையினாலே உண்டாக்கப்பட்டு ஸம்ஸாரமாகிற கொடிய விஷத்தைத் தொலைக்

கும் விஷயத்தில் அம்ருத நதி போன்றுள்ள கோதா பிராட்டியை ஸத்துக்கள் பணிந்து, உடனே ஸகல தாபங்களும் தணியப் பெறுவார்களாக? ஏனெனில் பகவான் நம்போல்வரை உய்விக்கவே பரம கருணைகொண்டு திவ்ய ப்ரபந்தங்களை அருளிச் செய்வதற்காகவன்றோ ஆண்டாளை அவதரிப்பித்தருளினன்." (பக்கங்கள் 15, 16) பிறகுத் திருப்பாவையின் சிறப்புகளை வெகு அழகாகக் கூறுகின்றார். "அழகிய மணவாளனுக்குப் பூமாலையும் பாமாலையும் ஸமர்ப்பிக்கும் மேன்மையையுடைய சோலைக் கிளி மொழியாளின் தூய நற்பாதமே நமக்குத் துணை." பிறகு ஆசிரியர் கோதையின் இதய ஒலி எப்படி மீரா பக்தியில் எதிரொலித்தது என்று விளக்கியிருக்கிறார்.

"ஜாதி, குலம், வயது என்ற வித்யாஸமின்றி, பாமரர்களாலும், பண்டிதர்களாலும் பாடப்பெறும் பெருமை வாய்ந்த பக்த மீராவின் பாடல்கள். பிராட்டியின் அம்சமான ஆண்டாளும் தேவாம்சம் ரிஷி அம்சமான கோபிகைகளும் கண்ணனிடம் ஈடுபட்டதில் வியப்பேது. சாமான்ய ராஜ குடும்பத்திலுதித்த மீரா எத்தகைய அதிசயமான பக்திக் காதலை வெளியிட்டாள், தன் வாழ்வின் அர்ப்பணத்தால் மதுர கீதத்தால்!........ஸ்ரீஜயந்தி தினத்தன்று கண்ணனுடைய திருமேனி ஜோதியில் கலந்தாள்; அரங்கன் திருமேனியில் ஆண்டாள் கலந்ததுபோல." இந்த உயர்ந்த எண்ணம் இந்நூலின் தனிச்சிறப்பு. ஆசிரியருடைய மனத்தின் மங்கள ஜோதி மக்களுடைய இதயங்களில் எப்பொழுதும் விளங்கும்படி கண்ணன் அருளைச் சிந்திக்கின்றேன்.

---

[24-ம் பக்கத் தொடர்ச்சி]

வளர்ந்து பிறகு அருவத்துடன் மறைந்து விடும்போது நமக்கு ஏற்படும் மனக்கஷ்டம் தாங்கமுடியாமலிருக்கிறது. "ஆசை, பாசம் என்றால் என்ன என்பதை உனக்கு நிதர்சனமாகக் காண்பித்து விட்டேன். உருவத்துடன் உங்களிடம் விட்டிருந்த ஸ்ரீநிவாசன் உருவத்தை விட்டு உருவமில்லாத என்னிடம் லீனமாகி விட்டான். அவனிடம் வைத்த ஆசாபாசத்தை யெல்லாம் என் மீது வைப்பதற்கு அவன் உங்களுக்குக் கற்பித்திருக்கிறான். ஆக, என் செயலால் இனி ஏதொன்றுமில்லை, உன் செயலே எல்லாம் என்பதை உணர்ந்து விவேகமாக இருக்கவேண்டியது" என்கின்றார் ஸ்ரீநிவாசப் பெருமான்.

மகா விவேகிகளான ஸ்ரீநிவாசனது பெற்றோர்கள், மனைவி, அருமருந்தன்ன மக்கள் யாவருக்கும் ஸ்ரீநிவாசனது தாற்காலிகமான இந்தப் பிரிவைத் தைரியத்துடன் தாங்குவதற்கு வேண்டிய மனோதிடத்தைக் கொடுக்கும்படி எல்லாம்வல்ல இறைவனை இறைஞ்சுவோமாக. ஓம் சாந்தி!

சகோதரி R. S. சுபலக்ஷ்மி அம்மாள்

# அருவத்துடன் கலந்த உருவம்

ஸ்ரீநிவாசன், பெற்றோர்களின் கண்ணுக்குக் கண்ணான ஸ்ரீநிவாசன், மனைவியின் மனதுக்கினிய ஸ்ரீநிவாஸன், குழந்தைகளிடம் அன்பைச் சொரிந்த ஸ்ரீநிவாசன், "நின்றான் இருந்தான் கிடந்தான் தன்கேள் அலறச் சென்றான்". அவ்யக்த ஆதீனி பூதானி வ்யக்த மத்யானி பாரத, அவ்யக்த நிதன: "கோளாதே வந்து கிளைகளாகத் தோன்றி வாளாதே போவர் மாந்தர்கள்" தோன்றி மறைந்துவிடும் இந்த வாழ்க்கையின் ரகசியம்தான் என்ன? பிரபஞ்சமாகிய நாடக அரங்கத்தில் பகவானாகிய ஸூத்ரதாரி நம்மையெல்லாம் பலவித வேஷங்களில் நாடக மேடையில் தோற்றுவித்து ஆட்டிவைத்துப் பிறகு மறைத்துவிடுகிறார். அவரது இந்த லீலையின்கருத்தென்ன? பூனைக்குக் கொண்டாட்டம் எலிக்குத் திண்டாட்டம்...என்பதுபோல பகவானுக்கு லீலா விநோதமாக இருப்பது உணர்ச்சிநிரம்பிய மாந்தர்களுக்குத் தாங்க முடியாத துக்கமாக இருக்கிறதே! உணர்ச்சியில்லாத மரத்தைக் கொண்டு ஒரு மேஜையை ஆக்குகிறோம். உபயோகிக்கிறோம், பழையதாகி ஆட்டம்கண்டுவிட்டால் நெருப்பில் போட்டு எரித்து அழித்துவிடுகிறோம். அதுபோல நாமும் "உணர்ச்சி" அற்றவர்களாயிருந்துவிட்டால் ஒரு கஷ்டமுமில்லை. ஆனால், அப்படியில்லையே! சுகதுக்கம்;லாப நஷ்டம்,ஜய அபஜயம், கோப தாபம், செல்வம் வறுமை, இப்படி எத்தனையோ த்வந்த்வங்கள் என்னும் இருமைகள், உணர்ச்சிகள் இவற்றை யெல்லாம் நமக்குக் கொடுத்து நம்மைப் பரீக்ஷை பார்க்கின்றார் பகவான். இந்த பரீக்ஷையில், இந்த சோதனையில் நாம் ஜயிப்பதற்கு வேண்டிய அறிவு ஞானம், பக்தி, விவேகம், திடசித்தம், பொறுமை இவைகளை வளர்க்க வேண்டும்.

"ஈசாவாஸ்ய மிதம்ஸர்வம் யத்கிஞ்ச ஜகத்யாம் ஜகத்" ஜ - பிறப்பது, க - போவது. சக்கரத்தைப்போல போய்வந்து கொண்டிருக்கும் இந்த பிரபஞ்சம் முழுவதிலும், இந்த பிரபஞ்சத்திலுள்ள எல்லா வஸ்துக்களிலும் அந்தர்யாமியாக வியாபித்துள்ள ஸர்வத்திலும்வஸிக்கும் ஈசனுடைய சொத்து அல்லது உடைமை, நாம் எல்லோரும். அவர் நம்மை "உடையவர்". அவர் கொடுக்கிறார், அவர் எடுத்துக் கொள்கின்றார். அவரது சொத்தை சில காலத்துக்கு நம்மிடம் ஒப்பித்துவைக்கிறார். பிறந்தகுழந்தையைத் தாலாட்டும்போதே "ஆராரோ, நீ யாரோ, நான் யாரோ" என்று தான் வேதாந்த பாஷையில் பாடுகிறோம். ஆயினும் எல்லையில்லாத பாசத்தை ஆசையை அன்பை வைத்து வளர்க்கிறோம். பாசமில்லாவிட்டால், பகவான் நம்மிடம் ஒப்படைத்த குழந்தையை ஒழுங்காக கவனிக்காமல் ஏனோதானோ என்று இருந்து விடுவோம்.

"மமைவாம்சோ ஜீவலோகே ஜீவபூதஸ் ஸநாதன:"— என்றபடி அந்தப் பரமாத்மாவின் அம்சமாகிய ஜீவாத்மாக்கள் தான் நாம் எல்லோரும். அதனால்தான் அந்தப் பாசம் உண்டாகிறது. 'பரமாத்மாவின் அம்சமாக, உருவத்துடன் நம்மிடையில் தோன்றி நம ஆசாபாசத்தை யெல்லாம் கொள்ளைகொண்டு

[தொடர்ச்சி 23 -ம் பக்கம்]

"குகப்ரியை"

# ஒரு சிறந்த தொண்டன்

"யான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்று வேண்டும் நாடு நம்முடைய நாடு. ஆனால் துன்பம் வரும்பொழுது இத்தகைய துன்பம் எவருக்குமே வரக்கூடாது என்றே விரும்பும் பாரதநாட்டுப் பண்பிலே ஊறிய இதயங்கள். தனது மைந்தர்களையெல்லாம் கொன்ற அசுவத்தாமாவை அர்ஜுனன் கயிற்றினால் கட்டி இழுத்துவந்து திரௌபதியின் முன்னே நிறுத்துகிறான். அவனது தலையைக் கொய்து உன் காலடியிலே காணிக்கையாக வைப்பேன்; அதை மிதித்துப் பின்னர் நீ மேற் செல்லலாம் என்று கூறினானாம் அர்ஜுனன். அந்த மகா துக்கத்தின் நடுவிலும் "குருபுத்ரனைக் கட்டிக்கொண்டு வருவது தவறு, அவிழ்த்து விடுங்கள்" என்று கூறினாளாம் திரௌபதி. அதோடு நில்லாமல், இத்தகைய சோகம் மகனையிழந்து தவிக்கும் நிலை தாய்மார்களுக்கு வரவே கூடாது என்று வரமும் கேட்டாளாம். மாயக்கண்ணன் கீதாசாரியன் மறுபுறம் திரும்பிக் கொண்டானாம்!

இங்கே சென்னை திருவல்லிக்கேணியிலே கீதாசாரியனாய் பார்த்தன் தன் தேர்முன்னே நின்ற பெருமான் அண்மையிலும் இப்படியேதான் முகத்தை மறுபுறம் திருப்பிக்கொண்டானோ என்று நினைக்கும்படித் தோன்றிற்று. அந்த இடிபோன்ற செய்தியைக் கேட்டதும், அண்மையிலே எங்களெல்லோரையும் கும்பகோணத்திலே நடைபெற்ற மாதர் மகாநாட்டுக்கு வழியனுப்ப வந்த அந்த இளைஞன். வை. மு. ஸ்ரீநிவாஸன் மண்ணுலகை விடுத்து வானேறும் வழிபற்றிச் சென்றுவிட்டான் என்று கேட்க எங்கள் எல்லோருடைய மனமும் பட்டபாட்டை எண்ணத்தொலையாது; ஏட்டில் அடங்காது!

நெடுநாள் வாழ்ந்து தமிழ்மொழிக்கும், இலக்கிய உலகிற்கும், பக்தி உலகிற்கும் பணி செய்யக்கூடிய ஒரு அருமையான தொண்டனைத் தமிழ்நாடு இழந்துவிட்டது. கடந்த சில வருடங்களாக அவர் வைணவ சமய நூல்கள் எல்லாவற்றையும் ஆழ்ந்து படித்து அவைகளுக்குச் சிறந்தமுறையிலே விரிவுரைகள் எழுதும் பணியை மேற்கொண்டிருந்தார். ஆழ்வார்களது அருள்மொழிகள் அவரது பேனா முனையிலே புதிய மலர்ச்சியும் மென்மையும் பெற்றுத் திகழ்ந்தன. பிற்காலத்திலே சிறந்த சமயப் பிரசுரராக, இலக்கியப் பிரசுரராக, மிகச் சிறந்த ஒரு நற்றொண்டனாக விளங்குவாரென்று நாங்கள் நம்பியிருந்தோம். ஆனால் இறைவன் திருவுள்ளம் இப்படி இருந்திருக்கிறது!

எழுதிச் செல்லும் விதியின் கை எழுதி எழுதி மேற் செல்லும்
தொழுது கெஞ்சி நின்றாலும் சூழ்ச்சி பலவும் செய்தாலும்
வழுவிப் பின்னால் நீங்கி ஒரு வார்த்தையேனும் மாற்றிடுமோ?



1—3—56
183200
சென்னை-600 008

என்று கவிமணியவர்கள் கூறியதுபோல் விதியின் வன்மை மிகுந்த கரங்கள் இத்தொண்டனை ஆட்கொண்டு விட்டன? ஊழிற் பெருவலி யாவுள? என்று நம்மைநாமே தேற்றிக்கொண்டு அவர் செய்துவந்த பணியை மேலும் தொடர்ந்து செய்வதே அவருக்கு நாம் செய்யக் கூடியது.

இந்த இளம் வயதிலேயே, இவர் சிறந்த பக்தனாக விளங்கியது பெருமைக்குஉரிய விஷயம். அவ்வப்பொழுது ஆழ்வார்களது பாடல்களுக்கு எழுதிய விரிவுரைகள் மிகச் சிறந்தமுறையில் அமைந்திருந்தன. அவற்றுள் மிகவும் முக்கியமானது சென்ற மார்கழியிலே முப்பதும் தப்பாமல் என்ற கட்டுரையையும், மதுர கவியாழ்வாரைப் பற்றியதும் எனலாம். மேலும், பெரியோர்களது சுவடுகளிலேயே இவரது நாட்டமும் சென்று இறைவனை நாடி இன்புறுகிறது என்பதை இவரது பல கட்டுரைகள் தெரிவிக்கின்றன. மேலும், இவரது நாவல்களிலும் அங்கங்கே தெய்வ மணமும் தேசபக்தியின் மணமும் கமழ்வதைக் காணலாம். செஞ்சிக் கோட்டையைப்பற்றியும், மைசூர் அரசர்கள் பற்றியும் இவர் எழுதியுள்ள கதைகள் சரித்திரத்திலே இவருக்கு உள்ள ஆழ்ந்த ஞானத்தையும் விவரிக்கும் திறமையையும் காட்டும். இத்தகைய அருமையான ஒரு நல்ல புதல்வனை நாட்டின்செல்வனை இழந்தது, இலக்கிய உலகிற்கும், பக்த உலகிற்கும் மிகப் பெரியதொரு நஷ்டமாகும்.

தமிழ்நாட்டின் தலை சிறந்த வித்வத் சிரோமணிகளால் இவர் பெரிதும் பாராட்டப் பெற்றவர். பண்டித திருவாலி இராமநுஜாசாரியார் அவர்களாலும் மற்றும் பல பெரியோர்களாலும் அன்புடனும் ஆதரவுடனும் தமது புதல்வனேபோல் பாவிக்கப் பட்ட பெருமையை உடையவர். இவர் சட்டம் பயின்று தொழில் செய்தாலும், இவர் மனம் இறைவனது திருப்பணியிலேயேதான் ஈடுபட்டிருந்தது என்பது இவரது சொற்களிலும் செயலிலும் விளங்கும். பெரியவர்கள் குழாத்திலே உதயனாயிருப்பவே வா வா வா, என்றழைக்கும் பேறு இவருக்குக் கிடைத்திருந்தது. இத்தகைய ஒளிவிளக்கு மறைந்தது. தாய் தந்தையரின் மனம் என்ன பாடு படுமென்பதை யார் சொல்லமுடியும்! முதலிலே முகத்தைத் திருப்பிக்கொண்ட எம்பெருமான் கீதாசாரியன் இனியேனும் கண் திறந்து ஆறுதல் சொல்லானோ?

---

உதயசூரியன் வை.மு.ஸ்ரீநிவாஸன், M.A.B.L
முதல் நவீனம் - ரூ. 1-4-0

**ஸ்ரீமான் ம. ர. ஸம்பத்குமாரன்**

# ஸநாதநதர்ம வழிகாட்டி

நட்பு அநேக வழிகளில் ஏற்படுகிறது. இருவர் பேசிப் பேசி நண்பர்களாகலாம். அல்லது ஒரு தொண்டில் ஒத்துழைக்கலாம். அல்லது விளையாட்டில் சேரலாம். அல்லது வணிகத்தில் கூடலாம். சில சமயங்களில், நேராகப் பாராமலே கடிதப் போக்கு வரத்து மூலமாயே நட்பு ஏற்படுவதுமுண்டு. இவ்வாறே எழுத்தாளர்களுக்கு அவர்கள் கண்டறியா நேயர்கள் பலருண்டு. ஒரு ஆசிரியர் எழுதுவதைப் படித்தவர்களுக்கு, அவர் தாம் வெகு காலம் நெருங்கிப் பழகிய நண்பர் எனத் தோன்றும். எக்காலத்திலோ வாழ்ந்த கவிகளுடன்கூட இம்மாதிரி, பற்றுதல் நமக்கு உண்டாகிறது. நம்மோடு ஸம காலத்தில் வாழும் எழுத்தாளர்களைப்பற்றி கேட்கவும் வேண்டுமோ?

வை. மு. ஸ்ரீனிவாஸனை அவர் 'பக்தனில்' எழுதும் கட்டுரைகள் மூலமாய்த்தான் நன்ருக அறிந்திருந்தேன். அவரைக் கண்டு பேசியதுமுண்டு! அவர்கள் குடும்பம் வெகுகாலமாய் எங்களுக்குத்தெரியும். இருப்பினும், அவருடன் நட்புகொண்டாடும் அளவு பழகினதில்லை. ஆனல், அவர் எழுதியதைப் படித்துச் சுவைத்ததிலிருந்து அவர் உற்ற உறவினர்போல் தோன்றி வந்தார்.

பக்தன் பத்திரிகையை நாங்கள் சிலர் ஆரம்பித்தபொழுது, வை. மு. ஸ்ரீயின் ஒத்துழைப்பு எங்களுக்கு மிகவும் பயன்பட்டது. அவர் நடத்தும் 'ஜகன்மோகினி' அச்சகத்தில் சிறந்த முறையில் பக்தனை அச்சிட்டது மாத்திரமல்ல; அதில் அநேக கட்டுரைகளை அழகாக எழுதவும் எழுதினர். 'பக்தனின்' முதல் மலரில் ஸ்ரீராமானுஜரின் சரித்திரத்திலிருந்து ஒரு ஸம்பவத்தை உருக்கமாகச் சித்திரித்துக் கொடுத்தார். அப்பொழுது பக்தனுடன் அவருக்கு தொடங்கின உறவு—நடுவில் சிறிதுகாலம் மங்கியிருந்த போதிலும்—பிறகு 1953 ஜுலை மாதம் ஸ்ரீ. எம். ஓ. அழகிய சிங்கராசாரியர் எங்களிடமிருந்து பக்தனை வாங்கி, நடத்துவது முதல் நன்ருக ஓங்கி வளர்ந்தது.

தம் கட்டுரைகள்மூலம், அவர் நம்மதத்திற்கு ஒரு இன்றியமையாத தொண்டை ஆற்றிவந்தார். பெரியோரின் சரிதங்களையும், ஆழ்வார்களின் அருளிச் செயல்களையும், வேதாந்த தத்துவங்களையும் இக்காலத்துக்கேற்ற நடையில், படிப்போர் மனம் கவரும்படி விளங்கவைத்தார். எளிய முறையில் ஆழ்ந்த கருத்துகள் வெளிவந்தன.

நம் ஹிந்துமதத்தை ஸநாதனம் என்று கூறுகிறோம். அது எப்பொழுது, எவரால் உண்டாக்கப்பட்டது என்பது யாரும் அறியமுடியாத மர்மமாயிருக்கிறது. ஹிமயமலையைப்போல், கங்காநதியைப்போல், காவிரியைப்போல் இயற்கையாயே வளர்ந்ததோ என்று ஐயுறுமாறு இருக்கிறது. ஆயினும், காலசக்கிரம் சுழலும்பொழுது, அரும்பெரும் ஞானிகள் தோன்றி, அதன் அடிப்படையான தத்துவங்களை அவ்வப்பொழுது மக்கள் உகந்தமுறையில்

உபதேசித்து வந்தனர். வால்மீகியும், வ்யாஸரும் இதிஹாஸ புராணங்களால் வேதத்தைத் தழைக்கச்செய்தனர். ஆழ்வார்கள், நாயன்மார்கள் முதலிய சிறந்த பக்தர்கள் அநேக மொழிகளில் இயற்றியுள்ள பாசுரங்களை நம் மதம் அமுதமாய்ப் பருகிற்று. ஸ்ரீசங்கரர், ஸ்ரீராமானுஜர், ஸ்ரீமத்வர் முதலிய ஆசாரியர்கள் தர்மத்தையும், தத்துவத்தையும் கோட்டைகட்டிக் காத்தனர்.

மேனாட்டு கலாசாரத்தால் நம் மதம் வெகு தீவிரமாகத் தாக்கப்படும் இக்காலத்தில், நமக்கு பரம்பரையாய்க் கிடைத்த ஞான நிதியை ஊருக்கெல்லாம் அள்ளி வீசுவது நம் கடமையாகிறது. ஸர் ஜான் உட்ராப் (Woodroffe) என்னும் ஆங்கிலேயர் முப்பது, முப்பத்தைந்து வருடங்களுக்கு முன் எழுதிய ஒரு புத்தகத்தில் இந்தியா ஸ்வதந்திரமடைந்தது முதல் இருபத்தைந்து வருடம் ஹிந்து மதமும் நாகரிகமும் பேராபத்தில் சிக்கி அவலப்படும் என்று தாம் எதிர்பார்ப்பதாய் எழுதியுள்ளார். அவர் எதிர்பார்த்தபடியே, ஸ்வதந்திர இந்தியாவின் தலைவர்கள் மேனாட்டுப் பண்பாட்டைக் காதலிப்பவர்களாகவும், அதை நம் நாட்டு மக்கள் கைக்கொள்ளச் செய்வதில் ஆர்வமுள்ளவர்களாகவும் இருக்கிறார்கள். ஆகையால் இக்காலத்தில், வை. மு. ஸ்ரீயைப் போன்ற சிறந்த எழுத்தாளர்கள் நம்மதத்திற்கு மிகவும் அவசியமாகிறது. அவர்கள் தான் பெரியவாச்சான்பிள்ளை, நம்பிள்ளை போன்ற ஆன்றோர் நமக்குக் காட்டிய வழிகளை முள்ளும் புதரும் மூடாமல் திறந்துவைக்கவேண்டும்.

வை. மு. ஸ்ரீ. வருங்காலத்தில், வைணவமும் தமிழ் இலக்கியமும் ஒளிபெற்றுத் திகழும்படிச் செய்யும் பணியை வெகுகாலம் நிறைவேற்றுவர் என்று அநேகர் கனவு கண்டுகொண்டிருந்தோம். அந்த ஆசையின் மேல் விதி மண்ணை வீசி விட்டது! அவரை ஒரே தவக்குழந்தையாய் நம்பியிருந்த அவர் தாய் தந்தையர்க்கும், அவர் மனைவி மக்களுக்கும் இவ்வின்னலை விளைவித்த பார்த்தஸாரதிதான் 'மா சுச:' என்று ஆறுதல் அளிக்கவேண்டும். என்போன்றவர்க்கு ஒரு கிரேக்க தத்துவஞானியின் சரிதம் தான் நினைவிற்கு வருகிறது. பிள்ளையையிழந்து புலம்பிக்கொண்டிருந்தபொழுது, அவரை ஒரு நண்பர் கேட்டார்: ''ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும் மாண்டார் வருவரோ? பெரும் அறிவாளியான நீர் அதை அறியீரா?'' .உடனே பதில் வந்தது: ''அறிவேன். அதனால்தான் அழுகிறேன்.'' தாங்கமுடியாத துயரத்தைத் தாங்கவைக்க எல்லாம் வல்ல இறைவனின் அருள் பெருகுமாக!

---

மதமா, மனமா? வை.மு.ஸ்ரீநிவாஸன், M.A.B.L
இரண்டாவது நவீனம் - ரூ. 1-4-0

ஸ்ரீமான் V. K. பார்த்தஸாரதி ஐயங்கார்

# வை. மு. ஸ்ரீ. எங்கே?

துயரம்!–துயரம்!–யாவர்க்கும் அடக்கவொண்ணுத் துயரம்!–உயர்ந்து மெலிந்த வசீகரமானத் தோற்றம்!—அன்பு ததும்பும் விசாலமான நெடிய கண்கள்!—புன்முறுவல் மறையா மெல்லிய உதடுகள்!—பளிச்சென்று விளங்கும் வெள்ளிய ஊர்த்வ புண்ட்ரம், மங்காது துலங்கும் களைகூடும் பரந்த சிறுமுகம்!— இந்த உருவம், இனி, நமது முகக்கண் காணமுடியாது, மறைந்துவிட்டது!—. 5-2-1956 காலை, அருணோதயமுன், நமது வை. மு. ஸ்ரீ. மண்ணுலகு நீத்துப்போந்தார்! நோயையும் பொருட்படுத்தாது நடமாடிவந்தவர், சிறிதுகாலமே படுக்கையாயிருந்து, மறையப் போவது தெரியாமலே மறைந்துபோய்விட்டார்!

ஞானமும் சீலமும் விநயமும் அனுஷ்டானமும்நிரம்பியவன். வாலிபம் முதிர்ந்து, அனுபவம் பழுத்துப் பலனளிக்கவேண்டிய பருவத்தன்—. முப்பத்தொன்பதே வயது!—. மதாசாரக்குலாசாரப் பெருமைகள் குன்றாது வளர்த்துவந்த குணசீலன்—மூத்தோரிடம் மதிப்பும் மரியாதையும், இளையோரிடம் அன்பும் ஆதரவுங்காட்டி, அனைவர் மதிப்புக்கும் இலக்காயிருந்த உத்தம நண்பன்!—. ஜகன்மோகினி வாசகருக்கு, இன்பமும் பண்புங் கலந்து ஊட்டும் உயர்தரக் கதைகளும், பக்திப் பிரவசனக் கட்டுரைகளும், காவியங்களும், கற்பனைகளும் கணக்கின்றி எழுதிக் கசப்பின்றி மனம் மிளிர்வித்த எழுத்தாளன்!—உத்யோகத் துறையில், அண்டினோர் வேண்டும் உதவி தந்து ஹிதஞ்செய்யும் வழக்கறிஞன். ஆழ்ந்த விஷயங்களை எளிய முறையில் விளங்கவைக்கும் பேச்சாளன். எதிலும், முன் யோசனை கொண்டே, யோசித்துத் தீர்மானித்துச் செயல்கள் புரியும் நிதானஸ்தன்!. இப்பேர்க்கொத்த நமது வை. மு. ஸ்ரீ—திடீரென நம்மைவிட்டு மறைந்து விட்டார்!.

> 'வகுத்தான் வகுத்த வகையல்லாற் கோடி
> தொகுத்தார்க்கும் துய்த்தலரிது'

விதி, வலிதுதான்! கடந்த ஜகன்மோகினி மலரில்தான், வை. மு. ஸ்ரீ. எழுதிய புதிய சரித்திரக்கதை ஏன் வெளிவரவில்லையென அடக்கவொண்ணு ஆவலுடன் எழுதிக்கேட்ட அன்பர்களுக்கு, இந்த இதழில், அதே வை. மு. ஸ்ரீ யின் சிறு வாழ்க்கை முடிவு சரித்திரத்தை வெளியிட்டுச் சோகிக்கவேண்டிய நிலை வந்தது, விதியின் சோதனைதான்!

சோகம்!—சோகம்!— யாவர்க்கும் சோகம்!—. அண்டிப் பழகியும், அச்சுமூலம் அறிந்தும், வை. மு. ஸ்ரீ. யிடம் மதிப்பு வளர்த்துவந்த அளவிலா அன்பர்களுக்கும், வாசகர்களுக்கும் சோகம்!—இவர்களது சோகம், கால அளவில், தேய்ந்து மறையலாம். ஆயின், பதியிழந்தாள் சோகத்தையும், ஏக புத்ரனை இழந்த முதிய பெற்றோரது சோகதாபத்தையும், கால அளவாலும குறைத்திடவோ, மறைத்திடவோ கூடுமோ? இவர்களுக்கு ஆறுதல் கூறிட எவரால்தான் ஆகும்?. போற்றிப் பாராமரித்து வளர்த்திடவேண்டிய தமது ரக்ஷணகர்த்தாவை, இழந்தது அறி

ஸ்ரீமதி வசுமதி ராமஸ்வாமி

# கோதைநாயகியின் அபிமன்யு

வைகுண்டத்தில் அதிகாலை. வானோர்கள் ஆனந்தமாக குதிக்கிறார்கள். கூத்தாடுகிறார்கள். பெருமைப்படுகிறார்கள். யாரை வரவேற்க இவ்வளவு ஏற்பாடுகள். எவ்வளவு பெண்கள் சாமரம் வீசுகிறார்கள். என்ன தேஜோமயமான விளக்குகள், எவ்வளவு தோரணங்கள், என்ன வாத்திய கோஷம், என்ன நிருத்தியம்! மெதுவாக ஒரு விமானம் அசைந்து வருகிறது. அதில் யாரைப் பார்க்கிறேன்! கறுத்த மெலிந்த இளம் வாலிபன். முகம் சரியாகத் தெரியவில்லை. நெற்றி திருமண் சுடர்விட்டு பிரகாசித்தது. யார் இந்த பக்தன், பகவானுடைய திருவடியை இவ்வளவு அழகாக நெற்றியில் தாங்கிக்கொண்டிருக்கிறான்? எந்த ஆழ்வார் பரம்பரை? கிட்ட நெருங்க நெருங்க யார்? யார்? ஆச்சர்யம்! ஸ்ரீ வை. மு. ஸ்ரீநிவாஸன். என்ன, என்ன! கோதை அம்மாள் புத்ரரா? இவர் எப்படி இங்கே வந்தார்? இவர் கடமைகள் முடிந்து விட்டதா? இனி பரமபத சேவைதானா? கண்களைத் தேய்த்துக்கொண்டேன். இவ்வளவும் கனவா? வருவதை முன்னால் இயற்கை அறிவிப்பது கனவா?

ஞாயிறு அதிகாலை. ஸ்ரீநிவாஸன் காலமாய்விட்டார்! ஸ்ரீநிவாஸன் காலமாய்விட்டார்!! போனில் செய்தி. நேரில் செய்தி. ஆள்கள் மூலமாய்ச் செய்தி. அக்கிரமம், அநியாயம், பூமாதேவி பொறுப்பாளா? ஆகாயவாணி சகிப்பாளா? சொல்லில் வர்ணிக்கமுடியாத துக்கமும் அதிர்ச்சியும் உண்டாயிற்று.

"நெற்றிக் கண்ணானாலும் குற்றம் குற்றம்தானே?" என நக்கீரர் சொன்னது நினைவுக்கு வந்தது. உலகத்துக்கே உபதேசம் செய்த கீதாசாரியனானாலும் தவறு மகத்தானதுதானே. கடமைகளையே உறுத்திச் சொல்லும் கண்ணன் ஸ்ரீநிவாஸன் ஆற்றவேண்டிய கடமைகளுக்கு அவகாசம் கொடுக்கவில்லையே!

"கிருஷ்ணா என் தோளோடு கைபோட்டுப் பழகி என் குடியைக் கெடுத்துவிட்டாயே! என் ஓரே கண்மணி அபிமன்

---

யாது இழந்துநிற்கும் இரு மூன்று சிறுமக்கட்கும், மாபெரும் நஷ்டம்!. வை. மு. ஸ்ரீ.— குடும்பத்தாருக்கு, இந்த கோரலீலை புரிந்த அந்த மாயன்தான் ஆறுதலருளல் வேண்டும்!— வை. மு. வம்சத்தார், பரம்பரை ஞானவான்களே—. வை. மு. ஸ்ரீயின் குடும்பத்தாருக்கு, இப்பரிதாப நிலையில், நாம் சொல்லக்கூடிய ஆறுதல்மொழி இதுவே—.

'உறையிட்ட வாளென ஊனுள் உறையும் உயோகியரை
நறைமட்டு ஒழிவற்ற நற்றுள வேந்திய நாயகன்றான்,
நிறைமட் டிலாத நெடும்பயன் காட்ட நினைந்து உடலச்
சிறைவெட்டி விட்டு வழிப்படுத்தும் வகை செய்திடுமே'

யுலை மறைத்துவிட்டாயே" என்று அர்ஜுனன் கதறுகிறான். அர்ஜுனன் ஜீவாத்மா; கோதைநாயகி அம்மாளின் பிரதிநிதியாக அன்று அவன் கேட்டான் போலும்!

கிடைத்த பதில் சுருக்கம். விளக்கமில்லை. "காலத்துக்கு நான் கட்டுப்பட்டவன். நானே காலஸ்வரூபம். அதைத் தடுக்க நானே அதிகாரி இல்லை." என்றார். ஆனால் எப்படியோ உயிரைவிட நினைத்த அர்ஜுனனை அவன் கடமைகளை நினைவுறுத்தித் தேற்றிவிட்டார். சந்திரனிடம் அவன் பிள்ளையைச் சீக்கிரமாகத் திருப்பி அனுப்புவதாகச் சொல்லியிருந்தார். கண்ணன் அந்த வாக்கைக் காப்பாற்றியதற்காக மனதிற்குள் பெருமைப்பட்டுக்கொண்டார். இவர் வாக்கை நிறைவேற்றஅர் ஜுனன் வயிறு எரிவானேன்? இது உலகம் தோன்றியது முதல் ஏற்பட்ட பிரச்னை. மகான்களால் தீர்க்க முடியவில்லை. மகரிஷிகளால் விளக்கமுடியவில்லை. தர்மம் சூக்ஷ்மமானது. பாப புண்ய பலாபலன் அறியமுடியாத சங்கிலி. தெய்வ நீதியை அறிய நம்முடைய குறைந்த கட்டுப்படுத்தப்பட்ட அறிவால் முடியாது. ஆபூர்வ பிறவிக்கு அதிக ஜன்மாக்கள் இல்லை. கொஞ்சநஞ்சமிருக்கும் கர்மாவை சரிக்கட்ட அல்ப ஆயுளில் மறைகிறார்கள் என்பதை நம்பலாம். இதை கிறிஸ்துவ மதம் பலமாக ஆதரிக்கிறது. சட்டையைக் களைவதுபோல் சரீரத்தைக் களைந்துவிடும் ஆத்மாவைக் கண்டு நாம் அழலாம். கண்ணன் எப்படி வருந்துவார்?

தைப் பொங்கலன்று ஸ்ரீ ஸ்ரீநிவாஸன் அவர்கள் எனக்கு வாழ்த்துக்கள் கூற வீட்டிற்கு வந்திருந்தார், அன்றுதான் அவரைக் கடைசியாக நல்லபடியாய்ப்பார்த்தேன். அவர் உடல் நலன் சரியில்லையென்பதையும் சொன்னார். ஆனால் முகத்தில் நோய்க் குறியோ இல்லை; வழக்கம்போல் சிரித்துப் பேசினார். அவர் எப்பொழுது சந்தித்துப் பேசினாலும் ஆழ்வார்கள் பாசுரத்தைப்பற்றிப் பேசாமல் இருக்கமாட்டார். சில சமயம் எங்களிடையே விவாதங்கள் நடைபெறும். அன்றும் பிரபந்த சாரத்தைப்பற்றிச் சில கருத்துக்களைச் சொன்னார். அவர் பூப்போல் காரை விட்டுக்கொண்டு போகும்வரை நின்று பார்த்துவிட்டு வந்தேன்.

சில வருஷங்களுக்கு முன் "ஜகன்மோகினி வெள்ளிவிழா" நடந்தபொழுது அவர்களுடன் அடிக்கடி பேசிப்பழக சந்தர்ப்பம் இருந்தது. அவரை ஒரு உத்தம சகோதரன் என்றால் மிகையாகாது. அப்படியே நினைத்தேன்.

அழகுள்ள மனைவி பத்மினி. குணமுள்ள பத்மினி. கடமையில் சிறந்தபத்மினி. உச்சிவானம் இடிந்து விழுந்தபோது கூட பொறுமையாக இருந்த பூஷணி பத்மினி. சிரித்த முகமும் கொஞ்சின பேச்சும் கொடி போன்ற உருவமுமுள்ள பத்மினி!

முப்பத்திரண்டு வருஷங்களாகப் பேனாவைப் பிடித்து அதன் வாயிலாக அநேக அறிவுரைகளை உலகுக்கு வழங்கிய அன்னை.

சங்கத்தின் வாயிலாக சமூகத்திற்கு அநேக பணிகள் ஆற்றிய அன்னை.

தேசத்துக்காகப் பாடிப் பேசிச் சிறைச்சென்ற அன்னை. புத்திர வாத்ஸல்யம் என்றால் என்ன என்பதை அறிவுறுத்திய அன்னை!

சதா கீதாசாரியனை ச்ரவணம், மனனம் பஜனை செய்த அன்னை!

வயது காலம். நேர்மையுள்ள தந்தை.

ஐந்து குஞ்சலம் போன்ற குழந்தைகள்.

எழுத்துலகில் அநேக எழுத்தாளர்கள்.

பக்தி உலகில் ஸ்ரீஅண்ணங்கராச்சாரியாரைப் போன்ற மகான்கள்.

கோர்ட்டில் அநேக நண்பர்கள்.

அனைவருடைய உள்ளத்தையும் கலக்கிவிட்டு பிப்ரவரி 5-ம் தேதி ஸ்ரீநிவாஸன் தன்னுடைய முப்பத்தெட்டாவது வயதில் காலமானார்.

ஸ்ரீநிவாஸன் M.A.B.L. பாஸ்செய்து சென்னை நீதி மன்றத்தில் வக்கீலாக இருந்தார். படித்துப் பட்டம் பெற்றவர்; சிறந்த படிப்பாளி; அதற்குச்சின்னமான வினயம், இன்சொல், சிரித்தமுகம். வயது முப்பதெட்டுதான்! சினிமா பார்த்துக் கொண்டு உல்லாசமாக வாழவேண்டிய வயதில் சதா பக்தி ப்ரசங்கம்; மதசம்பந்தமான அறிவு; ப்ரும்மத்தை அறிய முயற்சி.....இப்படியாக மனதை மிகமிக பக்குவப் படுத்தியிருந்தார்.

'பக்தன்' பத்திரிகையில் பல ஆபூர்வ கட்டுரைகள் எழுதியிருக்கிறார். உதயசூரியன், மதமா மனமா?, அவசரமூர்த்தியின் அபூர்வ டயரி முதலிய புத்தகங்கள் எழுதியிருக்கிறார். திருவல்லிக்கேணியில் எந்த இடத்தில் ப்ரவசனங்கள் நடந்தாலும் அவரை முதல் வரிசையில் காணலாம். வீதியில் பகவான் எழுந்தருளும்போது தானும் கூடவே ஓடுவார்.

எவ்வளவு எழுதினாலும் முடியவில்லை. அன்று அந்தம்மாள் ரிஷிகளுக்கும், சந்நியாசிகளுக்கும் உள்ள கடமைகள்கூட உனக்கில்லையேயெனக் கதறும்போது நமக்கு சமாதானம் சொல்ல என்ன இருக்கிறது!

இத்தகைய துக்கத்தைக் கொடுத்த கீதாசாரியனே அந்த குடும்பத்துக்குச் சாந்தியைக் கொடுக்கவேணுமாய்ப் ப்ரார்த்திக்கிறேன்.

பண்டித ஸ்ரீ திருவாலி அ. இராமாநுஜாசாரியர்.

# உதயசூரியன்

# வை. மு. ஸ்ரீ-யின் மறைவு.

மன்மத ௵ தை ௴ 23௨ ஞாயிற்றுக்கிழமை, அதாவது, பிப்ரவரி 5௨ பெற்றதாயையும், தந்தையையும், தன் வாழ்க்கைத் துணைவியாகிய தாரத்தையும், தன் உயிர்க்கு உயிராகிய நன்மக்களையும், உற்றார் உறவினரையும் மெய் நட்பினரையும் இருள்கடலுள் ஆழச்செய்து மறைந்த, உதயசூரியன்—வைத்தமாநிதி முடும்பை ஸ்ரீநிவாஸன்—எழுத்தாளர் உலகில் வை. மு. ஸ்ரீ. என்று விளங்கியவர். இந்த வைத்த மாநிதிக்குடும்பம், என்றென்றும் மாந்தரின் மன இருள் அகற்றி, ஞானநற்சுடர் கொடுத்து உதவி வந்தது. இதுதமிழகம் அறிந்ததே.

பொதுவாகத் தமிழ் உலகுக்கும், சிறப்பாக ஸ்ரீவைஷ்ணவ உலகுக்கும் இக்குடும்பம் செய்துள்ள அறிவுவளர்ச்சிப் பணி அளவற்றது. திருவல்லிக்கேணி பகவத் விஷயாதிகாரி வை. மு. அப்பங்கார்ஸ்வாமியின் (நமது உதயசூரியனின் (பிதாமகர்) ப்ரபாவம், ஸ்ரீவைஷ்ணவ உலகம் மிகச் சிறப்பாக அறியும். எத்தனை மாணவர்களை நாலாயிர திவ்ய ப்ரபந்த பாராயணர்களாக ஆக்கியருளியுள்ளார்! எத்தனை ஸ்ரீவைஷ்ணவர்கள் பகவத் விஷய அதிகாரிகளாய்த் திகழ்கின்றனர்!! நமது வை. மு. ஸ்ரீயின் பெரிய தந்தை, மஹாவித்வான் வை. மு. சடகோபராமாநுஜாசாரியரை அறியாத தமிழ் அன்பரும் உண்டோ இவ்வுலகில்! கம்பராமாயணம், வில்லிபாரதம், திருக்குறள், நாலடியார், அஷ்டப்ரபந்தம், நன்னூல், முதலிய அரும்பெரும் நூல்களுக்கு விரிவும் விளக்கமுமுள்ள இனிய உரைகளை இயற்றிய மஹான் அவர். உரை வகுத்தல் என்னும் பண்புக்கே வழிகாட்டியாய் விளங்கியவர். இவற்றில் விடுபட்ட பாகங்களைப் பூர்த்தி செய்து, தமிழ் உலகில் இப்போது கீர்த்தி மூர்த்தியாய்த் திகழ்பவர் வித்வான். வை. மு. கோபால கிருஷ்ணமாசாரியர், நமது வை. மு. ஸ்ரீ. யின் மற்றொரு பெரிய தந்தை. இப்பெரிய தந்தையாரின் குமாரர் ஸ்ரீமான் வை. மு. நரஸிம்மன் (எஞ்ஜினீயர்) அவர்கள், குலப்பெருமைக்கு ஏற்ப, தேவாலயமண்டப கோபுராதிகள், தெய்வத் திருவுருவங்கள் இவற்றைப்பற்றிய சிற்பசாஸ்த்ர நிபுணர். இவர் ஆங்கிலத்தில் எழுதியுள்ள பல அரிய கட்டுரைகளை நமது வை. மு. ஸ்ரீ, அனைவரும் அறியும்வண்ணம் எளிய இனிய தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்டுள்ளார்.

தன் குலவித்தையாதலின், பகவத் விஷயாதிகளும், தமிழ்க் கலையும், நமது வை. மு. ஸ்ரீயிடம் கல்லாமலே பாகம்

பெற்றன! எம். ஏ.பி. எல்., பரீக்ஷையில் தேறி, வக்கீல் உத்யோகம் பார்க்கும் இந்தச் சிறுவர், இளமைப் பருவத்திலேயே பல நவீனங்களை இயற்றிப் பெரும் புகழ் அடைந்தார்.

தன் அன்னை நடத்திவரும் ஜகன்மோகினி என்னும் மாத வெளியீட்டை மிகவும் திறமைப்பட நிர்வகித்து வந்தார். ஜகன்மோகினி பொங்கல்மலர், ஆண்டு மலர்களில் தன் திறமையை முழுமுற்றும் காட்டியுள்ளார்.

இக்குடும்பத்தினரைச் சென்ற ஐம்பது வருடங்களாக அறிவேனாயினும், அடியேனுக்கு நெருங்கிய அந்தரங்கமான பழக்கம் சென்ற பத்து வருடங்களாகவே ஏற்பட்டது. பழகத் தலைப்பட்டதுமே, வை. மு. ஸ்ரீயை, அவர்கள் குலத்தை விளக்கவந்த உதயசூரியனாகவே மதித்தேன். நல்ல குணசாலி ; நுண்ணறிவினர்; சங்கீதம், சித்திரம் முதலிய கலைகளிலும் ராஸிக்யம் மிக்குடையவர். ஸம்பிரதாய அறிவைப் பெருக்கிக் கொள்வதில் பேராசை அதிகம். காலையில் ஸஹஸ்ரநாம, ஸ்தோத்ரபாட பாராயணங்களும் தினம் செய்து வருபவர்; பார்த்தஸாரதி எம்பெருமானிடம் அளவுகடந்த பக்தி யுள்ளவர். தான் கொண்ட கொள்கையை இலேசில் மாற்றிக்கொள்ள இசையாதவர். தரும சிந்தையுள்ளவர். பொதுத்தொண்டில் மிகவும் ஈடுபட்டவர். தன் அருமைத் தாய் நடத்திவரும் மகாத்மாஜி ஸேவா சங்கத்துக்கு உயிர்நாடியாய் விளங்கியவர்.

ஆனால், மெய்வருத்தம் பாராமலும், பசியைப் பாராட்டாமலும், கண்ணுறக்கமுமின்றிக் கருமமே கண்ணாயிருப்பவர். இத்தகைய வாழ்க்கையைப்பற்றிப் பெற்றோர், உற்றோர், நட்பினர், வைத்தியர்முதலிய பற்பலரது இடித்துரைகளும் கார்யகரமாகவில்லை. இதுவே இந்த இளஞ்சூரியன் — உதயசூரியன் — திடீர் மறைவுக்குக் காரணமாயிற்று என்றால் மிகையாகாது!

ஸ்ரீவைஷ்ணவ ஸம்பிரதாய உலகில் கோடி சூர்ய ப்ரகாசமாய் விளங்கும் ஸ்ரீமான் மஹாவித்வான் ப்ர. அண்ணங்கராசாரியரின் பரம கிருபைக்கு ஸத்பாத்திரமானவர். அந்த மஹான் எழுதும்போதெல்லாம் "என் அன்புள்ள தம்பிக்கு" என்றே தொடங்குவர். அவர் பெருமகிழ்வு அடையும்படி ஆற்றிய பணிகள் பற்பல.

ஸ்ரீமான் எம். ஒ. அழகியசிங்கராசாரியரால் நடத்தப்பட்டு வரும் பக்தனை அச்சிட ஒப்புக்கொண்டு, அதைப் பக்தவுலகம் அன்போடும் ஆதரவோடும் வரவேற்கும்வண்ணம் அரும்பாடுபட்டு உழைத்தவர். இதன் விளைவாகவே பல அரிய தெய்வ நெறிக் கட்டுரைகளையும் பக்தனில் எழுதினர் நம் வை. மு. ஸ்ரீ.

ஸ்ரீமான் எம். ஓ. அழகியசிங்கராசாரியர்

# வை. மு. ஸ்ரீ-யின் அகால மறைவு.

வை. மு. ஸ்ரீ. என்ற பெயரில், இரண்டு வருஷங்களாக, பக்தனில், ப்ரதிமாதம், வ்யாஸங்கள் எழுதி, நம் வாசகர்களை மகிழ்வித்தவரும், ஜகன்மோகினியில் அனேக கட்டுரைகள், நாவல்கள் எழுதியவரும், வக்கீல் தொழில் நடத்திக்கொண்டு இருந்தவருமாகிய ஸ்ரீ வி. எம். ஸ்ரீநிவாஸன் எம்.ஏ., பி.எல்., அவர்கள், பிப்ரவரி 5-ந்தேதி, தன்னுடைய 39-ம் வயதில், தன் பெற்றோர்களையும், மனைவி, இரு குமாரர்கள், மூன்று குமாரத்திகளையும் விட்டுவிட்டு, அகால மரணமடைந்தார் என்பதை மிகவும் வருத்தத்துடன் எழுத வேண்டியிருக்கிறது.

அவருடைய பெற்றோர்கள் நடத்திவரும், ஸ்ரீ ஜகன்மோகினி அச்சகத்தில், இரண்டு வருஷ காலமாக பக்தனைப் பிரசுரிக்க நேர்ந்தது முதல், பக்தனைத் தன்னுடைய சொந்தப் பத்திரிகை போல் பாவித்து, அதனுடைய முன்னேற்றத்திற்கு, எல்லாவிதத்திலும் பாடுபட்டார், நம் வை. மு. ஸ்ரீ.

இந்த இரண்டு வருஷங்களில், அவருடன் வெகு நெருங்கிப் பழகியதில், அவருடைய மேதை, சீலம், சௌலப்யம் முதலிய அரிய குணங்கள் நன்கு தெரிந்தன. இப்பேர்ப்பட்ட மஹாபுருஷர், இவ்வளவு சிறிய வயதில் மரணமடைந்தது எல்லோருக்கும் பெரிய நஷ்டம்.

அவருடைய குடும்பத்தாருக்கு எங்கள் வருத்தத்தைத் தெரிவித்துக்கொண்டு, அவருடைய ஆத்மா சாந்தி அடைய வேண்டுமென்று இறைவனைப் ப்ரார்த்திக்கிறோம். —ஆசிரியர் பக்தன்

---

இத்தகைய உதயசூரியன், தன் கிரணங்களைத் தன் ஐந்து நன்மக்களிடம் (மூன்று பெண்களும், இரண்டு ஆண்களும்) புகவைத்துவிட்டு, மீளாவுலகாகிய, நலம் அந்தமில்லதோர் நாட்டில், திருமாமணிமண்டபத்தில், நித்யமுக்தர்களுடன், சூட்டுநன்மாலைகள் தூயன ஏந்தி, நித்யகைங்கர்யப் பெருவாழ்வுடன் உபயவிபூதிகளையும் விளக்கி விளங்கும் என்பது திண்ணம். —பக்தன், மன்மத, மாசி இதழ்

---

அவஸரமூர்த்தியின் அபூர்வ டயரி
வை. மு. ஸ்ரீநிவாஸன், M.A.B.L.
மூன்றாவது சித்திரம் - ரூ. 1-8-0

# அந்தோ! விண்ணுற்றார்!

வழக்கம்போல் இம்மாதமும் வை. மு. ஸ்ரீயின் கட்டுரையின் ரஸத்தை அநுபவிக்க எதிர்பார்த்தவர்களுக்கு, அவருடைய வைகுந்த ப்ராப்தியை ஏற்கெனவே செய்திப் பத்திரிகைகள் வெளியிட்டுள்ளதால் ''பக்தனை'' பெறும் பாக்யமுள்ளோருக்கு, எவ்வளவு வருத்தமிருந்தாலும், அதிர்ச்சி கொஞ்சம் குறையும். மஹான்கள் அவதரித்த வைத்தமாநிதி முடும்பைக் குலத்தில் பிறந்து, பொருட் செல்வம் அருட்செல்வம் கல்விச் செல்வம் இவைகளைப்பெற்று, ஸ்ரீ பார்த்தஸாரதிப் பெருமானின் அடிவாரத்திலேயே இருந்து வளர்ந்து, ரஸமும் ஸமரஸமும் மிகுந்த கட்டுரைகளை ''பக்தன்'' மூலமாக நமக்கெல்லாம் உதவிவந்த அந்த மஹான் அந்தப்பெருமானின் ''தூயாறு சுடரடியை'' அடைந்து விட்டார்! ''கேயம் கீதாநாமஸஹஸ்ரம் த்யேயம் ஸ்ரீபதிரூபமஜஸ்ரம்'' என்று பாடிய ஸ்ரீஆதிசங்காசார்ய பகவத்பாதர்களும், சென்ற நூற்றுண்டில் அவர்களுடைய வேதாந்தத்திற்கு விஜயத்வஜமாக அமெரிகாவிலும், வியங்கிய ஸ்வாமி விவேகாநந்தரும் சுமார் இந்த வயதில்தான் ஸித்தியடைந்தார்கள்.

ஒருநாள் காலை 'ஜகன்மோகினி' காரியாலயத்தில் ஒருவரைச் சந்திக்கச் சென்றிருந்தேன். அப்போது அவர் மேல்மாடியிலிருந்தார். இப்போது சென்னையில் வீடுகளில் ''நாய் ஜாக்ரதை'' என்ற அபாய அறிவிப்பு தொங்குகிறது; கார்யாலயங்களிலோ, ''ஓ நாய் ஜாக்ரதை'' என்ற அறிவிப்பு தேவை என்று தோன்றுகிறது! முன்பின் தெரியாத என்னை ''வை. மு. ஸ்ரீ'' மிகுந்த அன்புடன் வரவேற்று, தன் நாற்காலியில் அமர்த்தி நான் காணவேண்டியவரிடம் ஒரு பையனை அனுப்பி அவர் என்னிடம் வந்தபிறகே தம் அலுவலுக்குத் திரும்பினர். ''ஆம்! இதென்ன ப்ரமாதம்'' என்று சிலர் நகைக்கவும் கூடும். பட்டினத்து வாழ்வில் அவ்வளவு சிறு இரக்கமும் நான் சில வீடுகளில்தான் கண்டிருக்கிறேன். இவ்வளவு பணிவுடையவர் எத்துணை உதவி நமக்கு செய்திருக்கமாட்டார்? அந்தோ மறைவு குறுக்கிட்டு விட்டதே!

நமது பாரததேசம் மஹாத்மா காந்திஜீயைப் பறிகொடுத்த போது, ''எந்தையே! எம் நன்மைக்காக ஓயாமல் உழைத்து வாரும்'' என்று கதறினர் கவிகோகிலம் கவர்னர் ஸரோஜினி தேவி.

அவ்வாறே நாமும் இத்தகைய கடும் சாவுகளால் சாசுவத நாஸ்திகத்தில் தள்ளப்படாமல் நாரணன் திண்கழல்களை நமக்குத் திருவருள்புரியச் செய்யுமாறு நமது வை. மு. ஸ்ரீ.யையே ப்ரார்த்திப்போமாக!

ஸ்ரீமான் ரா. ஸ்ரீ. தேசிகன் M. A.

# நான் வளர்த்த ஞானப்பயிர்

பழுத்த பழம் விழுகிறதைப் பற்றியும், பழுத்த இலை உதிர்கிறதைப் பற்றியும் நாம் உளம் உடைந்து வருந்துகிறதில்லை. ஆனால் பூவும் பிஞ்சும் கருகியும் வெம்பியும் உதிருமானால் நம் மனத்தில் சொற் கடந்த துயர் எழக் காண்கின்றோம். ஆனால் எது பூ? எது பிஞ்சு? எது பழம்? எது பழுத்த இலை? என்ற வினாக்கள் நம் சிந்தையை மீறி நிற்கின்றன என்றதை நாம் மறக்கக்கூடாது. நாம் பிஞ்சாய்க் கருதியதை ஆண்டவன் பழமாய்க் கருதி முற்றப் பருகிக் களிக்கலாம்! நாம் மணமற்ற,—வர்ணமற்ற பூவெனத் தள்ளியதை அவன் தன் அலங்கலில் ஏற்றுக்கொள்ளலாம். ஆனால் இத்தகைய வேதாந்தம்கொண்டு என் உள்ளத்தில் எழும் துயர்வெள்ளத்திற்கு என்னால் அணை போட முடியவில்லை.

வை. மு. ஸ்ரீநிவாஸன் என்னுடைய மாணாக்கன். நான் வைத்த ஞானப் பயிர் பூத்துப் பழுத்து உலகத்திற்குத் தக்க பயனை அளிக்குமென்று எதிர்பார்த்தேன். ஆனால் எனக்குமுன்பே அப் பயிர் கருகி மடிந்தால் என உள்ளம் நைந்து உருகாமல் என் செய்யும்?

அவனோடு நெருங்கிப்பழகும் சந்தர்ப்பங்களுண்டு. நூல்களைச் சலித்துப் பார்க்கும் நுண்ணறிவும், அவைகளின் சுவையைப் பருகி இன்புறும் தக்க கலைப்பண்பும் இலக்கிய சேவை செய்ய வேண்டும் என்ற தணியாத் தாகமும் அவன் மனத்தில் நடனமாடக் கண்டேன்.

தமிழ் இலக்கிய உலகிற்கு ஸ்ரீநிவாஸன் மறைவு ஒரு பெருஞ் சேதந்தான். ஆனால், அவன் குடும்பத்தார் கவலைப் படவேண்டியதில்லை. அவன் மாண்டாலும், அவன் கொண்ட லட்சியங்கள் அவனோடு மாளா. அவன் தாய் தந்தையர், அவன் மனைவி, அவன் குழந்தைகள் இவர்களின் துயரின் கூர்மையைக் காலந்தான் மழுங்கச் செய்யக் கூடும். நம்மால் ஆறுதல் அளிப்பது இயலாத காரியம். அவன கொண்ட லட்சியங்களை நிறைவேற்றினால்தான் அவன் ஆத்மா சாந்தி அடையும். அவன் மாளவில்லை! ஒருவர் உள்ளத்திலும் ஒருவன் நிற்காமற் போவதுதான், மரணம்; அவன் எல்லோர் உள்ளத்திலும் நின்று தன லட்சியங்களுக்கு உருக் கொடுக்காமற் போகான். அவன் விட்டுப்போன முடியாத காரியங்களை நிறைவேறும்பொருட்டு அவன் குடும்பத்தாருக்குத் தளராத ஊக்கமும், குன்றாத தைரியமும அளிக்குமாறு எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றேன்.

ராணி சீலாவதி
வை. மு. ஸ்ரீநிவாஸன், M.A.B.L
நான்காவது நவீனம் - ரூ-1/-

வை.மு.ஸ்ரீநிவாஸன், எம்.ஏ.பி.எல்.

முதல் சிறு கதை
1934

# டி. டி.

டி. டி. என்றால் யாரோ ஒரு ஸ்திரீயைக் கூப்பிடுவதாக நினைக்கவேண்டாம்! நமது டிடெக்டிவ் தண்டபாணியைத்தான் (Detective Dhandapani) குறிப்பிடுகிறோம்.

நமது தண்டத்திற்கு ஓர் துப்பறிபவனுக்கு வேண்டிய சாதுர்யம் கிடையாது. ஏதோ அதிர்ஷ்டவசத்தாலும், பெரியோர் சிபார்சாலும் அந்த வேலையில் புகுந்தார். அதிர்ஷ்டம் அவர் பக்கமே இருந்ததால் ஒரு வருடத்திற்குள், கண்டுபிடிக்கமுடியாது என்று சடைசிவரையில் நினைத்துக்கொண்டிருந்த மூன்று கேஸ்களிலும், ஏதோ தெய்வாதீனமாக, நமது தண்டபாணிக்கு ஜெயமே உண்டாயிற்று. அவர் கண்டுபிடித்த மூன்று கேஸ்களில் கடைசி கேஸ் ஒரு பெரிய திருட்டைப் பற்றினது. அதில் அவர் வெற்றிக்கொள்ளவே, அவர் பெயர் ஊர் முழுவதும் பரவியது. 'என்ன சார்! அவ்வளவு பெரிய கேஸிலே நம்ம தண்டம், இளம் வயசு, எவ்வளவு சுலபமாகக் கண்டு பிடிச்சுட்டான்!' என்று ஊரிலே சில கிழங்கள் மத்தியான வேளையில் போதுபோக்காகப் பேசிக்கொண்டிருந்தார்கள்.

இது இப்படியிருக்கையில் அந்தக் கேஸ்களில் வெற்றிபெற்றதற்காக நமது தண்டத்திற்கு பரிசுகள் அளிக்கப்பட்டன. சம்பளம் உயர்ந்தது. இதுவரையில் ஒடுக்கமாயும் கர்வமில்லாமலும் இருந்த தண்டத்திற்கு இப்பொழுது கர்வமும் உண்டாயிற்று. "நாம், என்ன இருந்தாலும், அந்த கோபாலய்யங்கார் இருக்காரே அடுத்த டிவிஷன்லே, அவரைவிடப் புத்திசாலிதான்....என்ன! நம்மைப்போல பெரிய பெரிய கேஸ் எல்லாம் அவர் கண்டுபிடித்தாரான்னா?' என்று மார் தட்டினார். அந்த கேஸ் நடக்கும்பொழுது தன்னால் முடியாது என்று கைவிட்டுவிட்ட சமயத்தில் தெய்வாதீனமாகத் தனக்கு வெற்றியுண்டானதை அறவே மறந்தார். எல்லாம் தன்னுடைய புத்தி சாதுர்யத்தினால்தான் நடந்தது என்று கர்வங்கொண்டார். இம்மாதிரி இவ்வுலகத்தில் அநேகர் இருக்கிறார்களல்லவா?

நமது தண்டம் ஒரு நாள் இரவு $3\frac{1}{2}$ மணிக்கு எழுந்தார். ஆபீஸ் வேலை நிறைய இருந்ததால் ஆபீஸ் கட்டை எடுத்துக்கொண்டு ஈஸி சேரை (Easy Chair) போட்டுக்கொண்டு வேலையைக் கவனிக்கலானார். அப்பொழுது வீட்டில் அவர் மனைவியைத் தவிர வேறொருவரும் இல்லை. அவள் அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்தாள். அரை மணி வேலை செய்தபிறகு கூடத்து மூலையில் பார்த்தார். அங்கு பலகைமேல் வெள்ளிக் கிண்ணி வைத்திருப்பதைப் பார்த்த உடனே அவருக்குச் சந்தேகம் உண்டாயிற்று. "என்ன! நேற்றிரவு தூங்கச் செல்லும்பொழுது எல்லா பாத்திரங்களையும் எடுத்து அலமாரிக்குள்ளே வைத்துவிட்டுத்தானே அவள் படுத்துக்கொண்டாள். இந்தக் கிண்ணி இங்கு எப்படி வந்தது?" என்று சந்தேகங்கொண்டார். உடனே

எழுந்து அந்தக் கிண்ணியையெடுத்தார். பார்த்ததுதான் தாமதம். அவரது சந்தேகம் இன்னும் அதிகமாயிற்று. திரும்பியும் கிண்ணியைப் பார்த்தார். ராத்திரி நன்ருக அலம்பிவைத்த கிண்ணத்தில் நன்ருக வெந்த கொத்தவரக்காய், பாகல்காய், சுண்டைக்காய் இவையெல்லாம் இருக்கக் கண்டார். அதை உற்று, உற்றுப் பார்த்தார். ஒன்றுமே விளங்கவில்லே. 'மூன்று நாட்களாக உருளைக்கிழங்கு தவிர வெறெரு கரியும் வாங்கவில்லேயே. இவை எப்படி இங்கு வந்தன? ஏன் அலமாரி திறந்திருக்கிறது? சாவியும் இங்கேயே இருக்கிறது. என்ன ஒன்றுமே விளங்கவில்லேயே!' என்று பிரமித்தார். பிறகு கோடிக் கதவண்டை சென்ருர். அது திறந்திருப்பதைப் பார்த்தார். இவர் சந்தேகமெல்லாம் நிவர்த்தியாகிவிட்டது. 'சரி, ஏதோ திருட்டுப்பயல்,—நன்ற உளவறிஞ்ச பயல்தான்—எவனேவந்து இந்த வேடிக்கை (Mischef) எல்லாம் பண்ணிவிட்டுப் போயிருக்கவேண்டும். ஆகா! நம்முடைய மூடத்தனத்தை, உண்மையான மூடத்தனத்தை அறிந்த எவனேதான் இது செய்திருக்கவேண்டும்' என்று முடிவுக்கு வந்தார். அலமாரி முழுதும் பார்த்தார். எல்லா பாத்திரங்களும் அப்படியே இருந்தன. ஒன்றும் காணமற் போகவில்லே. 'சரி எவனே நமக்கு நம்முடைய மூடத்தனத்தைக் காண்பிக்கவேண்டும் என்றுதான் இதுமாதிரி இங்கே வீட்டுக்குள்ளே வந்து, ஒன்றும் எடுத்துக்கொண்டு போகாமல், தான வந்துவிட்டுச் சென்றதை எல்லோருக்கும் தெரிவிக்கும்பொருட்டு, இம்மாதிரி அலமாரியிலிருந்து கிண்ணத்தை எடுத்து அதில்தான் கொண்டுவந்தவைகளே அடையாளமாகப் போட்டுவிட்டுச் சென்றிருக்கிருன்; வேறென்றுமில்லே. ஆகா! அவன் பலே சூரனுக இருக்கவேண்டும்' என்று தனக்குள்ளேயே சொல்லிக்கொண்டார். மனேவியை எழுப்பலாமா என்று நினேத்தார். உடனே அவருடைய கர்வம் தலேதூக்கியது. 'என்ன? ஒரு பொம்மனட்டியை எழுப்பி, அவளேக் கேட்பதா? ஒரு டிடெக்டிவ் அதிலும் டீ. டீயா கேட்பது? அதுவுமல்லாமல் அவள் இதைப் பார்த்தவுடனே பயந்துவிடமாட்டாளா?'' என்று நினேத்தார்.

உடனே தன்னுடைய மின்சார விளக்கை எடுத்துக்கொண்டு வீடு முழுவதும் பார்த்துக்கொண்டே வந்தார். ஒன்றும் காணமற் போகவில்லே. எல்லாம் ராத்திரி படுக்கப் போகும்பொழுது எபபடி இருந்ததோ அப்படியே இருந்தன. இவருடைய எண்ணங்கள் ஊர்ஜிதப்படுத்தப்பட்டன. பிறகு கோடிக் கதவருகில் சென்று பார்த்தார். இவர் அங்கு என்ன செய்வது வழக்கம் என்ருல், தினந்தோறும் கதவிலிருந்து இரண்டு அடிவரையில் மணலேப் பரப்பிவிட்டு அதில் ராத்திரி படுக்கப்போகையில் ஜலம் கொட்டிவிட்டுப் படுப்பார். யாராவது திருடர்கள் வந்தால் அவர்கள் அந்த ஈர மணலே மிதித்து நடந்தால் காலடி தெரியும் என்பதுதான் அவரது முக்கிய எண்ணம். இன்று அதுமாதிரி காலடி ஏதாவது தெரிகிறதா என்று பார்த்தார். அது ஒன்றும் தெரியவில்லே. இவருடைய எண்ணங்கள் நன்ருக ஊர்ஜிதப்பட்டன. ஒன்றுமே தோன்றவில்லே.

மறுபடியும் கிண்ணத்தை எடுத்தார். அதனுள்ளிருக்கும் வஸ்துக்களேப் பார்த்தார். கொஞ்சம் சோற்றுப் பற்று ஒட்டிக்

கொண்டிருப்பதைக்கண்டார். 'என்ன இது'! ஏதோ குழம்பு சாதம் மாதிரி இருக்கிறதே! இத்தனை காய்கள் இருக்கின்றனவே!" என்று பார்த்தார்.

"எதற்கும் மனைவியைக் கேட்டுப் பார்ப்போம். இந்தக் கிண்ணி விஷயத்தை அவளிடம் தெரிவிக்கவேண்டாம். மிகவும் நயமாக (Nice) அவளை 'கதவு திறந்தாளா' என்று கேட்போம்" என்று தீர்மானித்தார். உடனே படுக்கையறைக்குச் சென்று மனைவியை மெள்ள எழுப்பி, "மதுரம்! நீ கோடிக் கதவைத் திறந்தாயா?" என்று கேட்டார். அவள் படுத்துக்கொண்டபடியே "நான் திறக்கவில்லையே! ஏன்! திறந்திருக்கிறதா என்ன?" என்று ஆவலுடன் கேட்டாள். உண்மையைச் சொன்னால் எங்கு அவள் பயப்படுவாளோ என்று "இல்லை, இல்லை. கதவின் மேல்தாழ்ப்பாள் மாத்திரம் திறந்திருந்தது. அதனால் கேட்டேன். கதவு மூடித் தானிருக்கிறது" என்று சொல்லிப் போய்விட்டார்.

மணி 5 அடித்தது. அவருக்கு ஒன்றுமே தெரியவில்லை. 'கதவைத்திறந்தாளா!' என்று கேட்டதற்கே அவள் பயந்துவிட்டாளே! இதைச்சொன்னால் அவள் இன்னும் பயப்படமாட்டாளா? என்ன! நம்முடைய உண்மையான மூடத்தனத்தை நமக்குக் கடவுள் காட்டுகின்றார்போலும்! எதற்கும் அவளைக்கேட்டுவிடுகிறேன்' என்று மறுபடியும் படுக்கை அறைக்குச் சென்றார். மதுரத்தை மெள்ள எழுப்பி, கிண்ணியில் சாமான்களிருப்பதை அவளுக்குத் தெரிவித்து, அவளுக்கு என்ன தோன்றுகிறது என்று கேட்டார்.

அதைக் கேட்டவுடன் மதுரம் கொல்லென்று சிரித்தாள்! தண்டத்தை முதுகில் தட்டினாள். தண்டத்திற்கு ஒன்றும் விளங்கவில்லை. கோபம் வந்தது. ஆத்திரத்துடன் 'ஏன் சிரிக்கிறாய்?' என்று கேட்டார். அவள் நகைத்துக்கொண்டே "இவ்வளவுதானா? உங்கள் ஞாபகம்? ராத்திரி 12 மணிக்கு உங்கள் ஸ்நேகிதர் நரசிம்மாச்சாரியார் 'கதம்பம்' என்று கோவிலிலே சொல்கிறார்களே, அதைக் கொண்டுவரவில்லையா! நீங்கள் நன்றாகத் தூங்கிக்கொண்டு இருந்தீர்கள். ஆனால் நான் உங்களை எழுப்பியபோது, படுத்துக்கொண்டே, வாயில் போடும்படிச் சொன்னீர்களே. நான்தான் போட்டேன். அதை மென்று சப்பிட்டது கூடவா உங்களுக்கு ஞாபகமில்லை? உங்களுக்கு வாயிலே போட்ட மீதியை நான் சாப்பிட்டுவிட்டு எனக்குப் பிடிக்காத சில காய்களை எல்லாம் அந்த கிண்ணியிலேயே போட்டுவிட்டு அலமாரியைப் பூட்டாமலே படுத்துக்கொண்டேன். ஆகா! என்ன! இவ்வளவுதானா உங்கள்...!" என்றாள். உடனே நமது தண்டத்திற்கு, தானே ஒருவேளை கதவைத் திறந்து விட்டுப் போடாமல் மறந்திருக்கலாம் என்று தோன்றிற்று.

"இவ்வளவுதானா நீங்கள் டிடெக்டிவாக..." என்று மறுபடியும் மதுரம் ஆரம்பித்தாள். அப்பொழுதுதான் தண்டத்திற்கு உண்மையாகவே தன்னுடைய மூடத்தனமும், கர்வமும் தெரிந்தன. தண்டத்தைபோன்ற துப்பறியும் நிபுணர்கள் இன்னும் எத்தனை பேர் இருக்கின்றனரோ!

ஸ்ரீமான். அ. மு. ஸ்ரீநிவாஸாசாரியர்

# குல விளக்கு

இவர் திருவல்லிக்கேணி ஸ்ரீபார்த்தஸாரதி ஸ்வாமி சன்னிதியில்மங்களாசாஸநபரராய் அநாதிகாலமாய் நித்யவாஸஞ் செய்து வாழ்ந்துவரும் குடும்பத்தைச் சேர்ந்தவர். இவர் பாட்டனர் ஸ்ரீ வை. மு. அப்பங்கார்ஸ்வாமி உபயவேதாந்த ப்ரவர்த்தகராயிருந்தும் ஷை ஸந்நிதியில் சாச்வதமாக கைங்கர்யங்களைச் செய்தும் சில சீர்த்திருத்தங்கள் செய்தும் வாழ்ந்துவந்தவர். இவருடைய மூத்த குமாரரே தமிழுலகம் அகஸ்த்யரென்றே போற்றும் ஸ்ரீ. வை. மு. சடகோபராமாநுஜாசாரியர்ஸ்வாமி- அவர் இளமையிலேயே அகஸ்த்யரிடம் ப்ரீதிபாராட்டி அவர் திக்கைநோக்கிச்சென்றுவிட்டார். அவர் தம்பி ஸ்ரீ. வை. மு. பார்த்தஸாரதி அய்யங்கார் என்பவர். இவரும் ஜ்ஞாநபாகத்தில் குறைந்தவரல்லர். ஆனால் வெகு ஏகாந்த சீலர். இவருடைய குமாரனே ஷை வை.மு.ஸ்ரீ. இவர் இக்காலத்து ரீதியில் எம். ஏ., பி. எல். இரண்டு பெரிய பரீக்ஷைகளில் தேறினவர். இவருக்கு உடன்பிறந்த ஒருவரும் இடையாது ஆகிலும் இவருடைய தாய்தந்தையர்கள் பெற்று வளர்த்துவந்த ஜகன்மோகினி என்கிற தமிழ் மாதப் பத்திரிகையை தனது உடன்பிறந்தாளாகவே பாவித்து அதைப் பலவகைகளில் கிளைத்து வாழும்படிச் செய்ததுடன் ஸாமாந்ய பத்திரிகையைப்போல் அல்லாமல் வைணவ ஸித்தாந்தத்துக்கு அந்தரங்கமான அனேகவிஷயங்களைச்சேர்த்து பலரும் ஆதரிக்கும் முறையில் விருத்திசெய்து வந்தார். இதற்கு பக்தனைத் துணையாக ஏற்படுத்தியது ஓர் விசித்ரமே இது இவருடைய எம். ஏ. பரீக்ஷை செய்ததின் பலமாக ஏற்பட்டது.மற்றொரு பிருதமாக பி.எல். என்பதற்குத் தகுந்தபடி ந்யாயஸ்தலங்களுக்குஉபயோகமாக சிலபுஸ்தகங்களை அச்சிட்டு வெளியிடும்படி சில நண்பர்களுடைய வேண்டுகோளுக்கிணங்கி அதையுபக்ரமித்துச் செய்துவந்து கொண்டிருந்தார். இதனுடன் இவருக்குண்டான ஆத்மகுணங்கள் இவருடன்பழகியவர்களுக்கேதான் தெரியும். வைஷ்ணவ ஸம்ப்ரதாயத்தில் இவருக்குக்குண்டான ஆழ்ந்த ஞானம் மிகவும்புகழத்தக்கது.

இப்படிக் குணக்கடலான இவர் தாய்தந்தையர்களை உபேக்ஷித்து ஆழ்வான்படியாகபரமபதமடைந்தது ஸ்ரீபராசர பட்டரை அநுசரிப்பதாகும். இந்த குணமுள்ள வஸ்துவை நாம் ஆசைப்பட்டும் கிடைக்காதது "ரத்நஹாரரீது பாரந்திவ:" என்கிற ந்யாயத்தாலே ஸர்வேச்வரன் கைக்கொண்டது காரணமாகவேதான். இவர் பிரிவைகாதாகித்கம் நேசித்து வந்த நம்போலிகளுக்கே அஸஹ்மாயிருக்கிறதே; பிள்ளையென்றும் அப்பாவென்றும் அன்பனென்றும் எண்ணி அனவரத ஸஹவாஸம் செய்துவந்தவர்களின் நிலையை என்னவென்று எண்ணக்கூடும்! மனம் ஸ்தப்தமாய்விடுகிறது! ஆகிலும் தைரியமேதான் சரணம் என்று நினைத்து ஒருவாறு ஆற்றுதல் செய்துகொள்வதே ப்ராப்தம்.

Sri V. S. Chinnaswami Iyengar

## THE FLOWER FADES BUT THE FRAGRANCE REMAINS

He was true both to himself and to others. He had perspicacity both in religion and law. Above all as an ally to both the above he wielded a facile pen both in Tamil and English. In short, he was a Viveki and a true gentleman according to Cardinal Newman. The flower is faded but the fragrance remains.

I have known Sri V. M. Parthasarathi Iyengar and his family for over eight years. I had abundent hopes that Sri. V. M. Srinivasan would fulfil his mission as an exponent of Visishtadwaitism and an authority of Law of Contracts. He was working behind the scenes. The end came all too sudden and cut him short in the prime of his life. No man can go beyond his knowledge and no thought can go beyond contemporary thought. Within these limitations the late Sri V. M. Srinivasan was an ardent Visishtadwaithist. Sriman P. B. Annangarachariar has been addressing him both in conversation and correspondence as his younger brother.

Equally so was the regard held by Sriman Karappangadu Venkatachariar, Thiruvali Ramanujachariar, and others.

---

Sri R. Vaidyanatha Iyer, B.A., M.L.

## A FAITHFUL COLLABORATOR

In the premature passing of V. M. Srinivasan, Tamilnad has lost a fine expositor of her religious and cultural heritage. He was in the vanguard of the latter-day literary renaissance in this part of the country. He was deeply imbued with the religious spirit and approached the study of the lives of the Alwars and the Saints and our religious works, in an attitude of deep reverence. His deep knowledge of Sanskrit literature combined with his advanced English education saw the efflorescense, in him and his work, of all that is best in the literatures of this ancient land. His contributions to the literature of religious upheaval are of a highly informative and lasting character. It was just a few months ago that he brought out a small book—with a foreward by the Hon'ble Mr. Justice W. S. Krishnaswami Naidu. I believe a second book of the same series was about to be published by him.

His knowledge of the Sthalapuranas of many of our religious shrines was deep and profound. Being a student of Indian History, he was able to collate historical facts and examine legendary stories and fit them into appropiate places. He combined in a remarkable degree the scientific attitude of enquiry with the reverential faith of the religious minded. The Tamil Aham has lost one of her sincerest votaries.

If one may strike a gersonal note, I have lost in him a sincere friend. a loyal assistant and a faithful collaborator. The wrench is something far more than words can ever convey and the feeling of desolation is simply undescribable.

குமாரி வை. மு. விஜயலக்ஷ்மி

# என்னருமைத் தந்தை

ஒவ்வொரு குடும்பத்திலும் பெரியோர்கள் மூலமும், பெற்றோர்கள் மூலமும் பல அரிய விஷயங்களையும் அனுபவ ஞானங்களையும் அடைந்து, நல்ல மார்க்கத்தில் விருத்திக்கு வருவது நம் பாரத புண்ய பூமியில் தொன்று தொட்டு வரும் வழக்கத்தில் ஒன்றாகும். நானோ, மிகச் சிறுமி. 'என்னருமைத் தந்தையோ' 'நாட்டுக்கு அரசனாயினும் வீட்டுக்குக் குழந்தை' என்ற பழமொழிபோல்,—38 வயது ஆயிருந்த போதிலும்—என் அன்பின் உருவங்களான தாத்தா, பாட்டிக்கு ஒரு சிறிய குழந்தைபோலவே காணப்பட்டார். அதைக் கண்டு நான் பல உயரிய பாடங்களைக் கற்றுக் கொண்டேன். அவைகளில் ஒன்றே ஒன்று இப்பொழுது தெரிவிக்கிறேன்.

பெற்றோர்களின் புத்திர வாத்ஸல்யத்தின் ஒரு எல்லை, பிள்ளைகளின் தாய் தந்தையரிடத்தில் செலுத்தும் ஒரு அபரிமிதமான பக்தி-அன்பு--நிகரில்லாத செல்வம்-பணிவு முதலியவைகளின் சங்கிலிபோன்ற பிணைப்பின் அத்பு தத்தை நான் நேருக்கு நேர், பிரதி தினமும் கண்டு, சில சமயம் சிரித்ததுகூட உண்டு. ஆனால், பூஜிக்கத்தக்க என் அன்னை (ஸ்ரீமதி பத்மினி ஸ்ரீநிவாஸன்) என்னை அன்போடு கண்டித்து "குழந்தைத்தனமாகச் சிரிக்காதே; உலகமே அன்புக்குக் கட்டுப்பட்டது; உன் தந்தை இவ்வளவு சிறந்த படிப்புப் படித்தும், பண்டிதர்களாலும் பாமரர்களாலும் கொண்டாடும்படியான மேதாவியாய் இருந்தும் அவர் சின்னஞ்சிறு குழந்தைபோல் தாயாரிடம் அளப்பரிய அன்பைக் கொட்டி அந்தக் கண்ணாடியில் தாயின் அன்பையும் பிரதிபிம்பம்போல் எடுத்துக் காட்டு கிறாரே, அதை நீ கற்றுகொள்ளவேணும். சிரிக்காதே!" என்று உபதேசிப்பது போல பொருத்திச் சொல்வார்.

பிப்ரவரி 5-ந்தேதி சூரியனுடைய நாளாக இருந்தும் எங்கள் வைத்தமாநிதி குடும்பத்திற்கே சூரியனாக இருந்த என் தந்தை மறைந்துவிட்டது அருணோதயம், சூர்யோதயம் ஒன்றுமே இல்லாமல் அஸ்தமனமேயாகி அந்தகாரத்தில் உலகமே மூழ்கிவிட்டது! சூரியனுக்கு உரிய நாளாகிய ஞாயிற்றுக் கிழமையிலேயே பிறந்தார்; ஞாயிற்றுக் கிழமையிலேயே மறைந்தார் என்று சொல்லி என் பாட்டி கதறும்போது, புத்திர வாத்ஸல்யத்தின் எல்லையற்ற ஒரு சக்தியைக் கண்டு நானும் சேர்ந்து கதறுகிறேன்.

(தொடரும்)

# அநுதாபச் செய்திகள்

உங்கள் துக்கத்துக்கு யார் என்ன சொல்லி சமாதானப் படுத்தமுடியும்? மருந்து ஒன்றே. அது உங்கள் பக்தியும் நிச்சய புத்தியும். பகவான் அமைதியும் ஆற்றலும் அருள்வாராக.

("ஸ்ரீ ராஜாஜி") இராஜகோபாலாச்சாரி.

அன்புள்ள கோதைநாயகி அம்மாளவர்களுக்கு

தங்களுடைய குமாரர் ஸ்ரீநிவாசனின் அகால மறைவைப் பற்றி பத்திரிகைகளில் படித்து மிகவும் வருத்தப்படுகிறேன். ஏக புத்திரனை இவ்விளைஞரின் மரணத்தால் தங்களுக்கு ஏற்பட்டுள்ள கஷ்டத்திற்கு எவ்விதத்தில் ஆறுதல் சொல்வது என்பது எனக்குத் தெரியவில்லை, வேதாந்தியான தங்களுக்கு நான் எடுத்துச் சொல்லவேண்டிய ஆறுதலெதுவும் கூட இல்லை. ஆயினும் தங்களுக்கு ஏற்பட்டுள்ள மாபெரும் சோகத்தில் என்னைப் போன்ற பல நண்பர்களுக்கும் ஒரு பங்கும் ஏற்பட்டுள்ளது. என் மனமார்ந்த வருத்தத்தை தங்களுக்கு தெரிவித்துக் கொள்வதுடன் குமாரனின் ஆத்மாவின் சாந்திக்கும் பிரார்த்தித்துக் கொள்கிறேன்.

இப்படிக்கு,

(மே. த. ஒரிஸா கவர்னர்) பி. எஸ். குமாரஸ்வாமி ராஜா.

அம்மையே,

இப்போதுதான் நீண்ட சுற்றுப் பிரயாணத்தினின்று வந்தேன். செய்தி கண்டேன். திடுக்கிட்டேன். ஸ்ரீநிவாசன் அறிவும், அன்பும், பெருமாள் பக்தியும், வைஷ்ண சிரத்தையும் கொண்ட கண்மணிப்பிள்ளை—கோதை வயிற்றிற் பிறந்த குண மாணிக்கம். நான் ஜகன்மோகினியுடன் பேனுத் தொடர்பு கொண்டிருந்த காலத்தில் அவனது அன்புக் கடிதங்கள் வாராவாரம் வந்து கொண்டிருந்தன. சென்ற இரண்டாண்டுகளாக அந்தத் தொடர்பு ஓய்வு கொண்டது. ஆனாலும் ஸ்ரீநிவாசனை நான் மறந்ததில்லை. தாயைப் போலச் சேயும் என் அன்பிற்கு உரியவர்கள். சென்ற ஆண்டு ஒரு கூட்டத்தில் அவனைப் பார்த்தேன். அவனது பித்தாசயத்தில் கோளாறு இருந்தது. அவனை இங்கே வந்து சிகிச்சை பெற அழைத்தேன். அதற்குள் எம்பெருமான் அவனை அழைத்துக் கொண்டான். இத்தகைய மணிப்பிள்ளைகள் அகால மரணம் அடைவது நாட்டின் துரதிட்டமே. ஒரே பிள்ளை—கோதைக் குலக்கொழுந்து—அதற்குள் உடல் கருகி வீழ்ந்தது மிகவும் விசனிக்கத் தக்கது. இது தாங்கமுடியாத் துயரம். என்றாலும் நாம் பகவத் கீதையைப் படித்து நடப்பவர்கள். சாவு என்பது சட்டை மாற்றமே. பழைய நோயுடல் வீழ்ந்தது. புதிய நல்லுடல் பெற்று, ஸ்ரீநிவாசன் அதே குலத்தில் பிறப்பான். நாமரூப பேதங்கடந்த ஜீவாத்மா என்றுமுள்ளது. மேகம் மறைந்தாலும் அதை ஆக்கும் கடலும் கதிரும் உள்ளன. இந்த அறிவை எண்ணி ஆறுதலடைவோம்.

(வடலூர்) சுத்தானந்த பாரதி.

என் அருமையான கோதை நாயகி, விஜயலக்ஷ்மி, நேற்று காலை கிராமத்துக்குப் போய்விட்டு இப்பத்தான் சுமார் 5 மணிக்கு திரும்பினேன்—சமாசாரம் கேள்விப் பட்டேன். அந்தோ, என் அப்பா, என்னால் நம்பவே முடியவில்லையே—பகவானுடைய இந்த மகத்தான சோதனை எல்லை மீறிப்போய் விட்டதே. மிருகண்டுவின் ஒரே புதல்வனைப் போல ஒப்பற்ற உயர்ந்த அறிவும் ஆற்றலும் பெற்ற தவப்புதல்வரை இழந்து, பெற்றோர்களும், மற்ற நீங்கள் யாவரும் எப்படித் துடிக்கிறீர்களோ, இந்த துக்கத்தை உங்களுக்கு ஏன்தான் அந்த ஸ்ரீநிவாசப் பெருமான் கொடுத்தாரோ? உருவத்துடன், ஸ்ரீநிவாசன் என்னும் பெயருடன் உங்களுடன் கொஞ்சிக் குலாவி உங்கள் அன்பையெல்லாம் கொள்ளை கொண்ட ஆத்மா அரூபியான எம்பெருமான் ஸ்ரீநிவாஸப் பெருமானுடன் கலந்துவிட்டாரோ—வேதாந்தமெல்லாம் வேணமட்டும் பேசலாம். ஆனால் அந்தந்த சமயத்தில் ஏற்படும் வயிற்று சங்கடமும் அறிவே மங்கி பயித்தியமே பிடித்துவிடும் போன்ற மனோ நிலையும் அனுபவித்தவர்களுக்குத்தான் தெரியும். உங்கள் யாவரையும் ஆற்றித் தேற்றுவது மனிதர்களால் முடியவே முடியாது. ஓடிவந்து உங்களைப் பார்க்கவேண்டும்போலிருந்தது. ஆனால் இன்று முழுவதும் எத்தனை பேர் உங்களிடம வந்து உங்களை சிரமப்படுத்தியிருப்பார்கள் என்பதை நினைத்தபோது உங்களிடம் வருவது இன்றைக்கு வேண்டாம் என்று தீர்மானித்தேன். அதைவிட இதோ, இங்கு பூஜை அறையில் பகவானுக்கெதிரில் உட்கார்ந்து இந்தத் தாங்கமுடியாத துக்கத்தைத் தாங்கும்படியான மனோதிடத்தை உங்கள் யாவருக்கும் அருளும்படி ஜபம் செய்யத் தீர்மானித்தேன். பிறப்பு இறப்பு, என்ன மர்மம். மனிதனுக்கு விளங்காத ஒரு புதிர். கடவுளுடைய லீலா விநோதங்கள், விளையாட்டுக்கள்—நினைக்க நினைக்க எனக்கே தாங்கவில்லை. நீங்கள் யாவரும் துடித்துக்கொண்டிருப்பீர்கள்.

உங்கள் துக்கத்தில் பங்கு கொண்டு உங்களுக்காகப் பகவானிடத்தில் பிரார்த்திக்கும்,

உங்கள் சகோதரி,

(மயிலை) R. S. சுபலக்ஷ்மி.

ஸ்ரீமதி கோதைநாயகி அம்மாள் அவர்களுக்கு நமஸ்காரம்.

தங்கள் புதல்வர் காலமானது கேட்டு வருந்துகிறேன். அகால மரணம். பால குடும்பம். புத்திர சோகம் நிரந்தரம் என்பார்கள். எல்லாவற்றிலும் அடிபணிந்து மனதை திடப்படுத்திக்கொண்டு குழந்தைகளை கவனிக்கும் கடமையிருக்கிறது. அது செவ்வனே நடைபெறுவதற்கேனும் பார்த்தசாரதியின் அருள் கிடைக்கட்டும்.

(" தினமணி ") ஏ. ஜி. வேங்கடாச்சாரி.

ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாள் அவர்களின் புதல்வர் ஸ்ரீ வை. மு. ஸ்ரீநிவாசன் மரணத்தை 7-2-'56 'தினமணி'யில்

பார்த்து நாங்களும், எங்கள் அங்கத்தினர்களும் மிகவும் துக்கத்தில் ஆழ்ந்தோம்.

அன்னாரின் குடும்பத்திற்கு எங்கள் அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

Young Men's Cultural Association, காரியதரிசி.
Nagapattinam.

பேரன்புடைய அன்னை வை. மு. கோ. அவர்கள் திருவடித் தாமரைகளில் அநேக நமஸ்காரஞ் செய்து எழுதும் லிகிதம்.

எனக்கு ஒன்றுமே எழுதத் தோன்றவில்லை. தங்களுக்கு எவ்விதம் ஆறுதல் கூறுவதென்பதே எனக்குத் தோன்றவில்லை. 7ந்தேதி வெளியூர் தினமணி பத்திரிகையை அன்று காலை பார்த்ததுமே, என் நெஞ்சில் வேதனை பெருக்கெடுத்தோடியது.

முதிய வயதில் தங்களுக்கு இவ்விதமான புத்திர சோகம் ஏற்பட்டதற்கு என்னால் தாளவே முடியவில்லை. என்ன எழுதுவதென்பதே தோன்றவில்லை. கடவுள் ஏன் நல்லவர்களை இவ்விதம் சோதிக்கிறார் என்பதே தெரியவில்லை.

நாம் தூரத்தில்தான் இருக்கிறோம். ஆயினும் தங்கள் துயரத்தில் என் ஹிருதயமும் பங்கெடுத்துக் கொண்டிருக்கிறது. வேறே நான் என்ன சொல்லமுடியும்? தங்கள் துக்கம் ஆற்றொணாதது. அநுதாபத்தை நேரில்கூட என்னால் உரைக்கமுடியாமல் இருக்கிறதே என்பதுதான், என்னை மிகவும் வாட்டுகிறது. எவ்வளவு பெரியவர்களாக இருந்தாலும் எவ்வளவு நல்லவர்களாக இருந்தாலும் கடவுளின் சோதனைக்கு எல்லோரும் இலக்காகவேண்டியதுதான் போலும்.

சகோதரி பத்மினியின் துயரத்தை ஆற்றுவதற்கும் தங்களது புத்திரசோகத்தை ஆற்றுவதற்கும் காலம்தான் துணை செய்யவேண்டும். மனித யத்தனத்தில் ஒன்றுமேயில்லையன்றோ. சகல சௌபாக்யங்களும் பொருந்தி முதிய வயதில் ஒளி வீசிக்கொண்டிருந்த தங்களது முகாரவிந்தம் இன்று... அதை நினைக்கவே நெஞ்சே வெந்துருகுகிறது.

தாங்களுக்கு அநுதாப வார்த்தைகள் கூற எனக்கு வார்த்தைகளே கிடைக்கவில்லை, அம்மா! கூற்றுவன் இரக்கமற்றவனே!

இங்ஙனம் தங்கள் பிரியமுள்ள
(திருச்சி) T. C. K. மல்லிகைசுந்தரம்.

அன்பான ஸகோதரிக்கு,

இன்று வெளியான பத்திரிகையில் உங்களுடைய அருமை குமாரன் அகாலமரணமான செய்தியைப் பார்த்து மிகவும் துக்கமடைந்தோம். கொஞ்சம்கூட எதிர்பாராத விஷயமாகையால் மனம் நம்பவே முடியவில்லை.

எப்படிப்பட்டவர்களுக்கும் புத்ரசோகம் ரொம்ப கொடியது. அதிலும் உங்களுடைய ஒரே செல்வமான புத்திரனை கொடுத்து விட்டு நீங்கள் எவ்விதம் தாங்கப் போகிறீர்களோ! இவ்வளவு

கடுமையான துக்கத்தை கடவுள் தான் அதை தாங்கும் சக்தியையும் உங்கள் இருவருக்கும் கொடுக்கவேண்டும்.

பத்மினியை நினைத்தால் மிகவும் பரிதாபமாக இருக்கிறது. பச்சைக் குழந்தைகளையும் அவளையும் பகவான் ரொம்ப சோதித்து விட்டார்.

தெய்வதுக்கும், பாபத்துக்கும் பயந்து நடக்கும் உங்களுக்கு இந்த கஷ்டம் வந்தது அக்ரமம். எனக்கு ஒன்றுமே எழுதத் தெரியவில்லை.

எங்கள் இருவருடைய அனுதாபங்களை பத்மினிக்கும் சொல்லவும்.

உங்கள் அன்பான,

(மாயூரம்) இந்திரா.

இன்று காலையில் 'இந்து' பேபரில் உங்களுடைய அருமை புத்திரன் காலம் சென்றுவிட்டதாக படிக்க அதிர்ச்சியடைந்தேன். எம்பெருமான் திருவுள்ளம் இப்படியும் இருந்திருக்கிறது. உங்களுக்குமுங்கள் கண்ணீருக்கும் எம்பெருமான்தான் மனத்திடத்தைக் கொடுத்து இந்த பெரும் கஷ்டத்தை சகிக்க ஆற்றல் அளிக்கவேணும். அவர் சிறுவயதிலேயே உங்களுடன் பத்திரிகை தொழிலில் இறங்கி அரிய விஷயங்களை வெகு எளிதாக எடுத்துரைக்கும் ஆற்றலைப்பெற்று வெகுஅழகாக எழுதிவந்தார். இந்த கஷ்டம் உங்கட்கு அல்லாமல் நம் மக்களுக்கே நஷ்டமாகவே கருதுகிறேன். நீங்கள் மனத் தேர்ச்சி பெற்று அவருடைய மனைவி மக்களுக்கும் தேறுதல் சொல்லவேணும். என்னுடையவும் என் குடும்பத்தாருடைய அநுதாபத்தை உங்கள் குடும்பத்தாருக்கு தெரியப்படுத்திக் கொள்கிறேன். சாந்தி. சாந்தி.

(கோயம்பத்தூர்) சி. ஆர். ராமஸ்வாமி.

ஸ்ரீமதி ஸ்ரீ கோதைநாயகி மாமியவர்களுக்கு: இன்றையதினம் ஜானகியிடமிருந்து கடிதம் வந்தது. அதைப் பார்த்தவுடன் எங்களுக்கெல்லாம் சொல்லமுடியாத துயரத்தை உண்டாக்கியது. இந்த ஸமாச்சாரத்தை கேட்டவுடன், என்ன எழுதவேணுமென்றே தோன்றவில்லை. நான் உடனே புறப்பட்டு வரவேணுமென்று இருந்தேன். ஆனால் வீட்டில் சில அஸௌகர்யத்தால் வரமுடியாமல் போயிற்று. பத்மினியை நினைத்தால், ரொம்ப வருத்தமாயிருக்கிறது. ராதா இதைக் கேட்டதும் ரொம்ப அழ ஆரம்பித்துவிட்டிருக்கிறுன். உம்முடைய நல்ல குணத்துக்கும், பத்மினியுடைய நல்ல குணத்துக்கும் இந்தமாதிரியான கஷ்டம் வரக்கூடாது. சரிப்படுத்த முடியாத ஒரு பெரிய நஷ்டம் வந்துவிட்டது. இதற்கு என்ன ஆறுதல் சொல்லவேணுமென்றே தோனறவில்லை. இதைத் தாங்க உங்களுக்கெல்லாம் சக்தி கொடுக்கவேணுமெனறு நான் பிரார்த்திக்கிறேன். பத்மினிக்கும் நீர்தான் தைரியம் செல்லவேணும்,

(சங்கரபுரம்) ரங்கநாயகியம்மாள்.

என் அன்புள்ள பெரியம்மாவிற்கு அடியாள் ராதா அனேக தண்டம் சமர்ப்பித்த விண்ணப்பம். அப்பாவின் கடிதத்தைப் பார்த்து எங்களால் நம்பவே முடியவில்லை. நீங்கள் எப்படி

இந்த அதிர்ச்சியைத் தாங்கப் போகிறீர்கள்? மதனி எப்படி இருப்பார்? பெரியப்பாவின் இந்த வயதில் இப்படி வரவேண்டுமா? அவருக்கு என்ன உடம்பிற்கு வந்தது? எனக்கு என்ன எழுதுவது என்றே தெரியவில்லை. உங்கள் அன்புள்ள,

(பம்பாய்) ராதா.

அன்பார்ந்த ஸ்ரீமதி கோதைநாயகி அம்மாள் அவர்களுக்கு,

தங்கள் அருமைக் குமாரர் மறைவு குறித்த துக்கச் செய்தியை பத்திரிகையில் பார்த்து திடுக்குற்றேன். சிறு வயது, அகால மரணம், புத்திர சோகம். இந்த மகத்தான துக்கத்தைத் தாங்கக் கடவுள் உங்களுக்குச் சக்தி யளிக்கட்டுமெனப் பிரார்த்திக்கிறேன். என் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

State Welfare Advisory Board, அன்புடன்,
Trichi. சகோதரி தஞ்சம்.

உ. வே. ப்ர. அண்ணங்கராசாரியர் ஸ்வாமி
"பக்தன்" ஆசிரியருக்கு எழுதியது

ஸ்ரீநிவாஸனுடைய பிரிவை அவனுடைய தாய்தந்தையர் சகிக்கிறார்கள்; என்னால் சகிக்கமுடியவில்லை. அவனைப் பற்றி நான் என்ன எழுதுவது? சந்தோஷமாக எழுத வேண்டியயதை சங்கடத்துடன் எழுதமுடியுமா?....உண்மையில் எனக்கு புத்தி ஸ்வாதீனமாக இல்லை. என்ன எழுதப் போகிறேன்; முயன்று பார்க்கிறேன்.

Pandit Sri M. C. Krishnaswamy Iyengar M.A., Retired Superintendent, Govt. Secretariat, Sriramapuram, Bangalore 3, in a letter to Sri M. O. Alasingara Chari, B.Sc., B.L., Editor, Bhakthan, Triplicane, writes :—

I heard the sad news of the demise of that bright youngster, Sri V. M. Srinivasan, Printer, Contributor and greater helper in public affairs, the son of Srimathi Kodai Nayaki Ammal, to whom the shock must have been too great to bear. Your right hand man is gone to a place from which there is no return. I was taken aback by the news and tears flowed from my eyes profusely when I began to write this card to you to whom the departed soul was your right hand as it were and everythig to ease much of your labours. Such is the hand of destiny which works so suddenly; people vanishing before our eyes and are seen no more, but leave reminiscences of their worth and doings (bad or good); that the "good is oft interred with their bones" as an English poet says— We always have to remember the good parts only in any man.

---

குறிப்பு:—

இடமும், அவகாசமும் இன்மையால் மற்றுமுள்ள அநுதாபச் செய்திகளையும் கடிதங்களையும் அடுத்தஇதழில் வெளியிடுகிறோம்.

வை. மு. விஜயலக்ஷ்மி

183200

## எங்களது நன்றி

இந்த சந்தர்ப்பத்தில் ஸ்ரீ யோகி சுத்தானந்த பாரதியார், பாரத நாட்டின் தவப்புதல்வரான ராஜாஜி, ஒரிஸ்ஸா கவர்னர் ஸ்ரீ P. S. குமாரஸ்வாமி ராஜா, இன்னும் பல அறிஞர்கள், சகோதர சகோதரிகள் மனமுருகி ஆறுதல் மொழிகளுடன், அனுதாபக் கடிதங்களும், தந்திகளும், அனுப்பியதானது கார் இருளில் ஒரு மின்னல் தோன்றியதுபோல் இருக்கிறது. இவைகளை என் குடும்பத்தினருக்கு நானே படித்துக் காட்டினேன். இத்தனை பேர்களுடைய ஆறுதல் மொழிகளினால் ஒரு சிறிது சாந்தி உண்டாக்கிய அனைவருக்கும்—நேரிலே வந்து பார்த்து ஆறுதல் கூறிய நூற்றுக்கணக்கான அன்பர்களுக்கும், என் தாத்தா, பாட்டி தாயார், உடன்பிறந்தோர் முதலியவர்களின் சார்பில் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த இதழில் என் தந்தையைப்பற்றி எழுதியுள்ள பெரியோர்கள் அனைவருக்கும் எனது நன்றியுடன் கூடிய நமஸ்காரம்.

ஸ்ரீ கீதாசாரியன் தான் எங்கள் எல்லோருக்கும் பூர்ண சாந்தியைக் கொடுக்க வேண்டுமாய்ப் பிரார்த்திக்கிறேன்.

ஜகன்மோகினி

—வை. மு. விஜயலக்ஷ்மி


**ஜகன்மோகினி காரியாலயம்,**
26 தேரடித் தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை–5.

**வை. மு. கோ. நாவல்கள்**

4–8
வைதேகி (2 பாகம்)
ரூ. 4.
சாந்தியின் சிகரம்
ரூ. 3.
நிர்மல நீரோடை
ரூ. 2–8
அமுதமொழி (கிளேஸ்)
மலர்ந்த இதழ்
ரூ 2–4
ஞானதீபம்
ரூ. 2.
சந்தோஷ மலர்
கருணாலயம்
வாத்ஸல்யம்
அமுதமொழி (சாதா
தெய்விக ஒளி
ஜீவநாடி
பாதாஞ்சளி
புனிதபவனம்
குணக் குன்று

ரூ. 1–12
அனாதைப்பெண்
புகழ்மாலை
கலாநிலயம்
சிலாசாசனம்
பிராங்கனை
அமைதியின்
அஸ்திவாரம்
கடமையின் எல்லை
ரூ. 1–8
பிரதிபலன்
பவித்திரப்பதுமை
ஓவியப் பரிசு
காலக்கண்ணாடி
ஜெயபேரிகை
நம்பிக்கைபபாலம
சுதந்திரப் பறவை
ரூ. 1–4
கோபால ரத்னம்
க்ருபாமந்திர்
புதுமைக்கோயில்

ரூ. 1–2
படகோட்டி
அபராதி
ரூ. 1.
வத்ஸகுமார்
ப்ரார்த்தனை
பிரதிக்ஞை
பெண் தர்மம்
உண்மைச் சித்திரம்
மனத்தாமரை
தபால் விநோதம்
இனிய முரசு
ஆண்டவனின் அருள்
இந்திரமோஹனா
அணா.12
பக்ஷமாலிகா
ப்ரேமாச்ரமம்
நியாயமழை
அருணோதயம்
மனச்சாட்சி
குலதனம்
கருணை உள்ளம்
சந்திரகலாமாலை
அணா 8.
உருத்த இதயம்
கான கலா
தூய உள்ளம்
ஸௌபாக்யவதி

ப்ரபஞ்சலீலை
வெற்றிப்பரிசு
ரோஜா மலர்
தைரியலக்ஷ்மி

**வை. மு. ஸ்ரீ.**
உதய சூர்யன் 1–4
பெண்மணிக்கனல் 1–0
இருளில் ஒளி 1–4
தியாகபலி 0–12
ஜயந்திசிந்தனைகள் 1–8

**வை. மு. பத்மினி**
பாலர் மோகினி
12 சிறு கதைகள் 1–0

**சுத்தானந்த பாரதி**
காந்தி கீர்த்தனம் 3–8

**ப்ர. ப. அண்ணங்கராசார்ய ஸ்வாமி**
ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ர நாமம 1–0
அபூர்வ ராமாயணம் 1–8



JAGANMOHINI, owned and edited by V. M. KOTHAINAYAKI AMMAL is printed & published by V. M. PARTHASARATHY at the JaganMohini Press, 26, Car St, Triplicane, Madras 5.

Jaganmohini (March 1956) Regd. No. M. 2210



# ஸ்ரீகோதா ஹ்ருதயம்

வை. மு. ஸ்ரீ.

கடைசி நூல் அணா 12